# பாரதியார் பல்கலைக்கழகம்
## கோயம்புத்தூர்- 641 046.

### இளங்கலை-அறிவியல் முதலாண்டு பட்டப்படிப்பில் , தமிழ் பயில்வோர்க்குரியது

(அனைத்து இளநிலைப் (UG) பட்டவகுப்பு மாணவர்க்குரியது)

(B.A.,B.Sc.,B.Com.,B.B.M.,B.C.S.,etc.)

# செய்யுள் திரட்டு

2011-2012 ஆம் கல்வியாண்டு முதல் சேர்வோர்க்குரியது

முதல் பருவம்

பகுதி I தமிழ்

## *அறிமுகம்*

மாணவர் தம் அறிவாற்றலை வளர்த்தல், சமுதாயப் பங்களிப்பிற்கு அவர்களை ஊக்குவித்தல், ஆளுமைப் பண்புகளை உருவாக்குதல் ஆகியவை பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவின் உயர்கல்வி கொள்கைகள் ஆகும். மொழிப்பாடங்களின் வாயிலாக மாணவர் தம் படைப்பாக்கத் திறன்களை ஊக்குவித்துப் பயிற்சி தருதல், தமிழ்மொழியின் வாயிலாக பண்பாடு, பகுத்தறிவு, கலை மற்றும் மரபு முதலியவற்றை அறிந்து பயன்பெறுதல் வாழ்க்கையின் மதிப்புகளை உணர்தல், உலகளாவிய நோக்கில் ஒற்றுமை உணர்வினை மாணவர்களிடையே உருவாக்குவதல் போன்ற எண்ணற்றக் குறிக்கோள்களின்அடிப்படையில் இந்தப் பாடத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

முதற் பருவத்தில், நாட்டுப்பற்று, சமூகம், பெண்ணியம் குறித்த விழுமியங்கள் சார்ந்த கவிதைகளும், கருத்துப் பரிமாற்றத்திறனுக்கு அடிப்படையாக உள்ள இலக்கணப் பகுதியும், பயிற்சிப் பகுதியும், தன் சுய சிந்தனையுடன் படைப்பாக்கச் சிந்தனைத் திறனை வளர்த்தெடுக்கும் வகையில் சிறுகதைப் பகுதியும், காலவோட்டத்துடன் இணைந்து சிந்திக்கும் ஆற்றலைப் பெறும் வகையில் இலக்கிய வரலாற்றுப் பகுதியும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

இரண்டாம் பருவத்தில், மானுடச் சிறப்பியலை (Human Excellence) மையப்படுத்தி, அதன் புரிதிறனை மேம்படுத்தும் வகையில் செய்யுட் பகுதிகளும் உரைநடைக் கட்டுரைகளும் தொகுக்கப்பட்டுள்ளன. இந்நூலை மாணவர்கள் கருத்தூன்றிக் கற்றுப் பயன்பெறுவார்களாக.

தற்கால மாணவர் நிலையைக் கருத்தில் கொண்டு பாடத்திட்டத்தை மாற்றியமைக்க வேண்டும். கருத்துப் பரிமாற்றத் திறனுக்கும் மானுடச் சிறப்பிற்கும் முதன்மையிடம் அளிக்க வேண்டும் என்று மிகுந்த ஆர்வத்துடன் ஊக்கப்படுத்தியும், அதற்கான செயற்பாட்டுப் பொறுப்பை ஏற்றும் பல்லாற்றானும் உதவிய மேன்மைமிகு துணைவேந்தர் அவர்களுக்கும், பாடத்திட்டக்குழுக் கூட்டத்திற்கும் மற்ற பணிகளுக்கும் அன்புடன் துணை நின்ற மதிப்பிற்குரிய பதிவாளர் அவர்களுக்கும் பாடத்திட்டக் குழுவினரின் நன்றி உரியது.

**பாடத்திட்டக் குழுவினர்**

# பாரதியார் பல்கலைக்கழகம்

## கோயம்புத்தூர்-641046.

## பாடத்திட்டம் பகுதி I - தமிழ்

(2011-2012 ஆம் கல்வியாண்டில் முதல்பருவத்தில் சேர்வோர்க்குரியது)

## பகுதி I- தமிழ் தாள் -1

முதற்பருவம் (செய்யுள், சிறுகதை, இலக்கியவரலாறு, இலக்கணம், மொழிபெயர்ப்பு)

1. செய்யுள் : செய்யுள் திரட்டு - பல்கலைக்கழக வெளியீடு ஜுன் 2010
2. சிறுகதை : அண்ணா முதல் அம்பை வரை தொகுப்பு (பாடத்திட்டக் குழுவினர்)

**<u>அலகு-1 நாட்டுப்பற்று</u>**

| | | |
|---|---|---|
| 1. | முரசு | - பாரதியார் |
| 2. | எங்கள் நாடு | -பாரதியார் |
| 3. | அட வெட்கக்கேடு | -புவியரசு |
| 4. | பாரதகீதம் | -யோகி சுத்தானந்த பாரதியார் |
| 5. | பெரியார் பிறவாதிருந்தால் | -புலவர் குழந்தை |
| 6. | எல்லாம் நானே | - கண்ணதாசன் |
| 7. | காகிதப்பூக்கள் | -நா.காமராசன் |
| 8. | மரங்கள் | - மு.மேத்தா |

**<u>அலகு-2 பெண்ணியம்</u>**

| | | |
|---|---|---|
| 9. | தொட்டிச்செடி | -இளம்பிறை |
| 10. | நீரில் அலையும் முகம் | - அ.வெண்ணிலா |
| 11. | அம்மா | - சுகிர்தராணி |

**<u>அலகு -3</u>** சிறுகதை : அண்ணா முதல் அம்பை வரை தொகுப்பு

## அலகு-4 இலக்கணம்

பெயர், வினை, இடை, உரிச்சொற்களின் பொது இலக்கணம், ஒற்றுமிகும் இடங்கள்- ஒற்று மிகா இடங்கள்

## அலகு-5 இலக்கிய வரலாறு : (பாடத்திட்டத்தைத் தழுவியது)

1) தமிழ்க்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும் (மரபுக் கவிதை புதுக்கவிதை)
2) தமிழ்ச் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்

## பயிற்சிக்குரியன:

அலுவலகப்பகுதி, பொதுப்பகுதி ஆங்கிலத்தில் கொடுத்து, தமிழில் மொழிபெயர்க்கச்செய்தல் (ஆங்கிலத்திலிருந்து தமிழ்) இலக்கிய வரலாறு - கட்டுரைகள் எழுதச் செய்தல்

## பொருளடக்கம்

# செய்யுள்

## நாட்டுப்பற்று

1. எங்கள் நாடு - பாரதியார்
2. முரசு - பாரதியார்
3. பாரத கீதம் - யோகி சுத்தானந்த பாரதியார்
4. அட வெட்கக் கேடு - புவியரசு

## சமூகம்

5. பெரியார் பிறவாதிருந்தால் - புலவர் குழந்தை
6. எல்லாம் நானே - கண்ணதாசன்
7. காகிதப்பூக்கள் - நா.காமராசன்
8. மரங்கள் - மு.மேத்தா

## பெண்ணியம்

9. தொட்டிச்செடி - இளம்பிறை
10. நீரில் அலையும் முகம் - அ.வெண்ணிலா
11. அம்மா - சுகிர்தராணி

# பாரதியார் பல்கலைக்கழகம் - கோவை
## பகுதி 1 - தமிழ்

**தமிழ் தாள் -1**

வினாத்தாள் அமைப்பு - முதற் பருவத்திற்குரியது.

நேரம் -3மணி மதிப்பெண் :75

**பிரிவு-அ :** சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக
ஒரு சொல்/ தொடரில் விடை எழுதுக. 10x1=10
ஒவ்வொரு அலகிலிருந்தும் இரண்டு வினாக்கள்

**பிரிவு-ஆ :** இரண்டு பக்க அளவில் விடை எழுதுக. 5x5=25
செய்யுள் - 2 வினாக்கள்
சிறுகதை - 1 வினா
இலக்கணம் - 2 வினாக்கள்

**பிரிவு-இ :** கட்டுரை வடிவில் விடை எழுதுக. 5x8=40
செய்யுள் - 2 வினாக்கள்
சிறுகதை - 1 வினா
இலக்கிய வரலாறு -1 வினா
பயிற்சிக்குரியன - 1 வினா

**குறிப்பு :** ஆ,இ பிரிவுகளில் வினாக்கள் "இது" அல்லது "அது" என்ற வகையில் அவற்றிற்கு உரிய அலகுகளில் அமைதல் வேண்டும்.

# நாட்டுப்பற்று

## பாரதியார்

சி.சுப்பிரமணிய பாரதி 1882-இல் பிறந்தார். 1893-ஆம் ஆண்டு "பாரதி" பட்டம் பெற்றார். பாரதி தமிழ்ப் பற்றும், தேசப்பற்றும், சீர்திருத்த வேகமும், பெண்மைக்கு முதன்மையும், எளிமையும், இனிமையும் கொண்டு இருபதாம் நூற்றாண்டுக் கவிதைப் பரம்பரையை உருவாக்கியர். இவருக்குப் பின்னர் தமிழ்க் கவிதையின் உள்ளடக்கம் புத்தாக்கம் பெற்றது.

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானினும் நனிசிறந்தவை எனத் தேசபக்திக்கு முதல் வரிசை அளித்து மகிழ்ந்தவர்.

## எங்கள் நாடு

1. மன்னும் இமய மலையெங்கள் மலையே
மாநில மீதிது போற்பிறி திலையே!
இன்னறு நீர்க்கங்கை யாறெங்கள் யாறே
இங்கிதன் மாண்பிற் கெதிரெது வேறே !
பன்னரும் உபநிடத நூலெங்கள் நூலே
பார்மிசை யேதொரு நூல்இது போலே!
பொன்னொளிர் பாரத நாடெங்கள் நாடே
போற்றுவோம் இஃதை எமக்கிலை ஈடே.

2. மாரத வீரர் மலிந்த நன்னாடு
மாமுனி வோர்பலர் வாழ்ந்த பொன்னாடு
நாரத கான நலந்திகழ் நாடு
நல்லன யாவையும் நாடுறு நாடு
பூரண ஞானம் பொலிந்த நன்னாடு
புத்தர் பிரானருள் பொங்கிய நாடு
பாரத நாடு பழம்பெரு நாடே
பாடுவம் இஃதை எமக்கிலை ஈடே

3. இன்னல்வந் துற்றிடும் போததற் கஞ்சோம்
ஏழைய ராகி இனி மண்ணில் துஞ்சோம்
தன்னலம் பேணி இழிதொழில் புரியோம்
தாய்த்திரு நாடெனில் இனிக்கையை விரியோம்
கன்னலும் தேனும் கனியும்இன் பாலும்
கதலியும் செந்நெலும் நல்கும் எக்காலும்
உன்னத ஆரிய நாடெங்கள் நாடே
ஓதுவம் இஃதை எமக்கிலை ஈடே.

## முரசு

1) ஊருக்கு நல்லது சொல்வேன் -எனக்
குண்மை தெரிந்தது சொல்வேன்
சீருக் கெல்லாம் முதலாகும் - ஒரு
தெய்வம் துணை செய்ய வேண்டும்

2) ஒற்றைக் குடும்பந் தனிலே - பொருள்
ஓங்க வளர்ப்பவன் தந்தை

மற்றைக் கருமங்கள் செய்தே -மனை
வாழ்ந்திடச் செய்பவள் அன்னை

3) ஏவல்கள் செய்பவர் மக்கள் - இவர்
யாவரும் ஓர்குலம் அன்றோ
மேவி அனைவரும் ஒன்றாய் -நல்ல
வீடு நடத்துதல் கண்டோம்

4) சாதிப் பிரிவுகள் சொல்லி - அதில்
தாழ்வென்றும் மேலென்றும் கொள்வார்
நீதிப் பிரிவுகள் செய்வார்-அங்கு
நித்தமும் சண்டைகள் செய்வார்

5) சாதிக் கொடுமைகள் வேண்டாம் அன்பு
தன்னில் செழித்திடும் வையம்
ஆதர வுற்றிங்கு வாழ்வோம் - தொழில்
ஆயிரம் மாண்புறச் செய்வோம்.

6) பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக் குள்ளேசில மூடர் - நல்ல
மாத ரறிவைக் கெடுத்தார்

7) கண்கள் இரண்டினில் ஒன்றைக் -குத்திக்
காட்சி கெடுத்திட லாமோ
பெண்க ளறிவை வளர்த்தால் -வையம்
பேதைமை யற்றிடுங் காணீர்

8) தெய்வம் பலபல சொல்லிப் -பகைத்
தீயை வளர்ப்பவர் மூடர்
உய்வ தனைத்திலும் ஒன்றாய் - எங்கும்
ஓர்பொரு ளானது தெய்வம்

9) தீயினைக் கும்பிடும் பார்ப்பார்-நித்தம்
திக்கை வணங்கிடும் துருக்கர்
கோயிற் சிலுவையின் முன்னே-நின்று
கும்பிடும் யேசு மதத்தார்.

10) யாரும் பணிந்திடும் தெய்வம் -பொருள்
யாவினும் நின்றிடும் தெய்வம்
பாருக்குள்ளே தெய்வம் ஒன்று -இதில்
பற்பல சண்டைகள் வேண்டாம்.

11) வெள்ளை நிறத்தொரு பூனை -எங்கள்
வீட்டில் வளருது கண்டீர்
பிள்ளைகள் பெற்றதப் பூனை-அவை
பேருக் கொருநிற மாகும்.

12) சாம்பல் நிறமொரு குட்டி-கருஞ்
சாந்து நிறமொரு குட்டி
பாம்பு நிறமொரு குட்டி-வெள்ளைப்
பாலின் நிறமொரு குட்டி

13) எந்த நிறமிருந் தாலும் -அவை
யாவும் ஒரேதர மன்றோ
இந்த நிறம்சிறி தென்றும்-இஃது
ஏற்ற மென்றும் சொல்ல லாமோ.

14) வண்ணங்கள் வேற்றுமைப்பட்டால்-அதில்
மானுடர் வேற்றுமை யில்லை
எண்ணங்கள் செய்கைக ளெல்லாம்-இங்கு
யாவர்க்கும் ஒன்றெனல் காணீர்.

15) நிகரென்று கொட்டுமுரசே இந்த
நீணிலம் வாழ்பவரெல்லாம்
தகரென்று கொட்டுமுரசே-பொய்மைச்
சாதி வகுப்பினை யெல்லாம்.

16) அன்பென்று கொட்டுமுரசே-அதில்
ஆக்கமுண் டாமென்று கொட்டு
துன்பங்கள் யாவுமே போகும்-பெருஞ்
சூதுப் பிரிவுகள் போனால்

17) அன்பென்று கொட்டு முரசே-மக்கள்
அத்தனை பேரும் நிகராம்
இன்பங்கள் யாவுமே பெருகும் -இங்கு
யாவரும் ஒன்றென்று கொண்டால்

18) உடன்பிறந் தார்களைப் போல -இவ்
வுலகில் மனிதரெல் லாரும்
இடம்பெரி துண்டுவை யத்தில் - இதில்
ஏதுக்குச் சண்டைகள் செய்வீர்!

19) மரத்தினை நட்டவன் தண்ணீர் -நன்கு
வார்த்தே ஓங்கிடச் செய்வான்
சிரத்தை யுடையது தெய்வம்-இங்குச்
சேர்ந்தே உணவெல்லை யில்லை

20) வயிற்றுக்குச் சோறுண்டு கண்டீர் -இங்கு
வாழும் மனிதரெல் லோர்க்கும்
பயிற்றி உழுதுண்டு வாழ்வீர்-பிறர்
பங்கைத் திருடுதல் வேண்டாம்

# *யோகி சுத்தானந்த பாரதி*

விடுதலை எழுச்சிக் காலத்திலிருந்தே கவிதைகளையும் இசைப் பாடல்களையும் எழுதி தமிழுக்குப் பெருமை சேர்ந்தவர். இவரது பாடல்களால் நாட்டுணர்வும், இறையுணர்வும் முக்கிய இடம் வகிக்கிறது. பாரதசக்தி மகா காவியம் என்னும் நூல் படிப்போர் நெஞ்சை அள்ளும் திறன் கொண்டது.

## *பாரத கீதம்*

### 1. எந்தாய் வாழ்க

எந்தாய் வாழ்க எனும் மந்திர நாதமே
இன்பத்தை ஊட்டுதம்மா-எங்கள்
இந்தியப் பாசுரத் தென்றல்வந் திதயத்தின்
தந்தியை மீட்டு தம்மா

அன்னை இயற்கையின் புன்னகை அழகிலே
அமுதம் சுரக்கு தம்மா-அவள்
வன்ன மலைநதி வனங்களில் ஆனந்த
ஞானம் பிறக்கு தம்மா

தென்மொழி வடமொழித் தேனமு துண்டதும்
சித்தம் சிலிர்க்கு தம்மா-மிக
உன்னதக் கவிகளின் சன்னத வாக்கில்எம்
உள்ளம் தவழுதம்மா

சாதி மதநிற பேதமில் லாதொரு
சமரசங் காணுதம்மா
ஆதவன் கதிர்கள்போல் ஆன்ம ஒருமையில்
ஆருயிர் சேருதம்மா

### *2. புண்ணிய பூமி*

புண்ணிய பூமிஎங்கள் பாரதமே
புலோக சுவர்க்கமெங்கள் பாரதமே
எண்ணிய தெல்லாம் அளிக்கும் பாரதமே-எம்
இதயத் துடிப்பாகும் பாரதமே.

தருமமிகுங் குடியரசெந் தாய்நாடு
தமிழ்வாணி சாற்றிடுமெந் தாய்நாடு
கருமவீரர் தொண்டிசைக்குந் தாய்நாடு
கருணையிலே கனிந்தபழஞ் சோலையிதே.

வாழும்வகை வாழுமெங்கள்-வளநாடு
வானரசை நாட்டுமெங்கள் வளநாடு
சூழுலகின் கோயிலெங்கள் வளநாடு
சுதந்திரமாய்த் தலைநிமிர்ந்த தாய்நாடு
முல்லைமணத் தென்றலிலே வான்மருவி

மூவர்ணக் கொடிபறக்கும் பாரதமே
நல்லநல்ல புலமைவளர் கலைவனமே
ஞானசக்தி நிலையமெங்கள் பாரதமே!

## ***3. வீரச் சிதம்பரம்***

வீரச் சிதரம்பரம் பிள்ளை -அவன்
விடுதலை விடுதலை விடுதலை என்றே
தீரமுடன் பணி செய்தான்-சிறை
சென்றவன் செக்கும் இழுத்தான்-கவி

பாரதி பாட்டுரு வானான்-சய
பாலகங்காதர திலகன் வலக்கை
நீராவிக் கப்பல் விடுத்தான்-தலை
நிமிர்ந்து நடக்கும் நிகரற்ற சிங்கம் . . . .
எங்கள் சிதம்பரம் என்னில்-வீரம்
ஏறுது நெஞ்சினில் சோருது துன்பம்
பொங்குதோர் ஆவேச வெள்ளம்-பரி
பூரணமான சுதந்திர வாழ்வுக்கு
வங்கம் அழைக்குது நம்மை-அதில்
வாழி சிதரம்பரம் என்றிசைந்தாடும்
தங்கக் கொடி தோன்று தையே-தமிழ்
தந்த சிதரம்பம் சந்ததம் வாழ்கவே . . . .

# சமூகம்

## ***கவிஞர். புவியரசு***

கவிஞர் புவியரசு கோவையைச் சேர்ந்தவர். வானம்பாடிக் காலகட்டக் கவிஞர். மரபுக் கவிதையிலிருந்து புதுக்கவிதைக்கு வந்தவர். மார்க்சியச் சிந்தனையாளர். “இதுதான்”, “மீறல்”, “ஒரு முக்கிய அறிவிப்பு” “புல்லாங்குழல்”, “கையொப்பம்” முதலான கவிதைத் தொகுப்புகளையும் எண்ணற்ற மொழிபெயர்ப்பு நூல்களையும் தமிழுக்குத் தந்துள்ளார். நடுத்தரவர்க்க வாழ்வியலை, அடித்தட்டு மக்கள் மீதான அக்கறையை. சமூக அவலங்களுக்குக் கவிஞர் காட்டும் சீற்றத்தை இக்கவிதையில் காணலாம்.

### ***அட வெட்கக் கேடே!***

யார் வயிற்றுத் தீயில்
என் வீட்டுச் சோறு கொதிக்கிறது?
நான் மூன்று வேளையும்
கொட்டிக் கொள்வது
யாருடைய பாவத்தை?
எப்படிச் செரிக்கிறது எனக்கு?
எவனெல்லாம் குளிர் காய்கிறான்

அந்தத் தீயில்
அவர்களை யெல்லாம்
ஏன் சுடுவதில்லை
எந்தத் தீயும்?

பூக்கள் மலர்ந்தென்ன
தென்றல் தவழ்ந்தென்ன
வானம் பொழிந்தென்ன
வளங்கள் விளைந்தென்ன

எரியாத அடுப்புகளின் தீ
எரிகிறது எரிகிறது
எவரெவர் வீடுகளிலோ

நாட்டுத் தலைவர்கள்
வெளிநாடுகள் பறந்து
ஒப்பந்தம் போடுகிறார்கள்...
பல்லாயிரம் கோடி

சுருட்டியவர்களும் தாதாக்களும்
தொலைக் காட்சிக்கு
சிரித்தபடி முகம் காட்டுகிறார்கள்
அன்னிய நாட்டு முதலீடு

மலை மலையாய்க் குவிகிறது
மாநகர்களில்
வசதி படைத்தவர்கள்
புகைப்பட அலைபேசியில்

இரகசியம்
பேசிக்கொண்டே இருக்கிறார்கள்...
கோயில்களில் நடைபெறுகின்றன
உற்சவங்கள் அமோகமாக
தேவாலய மணிகள்
முழங்கிக்கொண்டே இருக்கின்றன

பள்ளி வாசல்களில்
ஐந்து வேளைத் தொழுகை
தவறாமல் நடக்கிறது
இராணிப்பேட்டை சலீமா
நீ இன்னும்
உயிருடன்தான் இருக்கிறாயா மகளே
பீடி சுற்றிக்கொண்டு
உன் தாயுடன்?
நான் இங்கே
கவிதை எழுதிக் கொண்டிருக்கிறேன்
வெட்கக்கேடு!

## ***புலவர் குழந்தை***

பெரியார் மாவட்டத்து மூலவலசு என்னும் ஊரில் 01.07.1906-இல் பிறந்தவர். தனிநிலையில் படித்து சென்னைப் பல்கலைக்கழகப் புலவர் பட்டம் பெற்று நாற்பதாண்டுக் காலம் தமிழாசிரியராகப் பணிபுரிந்தார். இவர் தமிழ்ப் பற்றும் தமிழர் பற்றும் தமிழ் நாட்டுப் பற்றும் மிக்கவர். நுண்மான் நுழைபுலம் மிக்கவர். இவர் இயற்றிய இராவண காவியம் இவர் புகழை மேம்படுத்தும் காவியமாகும்.

## ***பெரியார் பிறவாதிருந்தால்***

1. பேடைக் குயிலின் மொழியேநம்
பெரியார் பிறவா திருந்திருந்தால்
மூடப் பழக்க வழக்கமெனும்
முரட்டுக் களிறு முதுகிட்டே
ஆடிக் காற்றின் அலர்பூளை
யாமென் றோடத் தமிழ் மக்கள்
கூடிக் குலவிப் புதுவாழ்வு
கூடி யுவத்தல் கூடுங்கொல்?

2. பேதை தணிக்கப் பெயர்ந்தோய்நம்
பெரியார் பிறவா திருந்திருந்தால்
சாதி சமயப் படுகுழியில்
தள்ளப்பட்டுத் தமிழ் மக்கள்
யாது செய்கம் எனவெண்ணா
அயர்ந்தாங் கிருந்த அந்நிலையில்
மீது போத வழிகண்டு
வெளிப்போந் திருந்தல் கூடுங்கொல்?

3. பிறைநேர் நுதல்மான் பிணையேநம்
பெரியார் பிறவா திருந்திருந்தால்
செறிசீ வடிய முடைநாறும்
தீண்டா மையெனும் அக்கொடுநோய்
அறைவீ ழருவிக் கரையே போல்
அலமந் தொழியத் தமிழ்மக்கள்
குறையா தகன்ற மரமேபோல்
நலமுற் றிருத்தல் கூடுங்கொல்?
பிடி மென்னடையின் கொடியே நம்
பெரியார் பிறவா திருந்திருந்தால்

4. உடைமை யிழந்து நகரின்ப
உரிமை யிழந்து மீளாத
அடிமை யெனும்பாழுஞ் சிறைப்பட்டே
அயரா நின்ற பெண்ணுலகக்
கொடுமை தவிர்ந்து புதுவாழ்வு
கூடி யுவத்தல் கூடுங்கொல்?

5. பெண்ணா ரணங்குப் பிழம்பேநம்
பெரியார் பிறவா திருந்திருந்தால்
மண்ணா மணியா ஒளிவீசி
வையம் புகழ வாழ்ந்திட்ட

அண்ணா வைப்பெற் றிருப்போமோ
ஆவ லோடு தமிழரெலாம்
எண்ணா நின்ற தமிழாட்சி
எய்தி யிருத்தல் கூடுங்கொல்!

## ***கவியரசு கண்ணதாசன்***

இந்த நூற்றாண்டின் தலைசிறந்த கவிஞர்களில் ஒருவர். 24.06.1927-இல் சிவகங்கை மாவட்டத்திலுள்ள சிறுகூடல் பட்டியில் பிறந்தார். மாங்கனி, ஆட்டனத்தி ஆதிமந்தி, தைப்பாவை, அர்த்தமுள்ள இந்துமதம், இயேசு காவியம் ஆகிய படைப்புகள் இவர்தம் புகழை என்றும் பரப்புவனவாகும். உலகளாவிய புகழ்பெற்ற இக்கவிஞர் 17.10.1981 இல் அமெரிக்காவில் அமைதியடைந்தார்.

### ***எல்லாம் நானே!***

எல்லாம் நானே என்பவர் வாழ்க்கை
கல்லாய் மணலாய்க் கனலாய் அழியும்!
புயலாய்ப் புழுவாய்ப் பூமியில் இருப்பினும்
கல்லாத வரும் கனிவுடன் நடந்தால்
நல்லோர் மதிக்க நயம்பட வாழ்வர்!
வல்லோன் நானென வாய்ச்சொல் லடித்து
எல்லோர் வாழ்விலும் இழிவினைப் பரப்பும்
பொல்லா மனிதர் புகழ்கெட்டு மடிவர்!
வெற்றியோ தோல்வியோ விதிப்படி வரட்டும்
உற்றவை எவையென உணர்ந்துகொண் டாடுவோம்
மற்றவை இறைவன் வகுத்தஅவ் விதமே!
கற்றவை குறைவே: கல்லா தனவே
மற்றுஇப் பூமியின் பரப்பள வாகும்!
நாணல் போலவே நாணிப் பணிந்து
தேவைப்பட்டால் தென்னைபோ லிருந்து
மக்கள் மத்தியில் மயில்போ லாடி
குழந்தைக களிடையே குயில்போல் பாடி
கோட்டா னாகிக் குரங்கா காமல்
வாழும் மனிதரை வையகம் போற்றும்!
எந்த நேரமும் எகிறிக் குதிப்போர்
சொந்த அறிவு துணைக்கு வராமல்
மந்த அறிவால் மந்தைகளாவார்!
வாழ்வில் எத்தனை மண்ணிடைக் கண்டேன்
வாழ்ந்து தாழ்ந்தோர் வரலாறு படித்தேன்
தாழ்ந்து வாழ்ந்தோர் சரித்திரம் பார்த்தேன்
ஏறும் போதே இறங்கிய சிலபேர்
ஏறாம லேயே இறந்தவர் சிலபேர்
ஏறிய இடத்தை இறுகப் பிடித்து
இறங்கா மலேயே இருந்தவர் சிலபேர்
எத்தனை குதிரைகள்? எத்தனை வண்டிகள்?

எத்தனை யானைகள்? எத்தனை பூனைகள்?
இத்தனை பார்த்தவன் இன்னும் பார்க்கிறேன்!
மமதை என்பது மறையவே இல்லை
ஆணவம் என்பது அழியவே இல்லை
ஆணவம் ஒன்றே ஆணுக்கு அவமென
காணும் போதே கனிவுறும் வாழ்க்கை!
சுத்த வீரனாம் தோல்வியைத் தழுவினான்
கோழை என்றார்கள் குன்றத்தில் ஏறினான்!
அவரவர் திறமையா அடிப்படைக் காரணம்?
அங்கே ஒருவன் ஆட்டுவான் ஒன்றை
இங்கே நாமெல்லாம் இயங்கு கின்றோமோ!

## ***நா.காமராசன்***

கறுப்பு மலர்கள் கவிதை தொகுதி மூலம் தமிழக் கவிதை உலகில் அறிமுகமானவர். நா.க.வின் புல் கவிதை பிரசித்தமானது. தாஜ்மகாலும் ரொட்டித்துண்டுகளும், சகாராவைத் தாண்டாத ஒட்டகங்கள், மலையும் ஜீவ நதிகளும், ஆப்பிள் கனவு, காட்டுக்குறத்தி போன்றவை இவரது பிற கவிதைத் தொகுப்புகளாகும்.

## ***காகிதப் பூக்கள்***

**(அலிகளைப் பற்றிய கவிதை)**

காலமழைத் தூறலிலே
களையாய்ப் பிறப்பெடுத்தோம்
தாய்ப் பாலின் சரித்திரத்தில்
சதுராடும் புதிரானோம்.
விதைவளர்த்த முள்ளானோம்
விளக்கின் இருளானோம்
சதைவளர்க்கும் பிணம்நாங்கள்
சாவின் சிரிப்புகள்
மூங்கையொரு பாட்டிசைக்க
முடவனதை எழுதிவைக்க
முடவன்கை எழுதியதை
முழுக்குருடர் படித்ததுண்டோ?
மூங்கையனின் பாட்டானோம்
முடவன் கை எழுத்தானோம்
முழுக்குருடர் படிக்கின்றார்
சந்திப் பிழை போன்ற
சந்ததிப் பிழை நாங்கள்!
காலத்தின் பேரேட்டைக்
கடவுள் திருத்தட்டும்!
தலைமீது பூவைப்போம்
தாரணியோர் கல்லறையில்
பூவைத்தல் முறைதானே?
பூத்தஉயிர் கல்லறைகள் நாங்கள்!
தாய்ப்பெண்ணோ முல்லைப்பூ

தனி மலடி தாழம் பூ
வாய்ப்பந்தல் போடுகின்ற நாங்கள்
காகிதப் பூக்கள்!

## *மு.மேத்தா*

மு.மேத்தா புதுக்கவிதை, வரலாற்று நாவல், எனப் பலதுறைகளிலும் புகழ் பெற்றவர். வானம்பாடி இயக்கத்தில் முன்னணியில் இருந்து சாதனைகள் புரிந்தவர். பாவேந்தர் விருது போன்ற பல இலக்கியப் பரிசுகள் பெற்றவர். திரைப்படத் துறையிலும் ஈடுபாடு கொண்டவர். இங்குப் பாடப் பகுதியாக வரும் கவிதை "கண்ணீர்ப்பூக்கள்" எனும் கவிதைத் தொகுப்பில் இடம் பெற்றுள்ளது.

## *மரங்கள்*

மானுட ஆண்மைக்கு
மண் கொடுத்த சீதனங்கள்
மரங்கள்!

நாங்கள் -
சிறகுத் துடுப்புகள்
செலுத்திக் செல்கிற
படகுப் பறவைகளின்
பயணியர் விடுதிகள்!

எந்தப் பறவைக்கும்
இருக்க இடங்கொடுக்கும்
பொதுவுடமை வீடுகள்!
அதனால்தான் . . ..
தராதரம் அறியாத
தான்தோன்றிப் பறவைகள்
எங்கள் தலைமீதே
எச்சமிட்டுச் செல்கின்றன.

நாங்கள் -
சூடு படுகின்ற
சொந்தக்காரர்களுக்காக
விரித்தே வைத்திருக்கும்
வெண்கொற்றக் குடைகள்!

மழைக்கு ஒதுங்கும்
மர நிலையங்கள்.
சரியாகப் போடாத
சல்லடைப் பந்தல்கள்
பாத சாரிகளின்
பணிமனைக் கூடங்கள்!

மனிதர்கள்
வாங்கி வைக்காத
மண்ணின் விசிறிகள்!

மானுடர் கரங்களில்
அகப்பட்டுக் கொண்ட
மண்ணின் கைதிகள். . . .

அதனால்தான்
ஊருக்கு வெளியே
உட்கார்ந்திருந்தாலும்
எங்கள்
மார்பிலும் தோளிலும்
எண்களை எழுதி
மாட்டிவைக்கிறார்கள்.

நாங்கள்
காற்று மன்னவன்
கால்நடை யாத்திரையைக்
கண்டு முரசறையும்
கட்டியங்காரர்கள்!

தரையில் நடக்கப்
பிரியப்படாத போது
காற்று எங்கள்
தலைகளின் மீதே
நடந்து செல்கிறது !

இரவுக் காற்றின்
ஈர உதடுகளோடு
உறவு கொள்கிறோம் . . .
உலராத எச்சிலைப்
பனித்துளி யாக்கிப்
பரிசளிக்கின்றோம்.

தென்றலின் பார்வையில்
செல்லப் பிள்ளைகள்:
நாங்கள்
புயலின் கண்களில்
புரட்சிக் காரர்கள் !

சட்டையை மாற்றும்
சாரைப் பாம்புகளுடன்
சண்டையிட்டுக் கொண்டோம்
ஆதலால்
காலந்தோறும்
ஒரே உடையை
உடுத்தியிருக்கிறோம் !

காலத்துக்குக் காலம்
எங்கள் உடை
கனமாகி வருகிறது

எங்கள் உடுக்கையை
யாரேனும்
கழற்றவோ
மாற்றவோ வந்தால்
தடுக்க முடியாமல்
கண்ணீர் வடிக்கிறோம்!

வெட்டி யெடுத்தால்
விறகாவோம். . .. வெய்யிலிலே
சுட்டு எடுத்தாலும்
சுறுசுறுப்பாய் அடுப்பெரிப்போம்!

நாங்கள்
கல்லில் எறிந்தாலும்
கம்பில் அடித்தாலும்
பரிசு கொடுக்கின்ற
பண்பின் வார்ப்புகள்!

வானத்தில் நடக்கும்
நட்சத்திர இரவு
விளையாட்டு மேடையில்
தவறி விழுவதைத்
தாங்கிப் பிடிப்பதற்காக
மண்ணில் கட்டிய
வலை விரிப்புகள்!

மனிதர்கள்
தூங்கிய பிறகும்
வானத்தில் விளக்கெரிவது
மரங்களுக்காவே!

# பெண்ணியம்

## ***இளம்பிறை***

இயற்பெயர் ச.பஞ்சவர்ணம். தமிழ் இலக்கியம் பயின்ற இவர் தற்சமயம் ஆசிரியையாகப் பணியாற்றி வருகிறார்.

திருப்பூர்தமிழ்ச்சங்கவிருது, யாளிஅறக்கட்டளைவிருது, கவிஞர்கள் தின விருதுகளைப் பெற்றவர்.

சிறு பத்திரிகைகளிலும் தொலைக்காட்சிகளிலும் எழுதியும் பேசியும் வரும் இவரின் கவிதைகள் தனித்துவம் மிக்கவை.

## ***தொட்டிச் செடி***

வேண்டும் கண்மணியே
உன்னுள் நீயே
ஊற்றி ஊற்றித்
துளிர்க்க வைத்துக்கொள்ளும்
காயங்களும் அனுபவங்களும்
போ. . . .
நகர வீதிகளில்
இடறலில் கிளுக்கும்
குளிர்பான மூடிகளையேனும்
டப்பாக்களில் அடைத்துக்
குலுக்கிக் கொண்டிரு
கள்ளிப் பழம் தேடி
அருகம்புல்லில் முள் உரசி
உண்டு மகிழ்வதில்
உள்நாக்குவரை சிவக்கும்
அனுபவம் இல்லாது
செய்துவிட்டேன் உனக்கு
தேக்கின் கொழுந்து தேய்ந்த
உள்ளங்கைக் சிவப்பை
சூரியனுக்குக் காட்டவிடாமல்
கூட்டி வந்துவிட்டேன்.
பட்டு வண்ண இறகுகள் பொறுக்கி
அதே வண்ணத்தில்
பண்டிகைக்கு
உடைகேட்டமும் உன்னை
அதட்டியபடி பெருமிதம் கொள்ளும்
வாய்ப்பிழந்தேன்
நாணல் கயிறு திரித்து
நத்தாங்கூடு சலங்கை கட்டி
பூவரசமரம்
பூவுதிர்த்துக் கைதட்டும்
நாட்டிய அரங்கத்தைக்
கெடுத்ததும் நானே
"ஆட்டோ" வில்
ஸ்கூல் போய்
அபார்ட்மெண்ட் டப்பாக்களில்
அடைபட்டு
சன்னல் கம்பிகளுக்கிடையே
மண்ணில் வேரூன்றா
தொட்டிச் செடியைத்
தொட்டு நிற்கும்
தொட்டிச் செடியோ நீ . . . ?

# அ.வெண்ணிலா

திருவண்ணாமலை மாவட்டம் வந்தவாசியில் 1971-இல் பிறந்தார். 2000-ஆம் ஆண்டு முதல் கவிதைத் தொகுதி "நீரில் அலையும் முகம்" வெளிவந்தது. அந்நூலுக்கு அந்த ஆண்டுக்கான சிற்பி அறக்கட்டளை தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம், கவிதை உறவு, தேவமகள், லயன்ஸ் கிளப், ரோட்டரி கிளப் ஆகிய அமைப்புகளில் விருதுகள் கிடைத்தன். 2003-ஆம் ஆண்டு "ஆதியில் சொற்கள் இருந்தன" எனும் இரண்டாவது கவிதை நூல் வெளிவந்தது.

இவரது படைப்புகள் இந்தி, மலையாளம் மற்றும் ஆங்கில மொழிகளில் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன.

## "நீரில் அலையும் முகம்"

நின்றால்
உட்காரச் சொல்கிறது
உட்கார்ந்தால்
வயிறு மடிந்து
சாயச் சொல்கிறது

சாய்ந்து கொள்ள நினைக்கையில்
காணாமல் போகிறது உன் தோள்

நின்றும் உட்கார்ந்தும் சாய்ந்தும்
சரிபடாத தருணங்களை
நடக்கத் தேர்ந்தெடுக்கிறேன்.

எடுத்து வைத்தது எட்டடியாகக்கூட இருக்காது
நெற்றியில் வியர்வை
ஒற்றி எடுக்க எங்கே உன் உதடுகள்

யாரோடோ பேச நினைக்கையில்
உள்ளுக்குள்
காலால் உதைத்து தன்னோடு
பேச அழைக்கிறது குழந்தை
தடவிக் கொடுக்க எங்கே உன் கைகள்

எப்படி கழியும் விநாடிகள்
வேதனையில் இதயம் வெறுமை சுமக்க
"உர்"ருனு உட்காராதே என
அறிவுரை கூறுபவையா உன் வார்த்தைகள்
சாப்பிடும் சோறு
பேசும் பேச்சு
சிரிக்கும் சிரிப்பு
எல்லாம் குழந்தைக்காக என
கரு சுமந்து
நாளை
உன்னோடு வண்டியில்

முன்நின்று சிரித்து வர
உன் இனிஷியல் போட்டுக் கொள்ள
உனக்குப் பிள்ளை பெற்றுத் தருவேன்
நான்கைந்து மணி நேரம்
ரத்த வெள்ளத்தில் மிதந்து

கேட்டால் கிடைக்குந்தான்
உன் முத்தம்
உன் அரவணைப்பு
உன் ஆறுதல்

பச்சப்புள்ள கேட்டா
பாலூட்டுகிறோம்.

கரு சுமந்து
குழந்தைத் தவம் இருக்கும் பெண்ணை
சுமக்க
எந்த ஆணுக்கு உள்ளது கருப்பை!

## சுகிர்தராணி

பிறப்பு : 1973. தமிழில் எம்.ஏ., எம்.பில்., பட்டங்களையம் கல்வியியலில் டி.ட்டி.எட்., பட்டயமும் பி.எட்., பட்டமும் பெற்றவர். வேலூர் மாவட்டம் அம்மூர் அரசு மேல் நிலைப் பள்ளியில் ஆசிரியராகப் பணிபுரிகிறார். இவரது கவிதைத் தொகுப்புக்கள்: ‘கைப்பற்றி என் கனவு கேள்’ (2002), ‘இரவு மிருகம்’ (2004), ‘அவளை மொழி பெயர்த்தல்’ (2006).

## அம்மா

உயிர்மை ததும்பும் என் குரலால்
உன்னை அழைக்கின்றேன்
கொய்தமலரைப் போல் மகிழ்ந்திருந்த
உன் கன்னங்கள் சுருக்கமுற
பாதுகாக்கப்பட்ட வனத்தின் இசையாய்
மௌனம் காக்கிறாய்
இரத்தப் பிசுபிசுப்போடு துடித்து விழுந்த
என் முதல் கவிதையை
உன் காலடியில் இடுகின்றேன்
வெடிப்புற்றுக் குருதி வழியும்
உன் பாதங்களை உலர்ந்த
என் மயிரால் துடைத்த பின்னும்
உள்ளிழுத்துக் கொள்கிறாய்

எனக்குத் தெரியும்
நான் நசுக்கிப் போட்ட
உள்ளார்ந்த உன் கனவுகளை
நீ தேநீர் தயாரிப்பதும்
பதார்த்தங்களை ருசி பார்ப்பதும் போல
எழுதுவதும் வேலையாயிருக்கிறது
உடலில் ஒட்டிய மகரந்தங்களைத்
தட்டிவிட்டுப் போகும் யதார்த்தத்தோடு
மலைகள் சூழ்ந்த கிராமத்தையும்
உன்னையும் விட்டுப் போகிறேன்
எங்கோ உன் சாயலான பறவை
பெருங் குரலெடுத்து அழுகிறது.

# பாரதியார் பல்கலைக்கழகம்

**கோயம்புத்தூர் - 641 046**

# அண்ணா முதல் அம்பை வரை

## (தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதைகள்)

இளங்கலை அறிவியல் பட்டப்படிப்பில் முதலாண்டு, தமிழ்
பயில்வோருக்குரியது
(அனைத்து இளநிலைப் (UG) பட்ட வகுப்பு மாணவர்க்குரியது)
(B.A., B.Sc., B.Com., B.B.M., B.C.S., etc..)

## சிறுகதைத் திரட்டு

2011 - 2012 ஆம் கல்வியாண்டு முதல் சேர்வோர்க்குரியது
முதல் பருவம்
பகுதி I தமிழ்

# அறிமுகவுரை

இலக்கியப் படைப்பு என்பது உணர்வுப் பூர்வமான உள்ளத்தின் வெளிப்பாடு எனலாம். படைப்பாளரின் பகுப்பு உள்ளம், அனுபவங்கள், அக, புற வாழ்க்கையில் ஏற்படும் தாக்கங்கள் ஆகியவை படைப்புகளில் வெளிப்படும். படைப்பாளியால் படைக்கப்படும் பாத்திரப் படைப்புகள் அவர் தம் வாழ்க்கையில் கண்டு வந்தவைகள். படைப்புகளில் காணப்பெறும் மகிழ்ச்சி, துக்கம், இயலாமை, முதலான உணர்வுகள் படைப்புகளில் தவிர்க்க முடியாதவைகளாகும். அந்த வகையில் ஒரு மொழியின் இலக்கிய வகைமையில் நாள்தோறும் புதிய புதிய சிந்தனைகளோடு கூடிய படைப்புகள் தோன்றிய வண்ணம் உள்ளன. இலக்கியத்தில் ஒருவகை சிறுகதை என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய இந்தக் கதைகள் சமுதாயத்தின் பல்வேறு நிகழ்வுகளை எடுத்துக்காட்டி வருங்காலச் செழிப்பை எடுத்துக் கூறுவதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. மாணவப் பருவத்தில் இத்தகைய கருத்துகளை உள்வாங்கிக்கொண்டு உருவானால் எதிர்காலச் சமுதாயம் ஏற்றமுற அமையுமென நம்புவோமாக.

பாடத்திட்டக்குழுவினர்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| செவ்வாழை | - அறிஞர் அண்ணா | 24-27 |
| | | |
| நினைவுப்பாதை | - புதுமைப்பித்தன் | 28-30 |
| | | |
| கதவு | - கி. ராஜநாராயணன் | 31-34 |
| | | |
| உயிரின் நிறம் | - திலகவதி | 35-39 |
| | | |
| விடியுமா? | கு.ப.ராஜகோபாலன் | 40-45 |
| | | |
| மிருகம் | வண்ண நிலவன் | 46-48 |
| | | |
| கிணற்றுத் தண்ணீரும் ஆற்று மீனும் | வண்ணதாசன் | 49-50 |
| | | |
| மருந்து | எம்.வி.வெங்கட்ராம் | 51-54 |
| | | |
| வல்லூறுகள் | - அம்பை | 55-58 |

**அறிஞர் அண்ணா**

சிறுகதையை இலக்கியத் துறையிலிருந்து பிரித்தெடுத்து ஒரு சமுதாய விமர்சனக் கருவியாகப் பயன்படுத்தியவர். இவரது அனைத்துக் கதைகளிலும் எள்ளல் அங்கதத் தொகைகள் இருக்கும். செவ்வாழை இவரது சிறந்த கதையாகும். இவரை மணிக்கொடியின் அடுத்த காலத்தில் சிறுகதையை வளர்க்க உதவியவர்களில் ஒருவராகக் கருதலாம்.

# செவ்வாழை

செங்கோடன், அந்தச் செவ்வாழைக் கன்றைத் தன்செல்லப்பிள்ளை போல் வளர்த்து வந்தான். இருட்டுகிற நேரம் வீடு திரும்பினாலும் கூட, வயலிலே அவன்பட்ட கஷ்டத்தைக் கூடப் பொருட்படுத்தாமல், கொல்லைப்புறம் சென்று, செவ்வாழைக் கன்றைப் பார்த்துவிட்டு, தண்ணீர் போதுமானபடி பாய்ச்சப்பட்டு இருக்கிறதா? என்று கவனித்துவிட்டுத்தான், தன் நான்கு குழந்தைகளிடமும் பேசுவான். அவ்வளவு பிரேமையுடன் அந்தச் செவ்வாழையை அவன் வளர்த்து வந்தான். கன்று வளர வளர அவன் களிப்பும் வளர்ந்தது. செவ்வாழைக்கு நீர் பாய்ச்சும் போதும், கல் மண்ணைக் கிளறி விடும்போதும், அவன் கண்கள் பூரிப்படையும் மகிழ்ச்சியால். கரியனிடம் அவனுடைய முதல் பையன் - காட்டியதைவிட அதிகமான அன்பும். அக்கறையும் காட்டுகிறாரே, என்று ஆச்சரியம், சற்றுப்பொறாமை கூட ஏற்பட்டது, குப்பிக்கு.

"குப்பி! ஏதாச்சும் மாடு கீடுவந்து வாழையை மிதிச்சுவிடப்போகுது. ஜாக்கிரதையாக் கவனிச்சுக்கோ. அருமையான கன்று - ஆமாம், செவ்வாழைன்னா சாமான்யமில்லே. குலை எம்மாம் பெரிசா இருக்கும் தெரியுமோ? பழம், வீச்சுவீச்சாவும் இருக்கும், உருண்டையாகவும் இருக்கும் ரொம்ப ருசி - பழத்தைக் கண்ணாலே பார்த்தாக்கூடப் போதும், பசியாறிப் போகும்" என்று குப்பியிடம், பெருமையாகப் பேசுவான், செங்கோடன்.

அப்பா சொல்லுவதை நாலு பிள்ளைகளும் ஆமோதிப்பார்கள் - அதுமட்டுமா - பக்கத்துக்குடிசை, எதிர்க் குடிசைகளிலே உள்ள குழந்தைகளிடமெல்லாம், இதே பெருமையைத்தான் பேசிக் கொள்வார்கள். உழவர் வீட்டுப் பிள்ளைகள், வேறே எதைப்பற்றிப் பேசிக்கொள்ளமுடியும் - அப்பா வாங்கிய புதிய மோட்டாரைப்பற்றியா, அம்மாவின் வைரத்தோடு பற்றியா, அண்ணன் வாங்கி வந்த ரேடியோவைப் பற்றியா, எதைப்பற்றிப் பேசமுடியும்? செவ்வாழைக் கன்று தான், அவர்களுக்கு, மோட்டார், ரேடியோ, வைரமாலை, சகலமும்!

மூத்த பயல், கரியன், செவ்வாழைக்குலை தள்ளியதும், ஒரு சீப்புப்பழம் எனக்குத்தான் - என்று சொல்லுவான்.

"ஒண்ணுகூட எனக்குத் தரமாட்டாயாடா- நான் உனக்கு மாம்பழம் தந்திருக்கிறேன், கவனமிருக்கட்டும், வறுத்த வேர்க்கடலை கொடுத்திருக்கிறேன், கவனமிருக்கட்டும்" என்று எதிர்க் குடிசை எல்லப்பன் கூறுவான்.

கரியனின் தங்கை, காமாட்சியோ கண்ணைச் சிமிட்டிக்கொண்டே "உனக்கு ஒரு சீப்புன்னா, எனக்கு இரண்டு தெரியுமா? - அம்மாவைக் கேட்டு ஒரு சீப்பு, அப்பாவைக் கேட்டு ஒரு சீப்பு" என்று குறும்பாகப் பேசுவாள்.

மூன்றாவது பையன், முத்து. "சீப்புக் கணக்குப் போட்டுக்கிட்டு ஏமாந்து போகாதீங்க - ஆமா பழமாவதற்குள்ளே யாரார் என்னென்ன செய்துடுவாங்களோ யார் கண்டாங்க" என்று சொல்லுவான் - வெறும் வேடிக்கைக்காக அல்ல திருடியாவது மற்றவர்களைவிட அதிகப்படியான பழங்களைத் தின்றே தீர்த்துவிடுவது என்று தீர்மானித்தே விட்டான்.

செங்கோடனின் செல்லப்பிள்ளையாக வளர்ந்து வந்தது செவ்வாழை. உழைப்பு அதிகம், வயலில், பண்ணை மானேஜரின் ஆர்ப்பாட்டம் அதிகம். இவ்வளவையும், சகித்துக்கொள்வான் - செவ்வாழையைக் கண்டதும் சகலமும் மறந்துபோகும். குழந்தைகள் அழுதால், செவ்வாழையைக் காட்டித்தான் சமாதானப்படுத்துவான்! துஷ்டத்தனம் செய்கிற குழந்தையை மிரட்டவும், செவ்வாழையைத்தான் கவனப்படுத்துவான்! குழந்தைகள், பிரியமாகச் சாப்பிடுவார்கள், செவ்வாழையை என்ற எண்ணம் செங்கோடனுக்கு. பண்ணை வீட்டுப் பிள்ளைகள், ஆப்பிள், திராட்சை, தின்ன

முடிகிறது - கரியனும், முத்துவும் எப்படி விலை உயர்ந்த அந்தப் பழங்களைப் பெறமுடியும்? செவ்வாழையைத் தந்து தன் குழந்தைகளைக் குதூகலிக்கச் செய்யவேண்டும் என்ற எண்ணந்தான், செங்கோடனை, அந்தச் செவ்வாழைக் கன்றைச்செல்லமாக வளர்க்கும்படி செய்தது. உழவன் செங்கோடனிடம், எவ்வளவு பாடுபட்டாலும், குழந்தைகளுக்குப் ‘பழமும் பட்சணமும்’ வாங்கித் தரக்கூடிய ‘பணம்’ எப்படிச் சேரமுடியும்? கூலி நெல், பாதி வயிற்றை நிரப்பவே உதவும் - குப்பியின் ‘பாடு’ குடும்பத்தின் பசியைப் போக்கக் கொஞ்சம் உதவும். இப்படிப் பிழைப்பு! உழைப்பின் பெரும்பகுதி வயலிலே செலவாகிறது - அதன் பலனில் மிகப்பெரும்பகுதி, வயலிலே செலவாகிறது - அதன் பலனில் மிகப் பெரும் பகுதியோ, பண்ணைக்குச் சேர்ந்துவிடுகிறது. இந்தச் ‘செவ்வாழை’ ஒன்று தான், அவன் சொந்தமாக - மொத்தமாக, பலன் பெறுவதற்கு உதவக் கூடிய, உழைப்பு! இதிலே, பங்கு பெற, பண்ணையார் குறுக்கிட முடியாதல்லவா? அவருக்காகப் பாடுபட்ட நேரம்போக, மிச்சமிருப்பதிலே அலுத்துப்படுக்க வேண்டிய நேரத்திலே, பாடுபட்டுக், கண்ணைப் போல வளர்த்து வரும், செவ்வாழை! இதன் முழுப்பயனும் தன் குடும்பத்துக்கு! இது ஒன்றிலாவது தான்பட்ட பாட்டுக்கு உரிய பலனைதானே பெற முடிகிறதே என்ற சந்தோஷம் செங்கோடனுக்கு.

இவ்வளவும் அவன் மனதிலே, தெளிவாகத் தோன்றிய கருத்துகள் அல்ல. புகைப்படம் போல, அந்த எண்ணம் தோன்றும், மறையும் - செவ்வாழையைப் பார்க்கும் போது பூரிப்புடன் பெருமையும் அவன் அடைந்ததற்குக் காரணம் இந்த எண்ணந்தான்.

கன்று, வளர்ந்தது, கள்ளங் கபடமின்றி. செங்கோடனுக்குக் களிப்பும் வளர்ந்தது. செங்கோடனின் குழந்தைகளுக்கு இப்போது, விளையாட்டு இடமே, செவ்வாழை இருந்த இடந்தான்! மலரிடம் மங்கையருக்கும், தேனிடம் வண்டுகளுக்கும், ஏற்படும் பிரேமை போல, அந்தக் குழந்தைகளுக்குச் செவ்வாழையிடம் பாசம் ஏற்பட்டு விட்டது.

“இன்னும் ஒரே மாசத்திலே குலை தள்ளுமாப்பா?” - கரியன் கேட்பான், ஆவலுடன், செங்கோடனை.

“இரண்டு மாசமாகும்டா கண்ணு” என்று செங்கோடன் பதிலளிப்பான்.

செவ்வாழை குலை தள்ளிற்று - செங்கோடனின் நடையிலேயே ஒரு புது முறுக்கு ஏற்பட்டுவிட்டது. நிமிர்ந்து பார்ப்பான், குலையை, பெருமையுடன்.

பண்ணை பரந்தாம முதலியார், தமது மருமகப் பெண் முத்துவிஜயாவின் பொன்னிற மேனியை அழகுபடுத்திய வைரமாலையைக் கூட அவ்வளவு பெருமையுடன் பார்த்திருக்க மாட்டார்! செங்கோடனின் கண்களுக்கு, அந்தச் செவ்வாழைக் குலை, முத்து விஜயாவின், வைரமாலையைவிட விலை மதிப்புள்ளதாகத்தான் தோன்றிற்று. குலை முற்ற முற்ற, செங்கோடனின் குழந்தைகளின் ஆவலும், சச்சரவும், பங்குத் தகராறும், அப்பாவிடமோ அம்மாவிடமோ ‘அப்பீல்’ செய்வதும், ஓங்கி வளரலாயின. “எப்போது பழமாகும்?” - என்று கேட்பாள் பெண். எத்தனை நாளைக்கு மரத்திலேயே இருப்பது, என்று கேட்பான் பையன். செங்கோடன், பக்குவமறிந்து குலையைவெட்டி, பதமாகப் பழுக்க வைத்துப் பிள்ளைகளுக்குத் தரவேண்டுமென்று எண்ணிக்கொண்டிருந்தான். உழைப்பின் விளைவு! முழுப்பலனை நாம் பெறப்போகிறோம் - இடையே தரகர் இல்லை - முக்காலே மூன்று வீசம் பாகத்தைப் பறித்துக்கொள்ளும், முதலாளி இல்லை. உழைப்பு நம்முடையது என்றாலும் உடைமை பண்ணையாருடையது - அவர் எடுத்துக் கொண்டது போக மீதம்தானே தமக்கு என்று, வயலில் விளையும் செந்நெல்லைப் பற்றி எண்ணவேண்டும் - அதுதானே முறை! ஆனால் இந்தச் செவ்வாழை அப்படி அல்ல! உழைப்பும் உடைமையும் செங்கோடனுக்கே சொந்தம்!!

இரண்டு நாளையில், குலையை வெட்டிவிடத் தீர்மானித்தான் - பிள்ளைகள் துள்ளின சந்தோஷத்தால், மற்ற, உழவர் வீட்டுப் பிள்ளைகளிடம் ‘சேதி’ பறந்தது-பழம் தரவேண்டும் என்று சொல்லி, அவலோ, கடலையோ, கிழங்கோ, மாம்பிஞ்சோ, எதை எதையோ, அச்சாரம் கொடுத்தனர், பல குழந்தைகள், கரியனிடம்.

பாடுபட்டோம், பலனைப் பெறப் போகிறோம், இதிலே ஏற்படுகிற மகிழ்ச்சிக்கு ஈடு எதுவும் இல்லை, இதைப்போலவே, வயலிலும் நாம் பாடுபடுவது நமக்கு முழுப் பயன்அளிப்பதாக இருந்தால் எவ்வளவு இன்பமாக இருக்கும். செவ்வாழைக்காக நாம செலவிட்ட உழைப்பு, பண்ணையாரின் நிலத்துக்காகச் செலவிட்ட உழைப்பிலே, நூற்றுக்கு ஒரு பாகம்கூட இராது -ஆனால் உழைப்பு நம்மடையதாகவும் வயல் அவருடைய உடைமையாகவும் இருந்ததால், பலனை அவர் அனுபவிக்கிறார்

பெரும்பகுதி. இதோ இந்தச் செவ்வாழை நம்ம கொல்லையிலே நாம் உழைத்து வளர்த்தது - எனவே பலன் நமக்குக் கிடைக்கிறது. இதுபோல, நாம் உழைத்துப் பிழைக்க நம்முடையது என்று ஒருதுண்டுவயல் இருந்தால், எவ்வளவு இன்பமாக இருக்கும், அப்படி ஒரு காலம் வருமா! உழைப்பவனுக்குத்தான் நிலம் சொந்தம், பாடுபடாதவன் பண்ணையாராக இருக்கக்கூடாது என்று சொல்லும் காலம் எப்போதாவது வருமா! உழைப்பவனுக்குத்தான் நிலம் சொந்தம், பாடுபாடாதவன் பண்ணையாராக இருக்கக்கூடாது என்று சொல்லும் காலம் எப்போதாவது வருமா! என்றெல்லாம் கூட, இலேசாகச் செங்கோடன் எண்ணத் தொடங்கினான். செவ்வாழை இதுபோன்ற சித்தாந்தங்களைக் கிளறி விட்டது அவன் மனதில். குழந்தைகளுக்கோ நாக்கிலே நீர் ஊறலாயிற்று.

செங்கோடன் செவ்வாழைக் குலையைக்கண்டு களித்திருந்த சமயம், பண்ணை பரந்தாமர், தமது மருமகப் பெண் முத்துவிஜயத்தின் பிறந்தநாள் விழாவை விமரிசையாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தார். அம்பிகை கோயிலில் அபிஷேக ஆராதனை செய்வதற்காக, 'ஐயரிடம்' சொல்லிவிட்டார். கணக்கப்பிள்ளையைக் கூப்பிட்டு, 'பட்டி' தயாரிக்கச் சொன்னார். பல பண்டங்களைப்பற்றிக் குறிப்பு எழுதும்போது, 'பழம்' தேவை என்று தோன்றாமலிருக்குமா? இரண்டு சீப்பு வாழைப்பழம் என்றார் பண்ணையார்.

"ஏனுங்க பழம் - கடையிலே நல்ல பழமே இல்லை; பச்சை நாடாத்தான் இருக்கு" என்று இழுத்தான் சுந்தரம் கணக்கப்பிள்ளை.

"சரிடா, அதிலே தான் இரண்டு சீப்பு வாங்கேன்? - வேறே நல்லபழம் எங்கே இருக்கு!" என்று பண்ணையார் சொல்லி முடிப்பதற்குள், சுந்தரம், "நம்ம செங்கோடன் கொல்லையிலே, தரமா, ஒரு செவ்வாழைக் குலை இருக்குதுங்க - அதைக் கொண்டுகிட்டு வரலாம்" என்றான் சரி, என்றார் பண்ணையார்!

செங்கோடனின் செவ்வாழைக்குலை! அவனுடைய இன்பக்கனவு!! உழைப்பின் விளைவு!! குழந்தைகளின் குதூகலம்!!!!

அதற்கு மரண ஓலை தயாரித்துவிட்டான் சுந்தரம்!

எத்தனையோ பகல் பார்த்துப் பார்த்து, செங்கோடனின் குடும்பம் பூராவும் பூரித்தது அந்தக்குலையை! அதற்குக் கொலைகாரனானான் சுந்தரம். மகிழ்ச்சி, பெருமை, நம்பிக்கை, இவைகளைத் தந்து வந்த அந்தச் செவ்வாழைக் குலைக்கு வந்தது ஆபத்து.

தெருவிலே, சுந்தரமும் செங்கோடனும் பேசும்போது குழந்தைகள், செவ்வாழையைப் பற்றியதாக இருக்கும் என்று எண்ணவே இல்லை! செங்கோடனுக்கு தலை கிறுகிறுவென்று சுற்றிற்று - நாக்குக் குழறிற்று, வார்த்தைகள் குபுகுபுவென்று கிளம்பித் தொண்டையில் சிக்கிக் கொண்டன.

மாட்டுப் பெண்ணுக்குப் பிறந்தநாள் பூஜை - என்று காரணம் காட்டினான் சுந்தரம். என்ன செய்வான் செங்கோடன்! என்ன சொல்வான்? அவன் உள்ளத்திலே, வாழையோடு சேர்ந்து வளர்ந்த ஆசை-அவன் குழந்தைகளின் நாக்கில் நீர் ஊறச் செய்த ஆசை - இன்று, நாளை, என்று நாள் பார்த்துக் கொண்டிருந்த ஆவல் - எனும் எதைத்தான் சொல்ல முடியும்? கேட்பவர் பண்ணை பரந்தாமர்! எவ்வளவு அல்பனடா, வாழைக்குலையை அவர்வாய் திறந்து, உன்னை ஒரு பொருட்டாக மதித்துக்கேட்டனுப்பினால், முடியாது என்று சொல்லிவிட்டாயே! அவருடைய உப்பைத் தின்று பிழைக்கிறவனுக்கு, இவ்வளவு நன்றி கெட்டதனமா? கேவலம் ஒருவாழைக்குலை! அவருடைய அந்தஸ்த்துக்கு, இது ஒருபிரமாதமா! - என்று ஊர் ஏசுகிறது போல், அவன் கண்களுக்குத் தெரிகிறது.

அப்பா! ஆசை காட்டி மோசம் செய்யாதே! நான் கூடத்தான் தண்ணீர் பாய்ச்சினேன் - மாடுமிதித்து விடாதபடி பாதுகாத்தேன் - செவ்வாழை ரொம்ப ருசியாக இருக்கும். கல்கண்டு போல இருக்கும் என்று நீதானே என்னிடம் சொன்னாய். அப்பா! தங்கச்சிக்குக்கூட, 'உசிர்' அந்தப் பழத்திடம். மரத்தை அண்ணாந்து பார்க்கும்போதே, நாக்கிலே நீர் ஊறும். எங்களுக்குத் தருவதாகச் சொல்லிவிட்டு, இப்போது ஏமாற்றுகிறாயே. நாங்கள் என்னப்பா, உன்னை, கடையிலே காசு போட்டுத் திராட்சை, கமலாவா வாங்கித் தரச் சொன்னோம். நம்ம கொல்லையிலே நாம் வளர்த்ததல்லவா! - என்ற அழுகுரலுடன் கேட்கும் குழந்தைகளும், குழந்தைகளைத் தவிக்கச் செய்கிறாயே, நியாயமா? என்று கோபத்துடன் கேட்கும் மனைவியும், அவன் மனக்கண்களுக்குத் தெரிந்தனர்! எதிரே நின்றவரோ, பண்ணைக் கணக்கப்பிள்ளை!

அரிவாள் இருக்குமிடம் சென்றான். அப்பா குலையை வெட்டப்போறாரு செவ்வாழைக்குலை' - என்று ஆனந்தக் கூச்சலிட்டுக் கொண்டு, குழந்தைகள் கூத்தாடின செங்கோடனின் கண்களிலே நீர்த்துளிகள் கிளம்பின! குலையை வெட்டினான் - உள்ளே கொண்டு வந்தான் அரிவாளைக் கீழே போட்டான் - குலையைக் கீழேவை அப்பா, தொட்டுப் பார்க்கலாம், என்று குதித்தன குழந்தைகள். கரியனின் முதுகைத் தடவினான் செங்கோடன் "கண்ணு! இந்தக் குலை, நம்ம ஆண்டைக்கு வேணுமாம் கொண்டு போகிறேன் அழாதீங்க - இன்னும் ஒரு மாசத்திலே, பக்கத்துக்கண்ணு மரமாகிக் குலைதள்ளும். அது உங்களுக்குக் கட்டாயமாகக் கொடுத்துவிடறேன்" என்று கூறிக்கொண்டே, வீட்டைவிட்டுக் கிளம்பினான், குழந்தையின் அழுகுரல், மனதைப் பிளப்பதற்குள்.

செங்கோடன் குடிசை அன்று பிணம் விழுந்த இடம் போலாயிற்று. இரவு நெடுநேரத்திற்குப் பிறகுதான் செங்கோடனுக்குத் துணிவு பிறந்தது வீட்டுக்குவர! அழுது அலுத்துத் தூங்கிவிட்ட குழந்தைகளைப் பார்த்தான், அவன் கண்களிலே, குபுகுபுவெனக் கண்ணீர் கிளம்பிற்று, துடைத்துக்கொண்டு, படுத்துப்புரண்டான் - அவன் மனதிலே ஆயிரம் எண்ணங்கள் செவ்வாழையை செல்லப்பிள்ளை போல் வளர்த்து, என்னபலன் ..! அவருக்கு அது ஒரு பிரமாதமல்ல - ஆயிரம் குலைகளையும் அவர் நினைத்த மாத்திரத்தில் வாங்க முடியும்! ஆனால் செங்கோடனுக்கு..? அந்த ஒரு குலையைக்காண அவன் எவ்வளவு பாடுபட்டான் - எத்தனை இரவு அதைப்பற்றி இன்பமான கனவுகள் - எத்தனை ஆயிரம் தடவை, குழந்தைகளுக்கு ஆசைகாட்டியிருப்பான்! உழைப்பு எவ்வளவு! அக்கறை எத்துணை! எல்லாம் ஒருநொடியில் அழிந்தன!

நாலு நாட்களுக்குப் பிறகு, வெள்ளித் தட்டிலே, ஒரு சீப்பு செவ்வாழைப் பழத்தை வைத்துக்கொண்டு, அன்னநடை நடந்து அழகுமுத்துவிஜயா, அம்பிகை ஆலயத்துக்குச்சென்றாள்.

நாலு நாட்கள் சமாதானம் சொல்லியும், குழந்தைகளின் குமுறல் ஓயவில்லை. கரியன் ஒரே பிடிவாதம் செய்தான், ஒருபழம் வேண்டுமென்று, குப்பி, பழங்காலத்திலிருந்து ஒருகாலணாவை எடுத்துக் கொடுத்தனுப்பினாள். பழம்வாங்கிக் கொள்ளச் சொல்லி, பறந்தோடினான்,கரியன்.

கடையிலே, செவ்வாழைச் சீப்பு, அழகாகத் தொங்கிக் கொண்டிருந்தது. கணக்கப்பிள்ளை, பண்ணை வீட்டிலே இருந்து நாலு சீப்பு. முதலிலேயே தீர்த்துவிட்டான் -அவன் விற்றான் கடைக்காரனுக்கு - அதன் எதிரே, ஏக்கத்துடன் நின்றான் கரியன்! "பழம், ஓர் அணா, பயலே காலணாவுக்குச் செவ்வாழை கிடைக்குமோ - போடா" என்று விரட்டினான், கடைக்காரன் கரியன் அறிவானா? பாபம், தன் கொல்லையிலே இருந்த செவ்வாழை, இப்போது கடையில் கொலுவீற்றிருக்கிறது என்ற வித்தையை! பாபம் ! எத்தனையோ நாள், அந்தச் சிறுவன், தண்ணீர் பாய்ச்சினான், பழம் கிடைக்கும் என்று! பழம் இருக்கிறது, கரியனுக்கு எட்டாத இடத்தில். விசாரத்தோடு வீட்டிற்கு வந்தான்,: வறுத்த கடலையை வாங்கிக் கொறித்துக் கொண்டே. செங்கோடன், கொல்லைப் புறத்திலிருந்து வெளியே வந்தான் - வாழை மரத்துண்டுடன்.

"ஏம்பா! இதுவும் பண்ணை வீட்டுக்கா?" என்று கேட்டான் கரியன்.

"இல்லேடா, கண்ணு! நம்ம பார்வதி பாட்டி செத்துப்போயிட்டா அந்தப் பாடையிலே கட்ட" என்றான் செங்கோடன்.

அலங்காரப் பாடையிலே, செவ்வாழையின் துண்டு,

பாடையைச் சுற்றி அழுகுரல்!

கரியனும், மற்ற குழந்தைகளும், பின்பக்கம்.

கரியன் பெருமையாகப் பாடையைக் காட்டிச் சொன்னான் "எங்க வீட்டுச் செவ்வாழைடா," என்று.

"எங்க கொல்லையிலே இருந்த செவ்வாழைக் குலையைப் பண்ணை வீட்டுக்குக் கொடுத்து விட்டோம் - மரத்தை வெட்டி ' பாடை'யிலே கட்டிவிட்டோம்" என்றான் கரியன்.

பாபம்! சிறுவன் தானே!! அவன் என்ன கண்டான், செங்கோடனின் செவ்வாழை, தொழிலாளர் உலகிலே சர்வசாதாரணச் சம்பவம் என்பதை.

**புதுமைப்பித்தன் - 1906 -1948**

இவர் பிறந்த ஆண்டு 1906, சிறுகதைத் துறையில் மிகப்பெரிய புரட்சியை உண்டாக்கியவர். தினமணி, மற்றும் தினசரி இதழ்களில் பல ஆண்டுகள் உதவி ஆசிரியராகப் பணிபுரிந்தார். தமது புதுமையாலும் சிந்தனைக் கூர்மையாலும், ஒப்பற்ற நுட்பத்தாலும் தமிழ்ச் சிறுகதை உலகில் நிரந்தரமாக வாழ்ந்து வருபவர்.

# நினைவுப் பாதை

மேலச் செவல் வைரவன் பிள்ளை என்ற பாலசுப்பிரமணிய பிள்ளையின் மனைவி வள்ளியம்மை யாச்சி நேற்றுத்தான் இறந்துபோனாள். தம்பதிகள் இருவரும், ஏறக்குறைய அரை நூற்றாண்டுக்குமேல், வாழ்க்கையின் மேடுப்பள்ளங்களையெல்லாம் ஒன்றாகவே கடந்து வந்திருக்கின்றனர். வள்ளியம்மை யாச்சி இறந்துபோனாள். ஏதோ தெய்வ சங்கற்பம் அப்படி. இன்று காடேற்று (இரண்டாம் நாள் கிரியை). நீண்டநாள் வியாதி ஒன்றுமில்லை, போன சனிக்கிழமை புழக்கடையில் கால் வழுக்கி விழுந்தாள். இடுப்பிலும் விலாவிலும் ஊமையடி, அதில் படுத்தவள்தான், எழுந்திருக்கவேயில்லை.

வயதில் மூத்தவர் இறந்தால், அழுகைக்கும் ஓலத்திற்கும் குறைவில்லாவிட்டாலும், வருத்தமிருக்காது, பெண்கள் ரஸித்து அழுவார்கள்-வார்த்தைகள் முத்து முத்தாய்க் கோவையாக வந்து விழும், அத்துடன் ஓரிரண்டு துளி கண்ணீரும் கலந்திருக்கலாம். ஆனால் அது அழுகிறவர்களின் சொந்த அந்தரங்க வருத்தத்தைப் பற்றியதாகவேயிருக்கும்.

அன்று இன்னும் விடியவில்லை. விடிவெள்ளி எதிர்வீட்டுக் கூரைக்கு ஒரு முழ உயரத்தில் தொங்குவதுபோல் தெரிகிறது. வாசல் தெளிக்கும் சப்தங் கூடக் காலையின் வரவை எதிரேற்கவில்லை. ஏன், துஷ்டிக்காக (இழவுக்காக) அழுகிறவர்கள் கூட எழுந்திருக்கவில்லை என்றால்...

வைரவன் பிள்ளை வளைவின் வெளிக் குறட்டில், கோரைப் பாயின் மீது முழங்காலைக் கட்டிக்கொண்டு ஓர் உருவம் உட்கார்ந்திருக்கிறது. வேறுயாருமில்லை, அவர்தான், அன்று அவ்வீட்டில் தூங்காதவர் அவர் ஒருவர்தான். முழங்காலைக் கட்டியபடி, மேலே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருக்கிறார். குறிப்பாக எதன்மீதும் பார்வையை உபயோகிக்கவில்லை. வெளியே, வாசலில் விசிப் பலகையின்மேல் முழுதும் போர்த்த உடலங்கள், சமயா சமயங்களில் குறட்டைவிட்டு, உயிர் இருப்பதைத் தெரிவித்துக் கொள்ளுகின்றன.

வைரவன் பிள்ளை மனது, அண்டசராசரங்கள் எல்லாவற்றையும் பார்வையிட்டுவிட்டு, மறுபடியும் மறுபடியும் வள்ளியம்மை யாச்சியின் கிடத்தப்பட்ட கற்பனைப் பிரேதத்தின் மீது வந்து கவிகிறது...

ஏறக்குறைய இந்த ஐம்பது வருஷ காலத்தில் அவர் வள்ளியம்மை யாச்சியைப்பற்றி அவ்வளவாக - முதல் பிரசவத்தில் தவிர - பிரமாதமாக நினைத்தது கிடையாது. மனைவி என்பது நாதன் வஸ்துவாக இருந்து, பழகிய பொருளாகி, உடலோடு ஒட்டின உறுப்பாகிவிட்டது. ஒவ்வொருவரும் தமக்கு ஐந்து விரல் இருப்பதை ஒவ்வொரு நிமிஷமும் நினைத்துக்கொண்டா இருக்கிறார்கள்? விரல் ஒன்று போனால் ஐந்தென்ற நினைப்புப் பிறக்கும், அப்பொழுது அவர் மனக்கண் முன் வள்ளியம்மை யாச்சி புதுப்பெண் கோலத்தில் தம் கைபிடித்து வந்த காட்சி நின்று தோன்றியது.

வைரவன் பிள்ளை தூங்குவதற்காக உட்கார்ந்த இடத்தருகில் ஒரு சிறு ஜன்னல் - பனங் கம்பு ‘அழி’ வைத்தது. உள்ளிருந்து குசுகுசு என்ற சப்தம்.

"ஏட்டி, அஞ்சு கொத்துச் சவடி (சங்கிலி) உனக்குன்னு தானேட்டிசொன்னா, பேச்சியம்மை கேக்கதுக்கு மின்னே நீ போய் உங்க தாத்தாக்கிட்டே கேட்டு வாங்கிக்க!"...

"ஆமாம்...எனக்குத் தூக்கம் வருதுங்கே-என்னைப் போட்டுப் படுத்தாதே!" என்று வெடுக்கென்னும் ஓர் இளம்பெண் குரல்.

"உடனே ‘வீல்’ என்று தொட்டிலில் அழும் குழந்தைக் குரல்,

"சவமெ, நீயும் ஆரம்பிச்சிட்டியா?... ஒன் வாய் ஓயாதா?... செத்த ஒளரு நிமிட்டு சும்மா இரியாதா? எனக்குன்னுதான் வந்திடதம்மா... !" என்ற அங்கலாய்ப்பு.

"அதாரது பாப்பாத்தியா .... !" என்று நினைத்தார் வைரவன் பிள்ளை, அவள்தான் பிள்ளையின் நாற்பது வயதான முதல் புத்திரி பாப்பாத்தியம்மாள். அவளுக்கு, வயதுவந்த ஒரு பெண்ணும், நான்கு வயதுச் சிறுவனும், பத்துமாதக் கைக்குழந்தையும் உண்டு.

இதைக்கேட்ட வைரவன் பிள்ளைக்குக் கைக்குழந்தை பாப்பாத்தி, சமைந்து (பருவமெய்தி) சடங்கு நடக்கும்போது அவள் நின்ற கோலம் ... அப்புறம் மணப்பந்தலில் அவள் நின்ற காட்சி...எல்லாம் அவர் மனக்கண்முன் சலனப்படமாக விரிந்தது. பாப்பாத்தி எப்பொழுதும் அப்படித்தான், ஆமாம், அவள் பிறக்கும்போது தானே கடைமுறிந்து நாலு பக்மும் பணமுடை.. கஷ்டத்தில் வளர்ந்த பெண் - காசில் இருந்த கருத்து அளவுக்கு மீறி வளர்ந்து விட்டது - அவள் மகளுக்கென்று சொல்லியிருந்தால், அவள் மகளுக்குத்தானே, அதற்குள் எதற்கு இந்தச் சின்னப்புத்தி.

"ஏட்டி, இந்த வெத்திலையத் தட்டு" என்று எடுத்த வாய்-அதிகாலையில் எழுந்திருந்ததும் அவர் போட்டுக்கொள்வதற்காகத் தயாராக வெற்றிலையை இடித்து வைத்தல் அவரது பல் போனதிலிருந்து தட்டாது நடந்துவரும் பழக்கம் - சடக்கென்று நின்றது உள்ளத்தின் குழப்பம் புதிய மறுபாட்டில் மேலும் குழம்பியது.

வீட்டின் பக்கத்தின் நின்று குடிமகன் சுடலை ஊதிய இரட்டைச் சங்கின் அலறல் மறுநாள் வந்ததைப் பிள்ளையவர்கள் பிரக்ஞைக்குக் கொணர்ந்தது... அதேசமயத்தில் உள்ளிருந்து பெண்களின் அழுகைக் குரல், சங்கத்தின் ஏக்க அலைகளுடன் தொடந்து மனப் பாரத்தை அதிகப்படுத்தியது ... வைரவன் பிள்ளையின் பார்வை விடிவெள்ளியை நாடியது... அது அவர் கண்ணில் தென்படவில்லை...எதிர்வீட்டுக் கூரை, முன்பே அதை விழுங்கிவிட்டது...கூரையின் உச்சிக்கோடு தான் வானத்திற்கு ஓர் எல்லை காட்டியது.

தெருக்கோடி முனையில் 'ஜல் ஜல்' என்ற மாட்டுச் சலங்கைகளின் சப்தம்..சிறிது நின்றது. யாரோ இறங்கினர்...தெருக்கோடியிலிருந்தே...."என்னைப்பெத்த தாயாரே!"...என்ற பிலாக்கணம் ...பார்வதியும் வந்து சேர்ந்துவிட்டாள் என்ற திருப்தி வைரவன் பிள்ளைக்கு ...பார்வதி கடைக்குட்டிப் பெண் ...தூரத்தில் வாழ்க்கைப்பட்டிருக்கிறாள்...

அப்பொழுது விசிப்பலகை ஒன்றிலிருந்த உருவம் எழுந்து, சடசட வென்று சோம்பல் முறித்தவண்ணம், "சம்போ மகாதேவா!" என்று கொட்டாவி விட்டுக்கொண்டே, "பாட்டையா, நல்லத் தூங்கினியளா? அதாரது?" என்று சொல்லிக்கொண்டே, வண்டி வந்த திசையை நோக்கியது...

அதற்குள் வண்டியும் மெதுவாக வாசற்படியில் நின்றது...முன்னால் பார்வதி நெஞ்சிலடித்துக்கொண்டே உள்ளே நுழைந்தாள் ...உள்ளேற அழுகைக்குரல் பலமாற்று...

"கரிசங்கொளத்து மாப்பிள்ளை வாராஹ!" என்று சொல்லிக் கொண்டே பக்கத்துவீட்டுக் கள்ளர்பிரான் பிள்ளை -அவர்தான் மற்றொரு பலகையில் படுத்திருந்தவர் - எழுந்திருந்தார்.

மாப்பிள்ளை மௌனமாக வந்து பிள்ளையவர்கள் பக்கத்தில் உட்கார்ந்தார்...தலைகுனிந்த வண்ணம் கேட்டார் "அத்தைக்கு என்ன செஞ்சது? லெட்டர்லெ கூட ஒண்ணையும் குறிப்பிடலியே ..... !" வைரவன் பிள்ளை பதில் பேசவில்லை.

"ஆச்சிக்கு என்ன? கெடப்பிலே கெடந்தாளா என்ன ...அன்னைக்கு என்ன, கால் கொஞ்சம் தவறிச்சு...நல்ல ஊமையடி...இப்படி வரும்னு யார் நெனச்சா ...வயசாச்சில்லியா? எல்லாம் தெய்வ சங்கல்பம், அதுக்கு நாம் என்ன பண்ணமுடியும் !... ஆச்சி திரேகம் கல்லுன்னா கல்லுத்தான் ...என்னைக்காவது ஒருநா மண்டையிடின்னு தலையெச் சாச்சிருக்காளா?.. அந்தப் பெரிய டாக்டரு இருக்கானே —— அவன் எம்டன் தான் !-அவனே அவ்வளவு தான்னுட்டான் !" என்று வாசாமகோசரமாக விஷயத்தைச் சொல்லி, தேறுதலும் சொல்ல ஆரம்பித்தார் முதலில் எழுந்தவர்...

அப்பொழுதுதான் எழுந்த சுந்தரம்பிள்ளை, நெற்றியில் விபூதியை எடுத்துப் பூசித்துக்கொண்டே, " போன மாசமேதான் சுப்பு பிள்ளை அண்ணாச்சி சொல்லலே, ஆச்சிக்கு ஒரு கண்ட மிருக்குன்னு! ... நானும் அண்ணைக்கு விளை (விளையுமிடம்) யைப் பாத்துட்டு வரப்போ பேசிக்கிட்டுத்தானே வந்தேன்... எல்லாம் வெள்ளிக்கிழமை களிஞ் சாத்தானின்னார்.. காலன் வாரதுக்கு கணக்கிண்ணும், நேர மிண்ணும் உண்டுமா?" என்று சொன்னார்.

வைரவன் பிள்ளை யோசனையைச் சுடலையின் மற்றொரு சங்கொலி கலைத்துக் குழப்பி அதனுடன் ஒன்றுபட்டது.

அதற்குள் நன்றாய் விடிந்துவிட்டது.

வீட்டினுள்ளிருந்த நான்கு வயதுப் பையனொருவன், இடை அரை ஞாண் கயிற்றில் மூலை மட்டும் சொருகிய பட்டுக்கரைத் துண்டு ஒன்றைப் பிரம்மப் பிரயத்தனம் செய்து மேலே இழுத்துப் போட்டும் முக்கால்வாசிப் பாகம் புழுதியில் புரள, வெளியே வந்து குறட்டின் மேல் ஏறினான்.

வைரவன் பிள்ளை, உணர்வற்ற நிலையிலே, அவனை ஒரு கையால் அணைத்தார்.

அவர் பக்கம் ஒண்டிக்கொண்டு அவரை அண்ணாந்து ஏறிட்டுப் பார்த்தவண்ணம், "நாந்தான் ஆச்சிக்கு நெய்ப்பந்தம் பிடிச்சேனே!" என்று தன் திறமையை விளக்கிக் கொண்டான் சிறுவன்,

"பயலெப் பாருங்களேன் !...ஏலே, ஒங்க ஆச்சியெ ஏங்கடா?" என்றார் சுந்தரம் பிள்ளை.

"செத்துப் போயிட்டா!" என்று அர்த்தமில்லாமல் சொன்னான் சிறுவன்.

"அது பசலெ, அதுக்கென்ன தெரியும்?" என்றார் வைரவன் பிள்ளை.

"அவனா? வலுப்பயல்லெ, அவனுக்கா தெரியாது!... எலே, ஒங்க ஆச்சியை-" என்பதற்குள், உள்ளிருந்து தாம்பாளத்தில் இளநீர் பால் முதலிய கிரியைக்கு வேண்டியவற்றையும், குடம் சொம்பு முதலியவற்றையும் எடுத்து வந்து வைத்த கள்ளர்பிரான் பிள்ளை, "எல்லாம் காலா காலத்திலே போயிட்டு வந்திட்டாநல்லது தானே! நீங்க மேலவீட்டு அண்ணாச்சியைச் சத்தங்காட்டுங்க !... என்றார்.

சுடலை மறுபடியும் மெழுகுவைத்த இரட்டைச் சங்கை முழக்கினான். எல்லோரும் துண்டை உதறித் தோள்மேல் போட்டுக் கொண்டு எழுந்தனர் ...சுடலை முன்னால் முழக்கிக்கொண்டே நடந்தான்.

வைரவன் பிள்ளை கைத்தடியை ஊன்றிக்கொண்டு தள்ளாடி நடந்தார். அவருக்கு முன்னால், தலை முண்டிதமான அவருடைய ஒரே மகன் செல்லுகிறான். மனசிலோ, நடையிலோ கவலை தள்ளாடவில்லை.

வைரவன் பிள்ளை மனக்கண்முன், மணக்கோலத்தில் பதினாறு வயதில் பார்த்த வள்ளியம்மையாச்சியின் உருவம் நின்றது...

சுடலை சங்கை முழக்கினான்...

இனிப் பார்க்கப் போவதை வைரவன் பிள்ளை மனது நினைக்க மறுத்தது...

"ஏலே நீயுமா? திரும்பலியா!" என்ற சுந்தரம்பிள்ளையின் குரல்; பேரன் தொடர்வதைத் திரும்பி பார்த்தார்.

மறுபடியும் சுடலை சங்கை முழக்கிக்கொண்டே சந்து திரும்பினார்.

****************************************

**கி. ராஜநாராணன்**

இந்தத் தொகுப்பிலுள்ள கி. ராஜ நாராயணனின் "கதவு" எனும் கதை. அவருடைய தொடக்கக் காலத்திய கதை. மானாவாரிக் கரிசல் நிலத்தில் வறுமையும், அரசு அதிகாரிகளின் ஈவு இரக்கமற்ற நடவடிக்கையும் எப்படி ஒரு குடும்பத்தை நிர்க்கதியாக்கி விடுகின்றன என்பதை சித்தரிக்கின்றது. இக்கதை,

# கதவு

கதவு ஆட்டம் ஆரம்பமாகிறது.

பக்கத்து வீட்டுக் குழந்தைகளும் ஆரவாரத்தோடு கலந்து கொண்டார்கள்.

"எல்லோரும் டிக்கட் வாங்கிக் கொள்ளுங்கெ" என்றான் சீனிவாசன். உடனே "எனக்கொரு டிக்கட், உனக்கொரு டிக்கட்" என்று சத்தம் போட்டார்கள்.

"எந்த ஊருக்கு வேணும்? ஏய்... இந்த மாதிரி இடிச்சித் தள்ளினா என்ன அர்த்தம்... அப்புறம் நான் விளையாட்டுக்கு வரமாட்டேன்"

"இல்லை, இல்லை, இடிச்சித் தள்ளலெ."

" சரி எந்த ஊருக்கு டிக்கட் வேணும்?"

குழந்தைகள் ஒருவருக்கொருவர் முகத்தைப் பார்த்துக் கொண்டார்கள். ஒருவன் திருநெல்வேலிக்கு என்று சொன்னான். திருநெல்வேலிக்கு! திருநெல்வேலிக்கு! என்று கூப்பாடு போட்டுச் சொன்னார்கள் எல்லோரும்.

லஷ்மி ஒரு துணியால் கதவைத் துடைத்துக் கொண்டிருந்தாள். சீனிவாசன் வெறுங்கையால் டிக்கட் கிழித்துக் கொடுத்து முடித்ததும், கதவில் பிடித்துத் தொங்கிக் கொண்டார்கள். சிலர் கதவை முன்னும் பின்னும் ஆட்டினார்கள். தன்மீது ஏறி நிற்கும் அக்குழந்தைகளை அந்த பாரமான பெரிய கதவு, பொங்கி பூரித்துப் போய் இருக்கும். அக்குழந்தைகளை, வேகமாக ஆட்டி மகிழ்வித்தது. "திருநெல்வேலி வந்தாச்சி" என்றான் சீனிவாசன், எல்லோரும் இறங்கினார்கள். கதவைத் தள்ளியவர்கள் டிக்கட் வாங்கிக் கொண்டார்கள் ஏறினவர்கள் தள்ளினார்கள். மீண்டும் கதவாட்டம் தொடங்கியது.

அது பழைய காலத்து காரை வீடு. பெரிய ஒரே கதவாகப் போட்டிருந்தது அந்த வீட்டுக்கு. அதில் வசித்து வந்தர்கள் முன்பு வசதி உள்ளவர்களாக வாழ்ந்தவர்கள். இப்பொழுது ரொம்பவும் நொடித்துப் போய்விட்டார்கள். அந்த வீட்டிலுள்ள குழந்தைகளில் மூத்ததற்கு எட்டு வயது இருக்கும். பெயர் லட்சுமி. அடுத்தவன் சீனிவாசன்: ஆறு வயது இருக்கும். இன்னொரு கைக்குழந்தை.

அம்மா காட்டுக்கு வேலை செய்யப் போய்விடுவாள். அப்பா மணிமுத்தாறில் கூலிவேலை செய்யப் போய்விட்டார். லட்சுமியும், சீனிவாசனும் கைக்குழந்தையை, தாய் காட்டிலிருந்து வரும் வரை வைத்துக் கொண்டு கதவோடு விளையாடிக் கொண்டிருப்பார்கள்.

ஒரு நாள் தெருவில் ஒரு தீப்பெட்டிப் படம் ஒன்றை லட்சுமி கண்டெடுத்தாள். படத்தில் ஒரு நாய் இருந்தது. அழுக்காக இருந்ததால் படத்தில் எச்சிலைத் துப்பி தன் பாவாடையால் துடைத்தாள். இதனால் சில இடங்களில் இருந்த அழுக்கு படம் பூராவும் பரவிற்று. ஆனால் லட்சுமிக்கு மிகவும் திருப்தி, படம் சுத்தமாகிவிட்டது என்று.

படத்தை முகத்துக்கு நேராகப் பிடித்து, தலையைக் கொஞ்சம் சாய்த்துக் கொண்டு பார்த்தாள். அப்புறம் இந்தப் பக்கமாகச் சாய்த்துக் கொண்டு பார்த்தாள். சிரித்துக் கொண்டாள். காண்பிக்க பக்கத்தில் யாராவது இருக்கிறார்களா என்று சுற்றுமுற்றும் பார்த்தாள். ஒருவரும் இல்லை. வீட்டை நோக்கி வேகமாக நொண்டி அடித்துக் கொண்டே போனாள், சந்தோஷம் தாங்க முடியாமல்.

லட்சுமி வீட்டுக்கு வந்த போது சீனிவாசன் நாடியைக் கையில் தாங்கிக் கொண்டு வாசல் படிக்கட்டில் உட்கார்ந்திருந்தான். அவனைக் கண்டதும் லட்சுமி படத்தைப் பின்புறமாக மறைத்துக் கொண்டு, "டேய் நான் என்ன கொண்டு வந்திருக்கிறேன் சொல்லு பார்ப்போம்" என்றாள்.

" என்ன கொண்டு வந்திருக்கிறாயோ: எனக்குத் தெரியாது"

"சொல்லேன் பார்ப்போம்"

"அதென்னமோ எனக்குத் தெரியாது"

லட்சுமி தூரத்தில் இருந்தவாறே படத்தைக் காண்பித்தாள்.

"அக்கா அக்கா, எனக்குத் தரமாட்டியா" என்று கேட்டுக் கொண்டே இறங்கி வந்தான் சீனிவாசன். "முடியாது" என்ற பாவனையில் தலையை அசைத்து படத்தை மேலே தூக்கிப் பிடித்தாள். சீனிவாசன் அவளைச் சுற்றிச் சுற்றி வந்தான். ஊஹும், முடியாது. மாட்டேன்.... நான் எவ்வளவு கஷ்டப்பட்டுத் தேடி எடுத்துக் கொண்டு வந்திருக்கிறேன் தெரியுமா? என்றாள்.

"ஒரே ஒரு தடவை பார்த்து விட்டுக் கொடுத்து விடுகிறேன். அக்கா, அக்கா" என்று கெஞ்சினான்.

"பார்த்து விட்டுக் கொடுத்து விட வேண்டும்"

"சரி"

"கிழிக்கப்படாது"

"சரி சரி"

சீனிவாசன் படத்தை வாங்கிப் பார்த்தான். சந்தோஷத்தினால் அவன் முகம் மலர்ந்தது.

"டேய் உள்ளே போய்க் கொஞ்சம் கம்மஞ்சோறு கொண்டா, இந்தப் படத்தை நம்ம கதவில் ஒட்டணும்" என்றாள்.

"ரொம்ப சரி" என்று உள்ளே ஓடினான் சீனிவாசன்.

இரண்டு பேருமாகச் சேர்ந்து கதவில் ஒட்டினார்கள். படத்தைப் பார்த்து சந்தோஷத்தினால் கைதட்டிக் கொண்டு குதித்தார்கள். இதைக் கேட்டுப் பக்கத்து வீட்டுக் குழந்தைகளும் ஓடி வந்தன. மீண்டும் கதவு ஆட்டம் தொடங்கியது.

அந்தக் கதவைக் கொஞ்சம் கவனமாகப் பார்க்கிறவர்களுக்கு, இந்தக் குழந்தைகள் ஒட்டிய படத்துக்குச் சற்று மேலே இதே மாதிரி வேறு ஒரு படம் ஒன்னை ஒட்டி இருப்பது தெரியவரும். அந்தப் படம் ஒட்டி எத்தனையோ நாட்கள் ஆகிவிட்டதால், அழுக்கும் புகையும் பட்டு மங்கிப் போய் இருந்தது. ஒருவேளை அது லட்சுமியின் தகப்பனார் குழந்தையாக இருக்கும் போது ஒட்டியதாக இருக்கலாம்.

குழந்தைகள் இப்படி விளையாடிக் கொண்டிருக்கும் போது கிராமத்துத் தலையாரி வந்தான்.

"லட்சுமி உங்க ஐயா எங்கே?"

"ஊருக்குப் போயிருக்காக"

"உங்க அம்மா?"

"காட்டுக்குப் போயிருக்காக"

"வந்தா தீர்வையைக் கொண்டு வந்து போடச் சொல்லு, தலையாரித் தேவரு வந்து தேடீட்டுப் போனாருன்னு சொல்லு"

"சரி" என்ற பாவனையில் லட்சுமி தலையை ஆட்டினாள்.

மறுநாள் தலையாரி லட்சமியின் அம்மா இருக்கும் போதே வந்து தீர்வைப் பாக்கியைக் கேட்டான்.

"ஐயா, அவரு ஊரிலே இல்லை. மணிமுத்தாறு போயி அஞ்சி மாசமாச்சி. ஒரு தகவலையும் காணோம். மூணு வருசமா மழை தண்ணி இல்லையே. நாங்க என்னத்தை வச்சு உங்களுக்குத் தீர்வைப் பாக்கியைக் கொடுப்போம்?

ஏதோ காட்டிலே போய்க் கூலி வேலை செய்து இந்தக் கொளந்தைகளைக் காப்பாத்ரதே பெரிய காரியம்: உங்களுக்கு இது தெரியாததா? என்றாள்.

இந்த வார்த்தைகள் தலைவாரியின் மனசைத் தொடவே இல்லை: இந்த மாதிரியான வசனங்களைப் பலர் சொல்லிக் கேட்டவன் அவன்.

"நாங்கள் என்ன செய்ய முடியும்மா இதற்கு இந்த வருசம் எப்படியாவது கண்டிப்பாக தீர்வை கொடுத்துவிட வேண்டும். அப்புறம் எங்கள் மீது சடைத்துப் புண்ணியம் இல்லை" என்று சொல்லிவிட்டு போய்விட்டான்.

ஒரு நாள் காலை வீட்டின் முன்னுள்ள மைதானத்தில் குழந்தைகள் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். தலையாரி நான்கு பேர் சகிதம் வீட்டை நோக்கி வந்தான். வந்தவர்கள் அந்தக் கதவைத் தூக்கிக் கழற்ற முயன்றார்கள். முடியவில்லை. குழந்தைகள் வீட்டுப் பக்கம் ஓடிவந்து பார்த்தார்கள். அவர்களுக்கு இது ஒரு வேடிக்கையாக இருந்தது. தலையாரியும் சேர்ந்து பிடித்து ஒரு மாதிரிக் கழற்றி, நான்கு பேரும் கதவைத் தூக்கி தலையில் வைத்துக்கொண்டு புறப்பட்டார்கள். அந்தக் குழந்தைகளுக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை. அதை ஒரு ஊர்வலம் என்று நினைத்தார்களோ தெரியவில்லை. ஒருவன் நாதஸ்வரம் வாசிப்பவனைப் போல் கைகளை வைத்துக் கொண்டு "பிப்பீ...பீ...பீ என்ற சத்தம் கொடுத்தான். இன்னொருவன் இரண்டு கைகளாலும் ஆள்காட்டி விரல்களை நீட்டிக் கொண்டு, உடலைப் பின் வளைத்துக் துடைகளின் மேல் ஓங்கி அடிப்பதாக பாவனை செய்து "திடும்...திடும்... ததிக்குண... ததிக்குண" என்று தவுல் வாசிப்பவனைப் போல் முழங்கினான். சீனிவாசனும் இதில் பங்கெடுத்துக்கொண்டான். இப்படி உற்சாகமாக குழந்தைகள் கதவைத் தூக்கிக் கொண்டு செல்கிறவர்களின் பின்னே ஊர்வலம் புறப்பட்டார்கள்.

தலையாரியால் இதைச் சகிக்க முடியவில்லை. "இப்போ போகிறீர்களா இல்லையா கழுதைகளே" என்று கத்தினான் குழந்தைகள் ஓட்டம் பிடித்தன.

அவர்கள் வீட்டுக்குத் திரும்பி வரும்போது லட்சுமி வாசல் படியில் உட்கார்ந்து அழுது கொண்டிருந்தாள். எல்லோரும் ஆரவாரம் செய்யாமல் அவளுக்குப் பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டனர். ஒருவரும் ஒன்றும் பேசவில்லை. சீனிவாசனும் முகத்தை வருத்தமாக வைத்துக் கொண்டான். இப்படி வெகுநேரம் அவர்களால் அங்கு இருக்க முடியவில்லை. தற்செயலாக ஒரு பெண், "நான் வீட்டுக்குப் போறேன்" என்று எழுந்தாள். உடனே எல்லோரும் அங்கிருந்து புறப்பட்டுப் போய்விட்டார்கள். லட்சுமியும் சீனிவாசனும் மாத்திரம் அங்கிருந்தார்கள். வெகுநேரம் அவர்களும் ஒருவருக்கொருவர் பேசவில்லை.

கைக்குழந்தை அழும் குரல் கேட்கவே லட்சுமி உள்ளே திரும்பினாள். அதற்குள் சீனிவாசன் அக்குழந்தையை எடுத்துக் கொள்ளப் போனான். குழந்தையைத் தொட்டதும் கையைப் பின்னுக்கு இழுத்தான். அக்காவைப் பார்த்தான், லட்சுமியும் பார்த்தாள்.

"பாப்பாவைத் தொட்டுப்பாரு அக்கா: உடம்பு சுடுது" என்றான். லட்சுமி தொட்டுப் பார்த்தாள். அனலாகக் கொதித்தது.

சாயந்திரம் வெகுநேரம் கழித்து அம்மா தலையில் விறகுச் சுள்ளிகளுடன் வந்தாள். சுள்ளிகள் சேகரிக்கும் போது கையில் தேள் கொட்டி இருந்ததால் முகத்தில் வலி தோன்ற அமைதியாக வந்து குழந்தைகளின் பக்கம் அமர்ந்து கைக் குழந்தையை வாங்கிக் கொண்டாள். "உடம்பு சுடுகிறதே?" என்று தனக்குள் கேட்டுக் கொண்டாள். இதற்குள் குழந்தைகள் காலையில் நடந்த சேதியை அம்மாவிடம் சொன்னார்கள்.

இந்தச் செய்தியைக் கேட்டதும் ரங்கம்மாவுக்கு மூச்சே நின்றுவிடும் போலிருந்தது. உடம்பெல்லாம் கண்ணுக்குத் தெரியாத ஒரு நடுக்கம் பரவியது. அவள் விடும் சுவாசத்தின் வெப்பம் அதிகமாகிறது. வயிற்றில் தாங்க முடியாத ஒரு வலி தோன்றியது போல், குழந்தையை இறுகப் பிடித்துக் கொண்டாள். குழந்தைகளுக்கு முன் அழக்கூடாது என்று எவ்வளவு தான் அடக்கினாலும் முடியவில்லை. "என்னைப் பெற்ற தாயே!" என்று அலறிவிட்டாள். பயத்தினால் குழந்தைகள் அவள் பக்கத்திலிருந்து விலகிக் கொண்டார்கள். இனம் தெரியாத காரணத்தினால் அவர்களும் அழ ஆரம்பித்தனர்.

மணிமுத்தாறிலிருந்து ஒரு தகவலும் வரவில்லை. நாட்கள் சென்று கொண்டே இருந்தன. இரவு வந்துவிட்டால் குளிர் தாங்க முடியாமல் குழந்தைகள் நடுநடுங்குவார்கள். கதவு இல்லாததால் வீடு இருந்தும் பிரயோஜனமில்லாமல் இருந்தது. கார்த்திகை மாசத்து வாடை, விஷக்காற்றைப் போல்

வீட்டினுள் வந்து வந்து அலைமோதிக் கொண்டே இருந்தது. கைக்குழந்தையின் ஆரோக்கியம் கெட்டுக் கொண்டே வந்தது. ஒருநாள் இரவு வாடை தாங்காமல் அது அந்த வீட்டைவிட்டு, அவர்களையும் விட்டுப்பிரிந்து சென்றுவிட்டது. ரங்கம்மாளின் துயரத்தை அளவிட்டுச் சொல்ல முடியாது. லட்சுமிக்காகவும், சீனிவாசனுக்காகவுமே அவர் உயிர் தரித்திருந்தாள்.

சீனிவாசன் பள்ளிக்கூடம் போகிறான். ஒருநாள் அவன் மத்தியம் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பும்போது ஒரு தீப்பெட்டிப் படம் கிடைத்தது அவனுக்கு, கொண்டுவந்து தன் அக்காவிடம் காண்பித்தான். லட்சுமி அதில் அவ்வளவாக ஆர்வம் கொள்ளவில்லை.

"அக்கா எனக்கு சீக்கிரம் கஞ்சி ஊத்து, பசிக்கிறது சாப்பிட்டுவிட்டு இந்தப் படத்தை ஒட்டணும்"

"தம்பி கஞ்சி இல்லை" இதை அவள் மிகவும் பதட்டத்தோடு சொன்னாள்.

"ஏன் காலையில் நீ காச்சும்போது நான் பார்த்தேனே?"

"ஆம்" என்ற முறையில் தலையசைத்துவிட்டு, "நான் வெளியே போயிருந்தேன். ஏதோ நாய் வந்து எல்லாக் கஞ்சியையும் குடித்துவிட்டுப் போய்விட்டது... கதவு இல்லையே" என்றாள் துக்கமும், ஏக்கமும் தொனிக்க, தன்னுடைய தாய் பசியோடு காட்டிலிருந்து வருவாளே என்று நினைத்து உருகினாள் லட்சுமி.

சீனிவாசன் அங்கே சிதறிக்கிடந்த கம்மம் பருக்கைகளை எடுத்து படத்தின் பின்புறம் தேய்த்து ஒட்டுவதற்கு வந்தான். கதவு இல்லை, என்ன செய்வதென்றே தெரியவில்லை. சுவரில் ஒட்டினான். படம் கீழே விழுந்துவிட்டது. அடுத்த இடத்தில், அடுத்த சுவரில் எல்லாம் ஒட்டிப் பார்த்தான்: ஒன்றும் பிரயோஜனம் இல்லை. ஏமாற்றத்தாலும் பசியாலும் அழ ஆரம்பித்து விட்டான்.

சாயந்திரம் லட்சுமி சட்டி பானைகளைத் தேய்த்துக் கழுவிக் கொண்டிருந்தாள். சீனிவாசன் முகத்தில் ஆவல் துடிக்க, மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க லட்சுமியிடம் ஓடி வந்தான்.

"அக்கா அக்கா நம்ம பள்ளிக்கூடத்துக்குப் பக்கத்திலே சாவடி இருக்கு பாரு, அதுக்குப் பின்புறம் நம்ம வீட்டு கதவு இருக்கக்கா! கண்ணணை, நான் பார்த்தேன்" என்றான்.

"அப்படியா! நிஜமாகவா? எங்கே வா பார்ப்போம்" என்று சீனிவாசனின் கையைப் பிடித்தாள். இருவரும் படியை நோக்கி ஓடினார்கள்.

உண்மைதான். அதே கதவு சாத்தப்பட்டு இருந்தது. தங்கள் நண்பனை இனம் கண்டு கொண்டார்கள் அச்சிறுவர்கள். பக்கத்தில் யாராவது இருக்கிறார்களா எனச் சுற்றுமுற்றும் பார்த்தார்கள். ஒருவரும் இல்லை.

அவர்களுக்கு உண்டான ஆனந்தத்தைச் சொல்ல முடியாது. அங்கே முளைத்திருந்த சாரணத்தியும், தை வாழைச் செடிகளும் அவர்கள் காலடியில் மிதிபட்டு நொறுங்கின. அதிவேகமாய் அந்தக் கதவின் பக்கம் பாய்ந்தார்கள். அருகில் போய் அதைத் தொட்டார்கள். தடவினார்கள். அதில் பற்றி இருந்த கரையான் மண்ணை லட்சுமி தன் பாவாடையால் தட்டித் துடைத்தாள். கதவோடு தன் முகத்தை ஒட்ட வைத்துக் கொண்டாள். அழ வேண்டும்போல் இருந்தது அவளுக்கு சீனிவாசனை கட்டிப் பிடித்துக் கொண்டாள், முத்தமிட்டாள். சிரித்தாள். கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது. சீனிவாசனும் லட்சுமியைப் பார்த்துச் சிரித்தான். அவர்கள் இருவரின் கைகளும் கதவைப் பலமாகப் பற்றி இருந்தன.

****************************************

**திலகவதி**

சமூகத்தில் பெண்கள் எதிர் கொள்ள நேர்கிற பல்வேறு பிரச்சனைகளை அனுதாபத்துடன் அணுகி மனித நேயத்துடன் நியாய உணர்வோடு கதை எழுதி வருபவர். கங்கை வந்து நீராட்டும், கடற்கரைக்குப் போகும் பாதை, கைக்குள் வானம் முதலிய சிறுகதைத் தொகுப்புகளைத் தந்தவர்.

# உயிரின் நிறம்

பீங்கான் ஜாடிக்குள்ளே உருள்ற கோலிக் குண்டுங்க மாதிரி, கூட்டுக்குள்ளேயிருந்து குருவிக் குஞ்சுங்க கிய்கிய் கிய்ன்னு கத்துற மாதி சத்தம். சட்டுன்னு கண் முளிச்சு எழுந்து பார்த்தா கூண்டுமில்ல குருவியுமில்ல. பிரியாவோட ரூம்ல மாட்டிருக்கிற கடிகார மணி அடிக்கிற சத்தம் அட! இதென்னடாது? நான் இங்கியேவா தூங்கிட்டேன்? ஆமா பகக்கத்துலே இருந்த கட்டில் மேலே படுத்து பிரியா தூங்கிகிட்டிருந்திச்சு. இன்னிக்கு பிரியாவுக்கு பொறந்த நாள். ரெண்டு மூனு நாளாவே வீட்டை சுத்தம் பண்ணுறதும் அலங்காரம் பண்ணறதும்மா ஒரே அமர்க்களமா இருக்குது. மின்னட்டாம் பூச்சிக மாதிரி பளபளக்கிற ஜிகினாவை நழுவலா ஒட்டி வைச்சிருக்கிற கலர்கலர் நட்சத்திரங்கள் செவத்து மேல எல்லம் ஒட்னோம்.

"குட்டி! இந்தா ஒன் உசரத்துக்கு இந்த இடத்திலே இருந்து வரிசையா நெடுக்கா புள்ளி வைச்சிருக்கற எடத்துல ஒவ்வொண்ணா ஒட்டு ..ன்னு பிரியாவோட அம்மா சொன்னாங்க ஒட்டிக்கிட்ட இருந்தவ அப்படியே தூங்கிபோயிட்டேன் போல இருக்கு.

எழுந்து நின்று ரூமைப் பார்த்தேன். எனக்கு எப்பவுமே பிரியாவாடோ ரூம் ரொம்ப பிடிக்கும். சூட்டு, கோட்டு எல்லாம் போட்டுக்கிட்டு கன்னுக்குட்டி ஒசரத்துக்கு ஒரு எலி பொம்மை மூலையிலே நிக்கும். கண்ணாடி அலமாரிக்குள்ளே புசுபுசுன்னு பெருசு கரடி பொம்மை. நாய் பொம்மை, பாப்பா பொம்மை, ஸ்விட்சு போட்டதும் கதை சொல்ற யானைன்னு என்னென்னமோ இருக்கும். அதனாலதான் பிரியாவோட ரூம்மை பெருக்கி எல்லா பொம்மைங்களையும் தொடச்சி அடுக்கி வைக்கிறதுன்னா எனக்கு பிடிக்கும் பிரியாவோட அம்மா சொல்லறப்ப அதையெல்லாம் எடுத்துவச்சு பிரியாவோட வெளையாடணும். பிரியாவுக்கு டான்ஸ் சொல்லித் தர்ற அக்காவோட ட்யூசன் வாத்தியாரோட பாட்டு டீச்சரேவந்துட்டான்னா அதையெல்லாம் பழையபடியே அடுக்கி வச்சிடனும். அவ்வளவுதான் என்வேலை.

பிரியாவோட வீட்டுக்காரங்களுக்கு முன்னாலே இங்க இருந்தவங்க வீட்ல பிரியாமாதிரி சின்னப் பாப்பாவே இல்லை. எல்லோருமே பெரியவங்க அதனாலா அவங்க வீட்ல பொம்மையே இல்ல. எப்ப பார்த்தாலும் அதை எடு, இதை எடு, அங்க பெருக்க, இங்க பெருக்கு இப்படித் துடைன்னு எதாவது வேல சொல்லிக்கிட்டே இருப்பாங்க. ஒவ்வொரு நாளைக்கு எனக்கு உடம்புகூட வலி எடுத்துக்கும். ஒருநாள் காய்ச்சலே வந்திடுச்சி. அம்மா, அன்னிக்கு, என் பக்கத்துலே உட்கார்ந்து அழுதுச்சி. எனக்கு அம்மாவைப் பாக்க அப்பப் பாவமா இருந்துச்சி. அம்மா என் கன்னத்தை தொட்டுத் தடவி செல்லம் கொஞ்சி காய்ச்சல் வர்றப்ப மட்டும்தான் அம்மா என்னை கொஞ்சும் அதுக்காகவே காய்ச்சல் வந்தா தேலவைன்னு தோணிச்சு. மத்தபடி அம்மா என்னை எப்பவும் திட்டிக்கிட்டேதான் இருக்கும். எட்டு வயசை முழுங்கிட்டு மசமசன்னு நிக்கறதைப் பாருன்னு சொல்லும்.

அம்மா, வெளக்கிக் குடுக்கிற பாத்தரத்தை எல்லாம் ஈரமில்லாம நான்தான் தொடைப்பேன். வரிசையா அடுக்குவேன். அம்மா துணி துவைக்க உக்காந்தா சோப்பு போட்டுத் தருவேன். சின்னசின்ன துணிங்களைக் கொண்டு போய் காயப்போடுவேன். காஞ்ச துணிங்களைக் கொண்டு போய் எடுத்து மடிச்சு வப்பேன். எல்லாமே முந்திதான். பழைய வீட்டுக்காரங்க இருந்தப்ப பிரியாவோட வீட்டுக்காரங்க வந்தப்புறம் பிரியாவோட வெளையாடறது, பிரியாவை கவனிச்சுக்கறது. பிரியாவுக்குத் தேவையானதைச் செய்யறது பிரியாவோட ரூமை சுத்தமா வச்சுக்கிறதுங்கறதெல்லாம் என் வேலைன்னுட்டாங்க. பிரியாவுக்கு எப்பவும் நான் அதும் பக்கத்திலேயே இருக்கணும். எம்மேல அதுக்கு இஷ்டம். எனக்கும்தான். பிரியாவோட இருக்கிறதுக்கு எனக்கு பிடிக்கும்.

பிரியா வீட்ல இல்லாதப்ப, பிரியா ஸ்கூல் போயிருக்கறப்ப, இல்லேன்னா பிரியா தூங்கறப்பதான் நான் என்னோட வேலைங்களை பார்த்துக்குவேன். பிரியா வீடு பெரிய பங்களா, அதைச் சுத்தி பெரீசா தோட்டம், நிறைய மரங்க அப்புறம் புல்லுத்தரை தோட்டத்து மூலையிலே இருக்கிற சின்னகுடிசைதான்

எங்க வீடு, எங்க வீட்டு ஜன்னல்லே அம்மா ஒரு பழைய தோல் பையை மாட்டி வச்சிருந்திச்சி. திடீர்ன்னு ஒரு நாள் பார்த்தா அதுக்குப் கீழே கூளமா கெடந்துச்சி.

"பாலா! வாலாட்டிக் குருவி முட்டை வைக்கத் தோது பாக்குதுடி. நீ அங்க போய் நிக்காதே...ன்னுச்சி அட! அம்மா! சொன்னது கரெக்டுதான். மறுநாள் அம்மாவுக்குத் தெரியாம செங்கல் மேல மணை வச்சி அது மேலே ஏறி நின்னு பைக்குள்ள பார்த்தா வெள்ளைய மூணு முட்டை. கோழி முட்டையை விடச் சின்னது. எங்க வீட்டுல நாலு கோழி இருக்குது. கருப்பி, பொன்னம்மா, ராஜி, செல்லம்னு நான் அதுங்களுக்குப் பேரு வச்சிருக்கேன்.ஒரு மாதிரி பளபளன்னு இருட்டாலேயே செஞ்சு வச்ச வானவில்லு கலர்க்கலரா தெரியற வாலும் குபுக்னு மொளச்ச செவப்புக்கல்லு கிரீடம் மாதிரி செக்கச் செவேல்னு என்னோட மொழங்கால் ஒசரத்துக்கு நிக்குதே சேவல். அது பேரு சபாபதி. அப்ப வச்ச பேரு.

அம்மாகிட்ட கோழிக் குஞ்சு பொரிக்க வைக்கணும்னு நான் சொல்லிக் கிட்டே இருப்பேன். அம்மா கேக்கறதேயில்லை. முட்டைங்களை எடுத்துக்கிட்டு போய் கடையில குடுத்துட்டு வீட்டு செலவுக்கு எதுனா வாங்கிட்டு வரும் கடைசியில பழியை நாகு இல்ல நாகு அதான் என்னோட நாய்குட்டி அதும்மேலே போட்டும். இந்த சனியன் இப்படி ஓயாம சுத்திக்கிட்டே இருக்குதே. ரொம்பத்தான் லட்சணமா அடைக்கு வச்சு குஞ்சி பொரிச்சி உருப்படி பண்ணிரலாம் போ ன்னு எம்மேலே எரிஞ்சு வுழும்.

ஆனா, நாகுன்னு பிரியாவுக்கு ரொம்ப ரொம்ப பிடிக்கும். அதுகூட வெளயாடறதுன்ன அதுக்கு ரொம்ப ஆசை. அப்புறம் பிரியாவுக்கு என்னோட கோலிங்கள்ல புளியம்பூக் கோலி மேலயும், பூனைக் கண்ணு கோலி மேலயும் கூட ஆசை. எங்க வீட்டு ஜன்னல்லே வாலாட்டிக்குக் குருவி கட்டிவச்சிருக்கிற கூட்டுக்குள்ள இருக்கற மூணு குஞ்சுங்க மேலயும் ஆசை. தோட்டத்து மூலையிலே இருக்கிற வில்வமரத்தல கூட்டமா வந்து உட்கார்ற கிளிங்க மேலயும் ஆசை.

"ம்.. எங்கப்பா எனக்கு ஒரு கிளிக்குஞ்சு புடிச்சுத் தர்றேன்னு சொல்லியிருக்காரே ன்னு நான் பிரியாகிட்டே சொன்னேன். உனக்கு என்ன பாலாமணி உசுரோட இருக்கறதெல்லாம் விளையாடக் கெடைக்கும் எனக்கு பாரு..ன்னு" ரூம்முக்குள்ளே பஞ்சு அடைச்ச பொம்மைங்களையும், பிளாஸ்டிக் பொம்மைங்களையும் பிரியா எரிச்சலோட பார்க்கும். "இதுல வேற இந்த பொம்மைங்களை நான் கிழியாம அழுக்குப் படாம, கலர் போகாம இப்படி ஆகாம, அப்படி ஆகாம வச்சுக்கணுமாம்..ன்னு சொல்லறப்ப அதுக்கு மூக்கும் உதடும் துடிச்சுக் கோணி கண்ணு ரொம்பிடும்

அப்போவெல்லாம் எனக் பரியாவைப் பார்க்கப் பாவமாயிருக்கும். பின்னே என்னவாம்? நாகு மாதிரி நாய்க்குட்டி வேணுமுன்னுதானே கேட்டுச்சி. அதுக்கு அவங்க அப்பா என்னா பண்ணாரு தெரியுமா? உருண்டை உருண்டையா கண்ணை வச்சிக்கிட்டுருக்கிற ஒரு நாய்த்தலை பொம்மையை வாங்கிட்டு வந்து அதுவும் உச்சியிலே இருக்கிற கொக்கியிலே கயித்தைக் கட்டி தொங்க விட்டுட்டாரு. பார்க்கவே பயங்கரமா இருந்திச்சு. தலைக்குக் கீழே எதுவுமே இல்லை. ஒரு கவுறு தொங்குது. அதை புடிச்சி இழுத்ததும் கண்ணு ரெண்டும் வெட்டு வெட்டுன்னு இந்தப் பக்கத்துக்கும் அந்தப் பக்கத்துக்குமா போயி போயி வருது. பிரியாவோட அம்மா வந்து அந்த கவுத்தை புடிச்சு இளுத்தாங்க. நாய்க்கண்ணு படக்குபடக்குன்னு முழிக்கிறதைப் பாத்து குட் குட் ன்னு சிரிச்சாங்க. பிரியாவுக்குப் பிடிக்கலை. எனக்கும்தான்.

பிரியா வீட்டுல எப்பவுமே அப்பிடித்தான் அதனோட இஷ்டத்துக்கு எதுவும் நடக்காது. சொன்ன நேரத்துலே எழுந்துக்கணும் சொன்ன நேரத்தில் தூங்கணும். சொன்ன உடுப்பை போட்டுக்கனும். அதுக்கூட பரவாயில்லை. இங்கிலீஷ்லதான் பேசணும் அம்மாகிட்டக் கூட வீட்டுக்கு வர்ர எல்லா விருந்தாளிங்க முன்னாலேயும் அதே இங்கிலீஷ் பாட்டுங்களைப் பாடிக் காட்டணும். சில பேரு டான்ஸ் கத்துக்கறியாமேம்பாங்கஓடனே அவங்க முன்னாலே ஆடிக் காட்டணும். சிலபேரு பாட்டுக் கத்துக்கறியாமேம்பாங்கஓடனே பாடிக்காட்டணும் அய்யய்யோ, ரொம்பக் கஷ்டம்.

போன லீவுக்கு எங்க பெரியம்மா வீட்டுப் பசங்க மாமா புள்ளைங்க எல்லாரும் வந்திருந்தாங்க. ஜாலியா இருந்திச்சு. தும்பி, பொன்வண்டு, வெல்வெட் பூச்சி எல்லாம் புடிச்சோம். தாயபாஸ் ஆடினோம். பச்சக் குதிரை தாண்டுனோம். எங்களோட சேர்ந்து வெளையாடணும்னு பிரியாவுக்கு ஆசை,ஆசயா பார்த்துக்கிட்டு நிக்கும். அதுக்குகூட விட மாட்டாங்க, பிரியா, பிரியான்னு பத்து நிமிஷத்துக்கு ஒரு தடைவ அவங்க அம்மா கூப்பிட்டுகிட்டே இருப்பாங்க. கூப்புட்டு பிரியா, கையில காதுல, கழுத்துலே

போட்டிருக்கிற நகைங்க எல்லாம் பத்திரமா இருக்குதான்னு தொட்டுத்தொட்டுப் பாத்துக்கிட்டு அனுப்புவாங்க.

"மம்மி எனக்கு இந்த நகையெல்லாம் வேணாம் கழட்டிடு, நான் போய் பாலாமமணியோட வெளையாடறேன்..னு பிரியா ஒரு நாள் வாயைத் தொறந்தே சொல்லிடுச்சு. என்ன திமிரா பேசுது பாருங்க இதுன்னு" அந்த அம்மா பிரியாவோட அப்பாகிட்ட சொல்லிடுச்சு அவரு எங்க ரெண்டு பேரையும் சேர்த்து மொறைச்சுப் பார்த்தாரு நான் ஜன்னலுக்கு வெளியே பார்த்தேன்.

எனக்கு வெளங்கவே இல்லை. பெரியவங்க ஏன் இப்படியெல்லாம் பண்றாங்க. அதுலேயும் பிரியாவோட அம்மா இருக்காங்களே அப்பாடி எனக்கு பிரியாவுக்கு எங்கம்மாவுக்கு சமையல்காரருக்கு எல்லாருக்கும் கையிலே துளியூண்டு நகம்கூட இருக்கக்கூடாதாம். இருந்தா வியாதிங்க எல்லாம் வந்துரும்பாங்க. இங்கமட்டும் வாத்து மூக்கு மாதிரி வளத்து என்னென்ன கலரோ பூசிக்குவாங்க. தலையை இருக்கமாகப் பின்னி. ரிப்பன் வச்சுக் கட்டி தூக்கி முடிஞ்சுக்கிட்டுதான் சமையல் ரூம்முக்குள போகணுமுன்னு அம்மாகிட்டே சொல்லுவாங்க இல்லாட்டா பதார்த்தங்கள்ல எல்லாம் முடி வுழுந்துடுமாம் வயத்துக்கு ஆகாதாம். இவங்க மட்டும் எப்பவும் தலைமுடியை முதுகுபூரா பரத்தி விட்டுக்கிட்டிருப்பாங்க. இவங்க தலையில் இருக்கிற முடி மட்டும் கீழே விழாதா? பதார்த்தத்தில் விழாதா, விழுந்தா வயித்துக்கு ஆகுமா? இதே மாதிரிதான் அவங்களே நெனச்சிக்கிட்டாங்கன்னா மத்யதானம் மூனு மணிக்கு பிரியாவை படுத்துத் தூங்கும்பாங்க அந்த நேரம் பார்த்து பாட்டு டீச்சரோ இல்லேன்னா டான்ஸ் சொல்லித்தர அக்காவோ இல்ல யாராவது சொந்தக்காரங்களோ வர்றாங்கன்னு வச்சுக்குங்களேன். உடனே பகல்ல என்ன தூக்கம், தூங்கு மூஞ்சியாட்டம் ..னுவாங்க முழிச்சுக்கிட்டிருந்தாத்தானே அந்த ரைம் சொல்லு, இந்த பாட்டைப் பாடு அந்த டான்ஸ் ஆடுன்னு உசுரை எடுக்கலாம்.

என்னத்துக்கு பிரியா வூட்டுலே இப்படி பண்றாங்கன்னு அம்மகிட்டே கேட்டாப் போதும். அடி செருப்பால களுதைக்கு வாய் எப்படி நீளுது பாரு. அப்படியே போட்டேன்னா பாரு வாய் மேலேயேன்னு" சிரிச்சுக்கிட்டே சொல்லும். அப்பாவும் சிரிப்பாரு. இவங்களும் பெரியவங்கதானே, வேற எப்பிடி இருப்பாங்களாம்.

இருந்தாலும் பிரியாவுக்கு அதிர்ஷ்டம் இல்லதான. இல்லேன்னா இப்படியெல்லாம் ஆவுமா? அப்பாப்பா பிரியா பாவம்பா நம்ப வீட்டுத் தோல்பைக்குள்ள இருக்கிற குருவிக் குஞ்சுங்கள அதுக்கு குடுத்திரலாம்பா..ன்னு நான் அப்பாகிட்டே சொன்னேன். சரின்னாரு. வேண்டாம்ன்னு அம்மா சொல்லிச்சு. பிரியாரூம்ல ஏசி இருக்கில்ல. அதுக்காக கதவு ஜன்னலையெல்லாம் எப்பவும் மூடித்தானே வச்சிருப்பாங்க. அப்படி எப்பிடி அம்மாக் குருவி இரை எடுத்தாந்து ஊட்டுமின்னுச்சி. சரி அப்ப சமையல் ரூம்முக்கு எதுத்தாப்புல இருக்கிற வராந்தாக் கம்பியிலே பையைக் கட்டித் தொங்கவுட்டா என்ன? ன்னேன். அப்படியே கட்னோம். பிரியாவுக்கு சந்தோஷம். அவங்க அப்பா அம்மா கூட வந்து பைக்குள்ளே இருந்த குருவிக் குஞ்சுங்கள எட்டிப் பார்த்தாங்க. அடுப்புச் சாம்பல் பூசி வச்ச ஊமத்தங்கா மாதிரி ஒடம்பும். மெல்ல விசில் அடிச்சதும், தண்ணி தெளிச்சதும் வெடிக்கற கனகாம்பர வெதைமாதிரி ரோஜாப் பூக்கலர் வாய வாய தொறந்துச்சீங்க. எல்லோரும் சிரிச்சாங்க. ஒரே நாளுதான் மறுநாள் பாத்தா குருவிக் குஞ்சுங்களைக் காணோம். பறந்து போச்சாம். சமையல்காரரு பாத்தாராம். பறக்க முடியாம தத்தித்தத்தி தத்தளித்து பறந்துச்சாம் பிரியா அழுதுச்சி.

அழாதம்மா ரெக்கை மொளச்சிடுச்சின்னா குருவி கூட்டுல தங்காது. நீ கவலப்படாத இந்தபை இங்கியே இருக்கட்டும். மறுக்கா குருவி வந்து முட்டை வைக்கும் எங்க வீட்டுல அப்படித்தான் இரண்டு வட்டமும். குஞ்சி பொரிச்சிச்கின்னு அம்மா பிரியாவுக்கு சமாதானம் சொல்லிச்சு. ஆனா குருவி மறுபடியும் வந்து அந்த பைக்குள்ளெ முட்டை வைக்கவே இல்லை இதை பிரியாவோட அதிர்ஷ்டம்னு சொல்லாம என்னன்னு சொல்லறது?

பிரியாவை சமாதனம் பண்ணறதுக்குன்னு அவங்க அப்பா, கடையிலேயிருந்து ஒரு சுவர்க்கடிகாரம் வாங்கிட்டு வந்தாரு. கடியாரத்துக்கு கீழே இருக்கிற வட்டத்துக்குள்ளே இருந்து அப்பப்ப குருவிங்க வெளியே வந்து தலையை மட்டும் வெளியே நீட்டி வீச்சுவீச்சுன்னு கத்தும் பிளாஸ்டிக் குருவிங்கதான்.

இப்ப பாருங்க, பிரியாவோட பொறந்த நாளுக்கு வீட்டை அலங்காரம் பண்ண ஆரம்பிச்சாச்சு வீட்டை சுத்தித்தான் ஏராளமான இடமாச்சே அம்மா சொல்லறாப்பல ஒடம்பு வளஞ்சு பயிறு வச்சா பத்துக்குடும்பம் ஒக்காந்து சாப்பிடறயாப்பல அத்தினி பெரிய எடம். அவ்வளவையும் அடைக்கிறாப்பல அலங்காரம் அதுலயும் முக்கால்வாசி பிளாஸ்டிக்தான்.

மரத்துள எல்லாம் வெளக்குப் போட்டாங்க. அதை வேடிக்கை பார்த்துக்கிட்டு நின்னிருந்த என்னை பிரியா கூப்பிட்டுச்சி. பொறந்த நாளு விருந்துக்கு வாற சின்னப் பசங்களுக்கு கிஃப்ட் பாக்கெட்டுங்க பண்ண மம்மி உன்னை கூப்பிடறாங்''.. கன்னுச்சி கிஃப்ட்டுன்னா பரிசாமே... இது அப்புறமாத்தான் எனக்குத் தெரிஞ்சிச்சு. போன தடைவ பிரியாவுடைய பிறந்த நாளுக்கு வந்தவங்களுக்கெல்லாம் அட்டைப் பெட்டிக்குள்ள லட்டு, மைசூர்பாக்கெல்லாம் தான் வச்சுக் குடுத்தாங்க. எனக்குக்கூட ஒரு பொட்டி குடுத்தாங்க.

இந்த தடைவ பொம்மை போட்ட புஸ்தகம் ஒண்ணு, கலர்க்குச்சிங்க, அதோட கூட ஒரு சின்ன வண்டுப் பொட்டி, எனக்கு அந்த வண்டுப் பொட்டி ரொம்பப் பிடிச்சது.

எங்கியோ வெளிநாட்டுல இருக்கற பிரியாவோட மாமா மொத்தமா வாங்கி நெறய பொட்டிங்க அனுப்பிச்சிருந்தாரு. பாதாங்கொட்டை மாதிரி இருந்தது அந்த பொட்டி. நெறம், சைசு எல்லாம் அசல் பாதாங் கொட்டை மாதிரி. பள்ளம் பள்ளமா சின்னக் கோடுங்க. கீழ்ப்பக்கத்துல மல்லிப்பூ மொட்டு நுனி மாதிரி நீட்டிக்கிட்டிருந்த குட்டியூண்டுப் பொத்தானை அழுத்தினதும் அந்தப் பாதாங்கொட்டை ஜிவ்வுன்னு மெதுவாத் தெறந்துச்சி. உள்ளுக்குள்ள மருதாணிப்பூ நெறத்துல பொறி பொறியா கருப்புப் புள்ளி வச்சாப்பல இருந்த சின்ன வண்டு காலுங்கள பரபரன்னு அசைச்சிச்சு. பார்த்ததும் நிஜ வண்டுன்னே ஏமாந்து போயிட்டேன். அப்பிடியே நிஜமாகவே காலுங்களை ஆட்டி கிட்டு நவுந்து வர்றாப்பல தெரிஞ்சது. அப்புறமா பிரியா சொல்லுது, அது நிஜ வண்டு இல்லியாம். தலைமுடி மாதிரி மெலிசு மெலீசா இருக்கற கருப்புக் கம்பியிலே காலுங்க பண்ணி அந்தரத்துல விட்டிருக்குதாம். அது காத்து பட்டதும் அப்பிடி நெறியுதாம். அப்புறம்தான் பார்த்தேன். காலுங்க மட்டும் ஓயாம நெறிஞ்சுதே தவிர வண்டு இந்த எடத்திலேயேதான் இருந்துச்சி.

''ஏமாந்தியா, ஏமாந்தியா, நல்லா ஏமாந்தியா''ன்னு பிரியா சிரிச்சது. நானும் சிரிச்சேன். இருந்தாலும் அந்த வண்டுப் பொட்டி எனக்குப் புடிச்சது. ஒவ்வொரு பெட்டியையும் பைக்குள்ள போடறதுக்கு முன்னால தெறந்து தெறந்து கொஞ்ச நேரம் பாத்துக்கிட்டிருந்துட்டு அப்புறமா பைக்குள்ள வச்சேன்.

''குட்டி! சும்மாச்சும்மா அந்தப் பொட்டிங்களை அப்பிடித் தெறந்து தெறந்து மூடாத. பட்டன் லுசாயிடப் போவுது''ன்னு பிரியாவோட அம்மா சொன்னாங்க. அதனால அந்தம்மா பாக்காத வேளையில மட்டும் நைசாத் தொறந்து தொறந்து பாப்பேன். அவுங்க என்னையே பாத்துக்கிட்டிருக்கறப்ப பொட்டியை மட்டும் கொஞ்ச நேரம் கையில வச்சிட்டிருந்துட்டு அப்புறமா பைக்குள்ள போட்டுடுவேன். பொட்டிகூட நல்லா அழகாத்தான் இருந்திச்சு.

ஆமா, பிரியாவோட மாமா இந்தப் பொட்டிங்களை கணக்குப் பார்த்து எண்ணித்தான் வாங்கி அனுப்பியிருப்பாரா? எத்தினி சின்னப்பசங்க பிரியாவோட பொறந்த நாளைக்கு வருவாங்கங்கிற கணக்கு அவருக்கு எப்பிடித் தெரியும்? இவங்க எழுதியிருப்பாங்க. எழுதாமலா இருப்பாங்க? இவங்க கார்டு அனுப்பறவங்க வீட்டு மனுசாள்தானே சாப்பாட்டுக்கு வருவாங்க. அவங்க வீட்டுல எத்தினி சின்னப்பசங்க இருப்பாங்கன்னு இவங்களுக்குத் தெரியாதா என்ன?

சரி, இப்ப எனக்கு எதுக்கு இந்தப் கணக்கெல்லாம்? எதுக்குன்னா, எல்லாருக்கும் குடுத்து மிச்சம் இருந்தாத்தானே எனக்குக் குடுப்பாங்க. அதுக்குத்தான் இல்ல. இல்லே. எனக்கும் சேத்துத்தான் கணக்குப் போடப் சொல்லியிருப்பாங்க. அதனால கட்டாயம் எனக்கும் ஒரு பொட்டி கிடைக்கும். நிச்சயமா கெடைக்குமா? கெடைக்காதா? நாள் பூரா நான் இதையே நெனைச்சிகிட்டிருந்தேன். எல்லாப் பையையும் கலர் பேப்பருலே சுத்தி விரல் அகல சிவப்புச்சாட்டின் ரிப்பன்லே குஞ்சலம் மாதிரி கட்டி தனியா ஒரு மூலையிலே அடுக்கி வச்சோம். கிஃப்ட்டுன்னா அப்பிடித்தான் பூப்போட்ட கலர் பேப்பரூல சுத்தி வழுவழுங்கிற ரிப்பன் போட்டுக் கட்டணுமாம்.

பொறந்த நாளுக்கு வறவங்க எல்லாம் ப்ரியாவிற்குக் கூட இப்பிடித்தான் பொட்டலம் கட்டி எடுத்தாருவாங்க. நானும் பிரியாவுக்கு ஏதாவது கிப்ஃட் தரணும்னு ஆசையா இருந்துச்சு. கிஃப்டுன்னு சொல்றப்பவெ நாக்கு மேல அல்வாத்துண்டு வழுக்கிக்கிட்டு போறாப்பல நல்லா இருந்திச்சு. பிரியாவுக்குத் தெரியாம ஒளிச்சு வச்சிருந்த பானைக்கண்ணு கோலியையும் புளியம்பூக் கோலியையும் என்னோட மரப்பாச்சிங்களையும் போட்டு சமையல்காரு அழகா கட்டிக் குடுத்தார். சிவப்பு ரிப்பன்தான் இல்லை. வெள்ளை மணிக்கயிறு போட்டுக் கட்டி கலர் பேப்பர் ஒட்டி, ஒரு மூலையில் பூ ஒட்டி, ஜோராப் பண்ணித் தந்தாரு. அத ஒரு பக்கமா மறச்சி வச்சுட்டு நான் வண்டுப் பொட்டி போட்டுக் கட்டின பொட்டலங்களையே தொட்டுத் தொட்டுப் பாத்துக்கிட்டிருந்தேன்.

சாயங்காலம் இருட்ட ஆரம்பிச்சதும் விருந்தாளிங்க வந்து இறங்க ஆரம்பிச்சாங்க. ஒவ்வொரு காரா வந்து நின்னதும் நான் அதிலே இருந்து எறங்கின சின்னப்பசங்களை எண்ணிப் பார்த்துக் கணக்குப் போட்டேன். நாங்க கட்டி வச்சிருக்கிற பொட்டலங்களைவிட அதிகமாக புள்ளைங்க வந்துடிச்சீங்கன்னா எனக்கு வண்டுப் பொட்டி கெடைக்காம போயிருமே! சாமி சாமி! அப்படி ஆயிடாம பாத்துக்கன்னு ஆலமரத்துப் புள்ளையாரை வேண்டிக்கிட்டேன்.

நல்லவேளை, வந்த புள்ளங்களக் கணக்குப் போட்டுப் பார்த்தப்ப ஏழெட்டுப் பொட்டிங்க மிச்சமாயிடும் போல இருந்துச்சி. சின்னப்பசங்க தூங்கிடும்னு மொதல்ல அதுங்களுக்கு சாப்பாடு கொடுத்தாங்க. ரொம்ப நல்ல வேலைதான்னு நெனச்சிகிட்டேன். பிரியாவும் சாப்பிட்டுச்சி. நான் விலா மரத்துக்குப் பின்னால நின்னவாகுல பார்த்துக்கிட்டே இருந்தேன். கொஞ்ச நேரத்துல பிரியா தூங்கித் தூங்கி விழுந்துச்சி. பிரியாவை எடுத்துக்கிட்டு, அவங்க அம்மா பின்பக்கம் வந்தாங்க. நான் இதுதான் சமுயமுன்னு பிரியாவுக்குக் குடுக்கறதுக்காக ரெடி பண்ணி வச்சிருந்த கிப்ட் பொட்டலத்தைப் போய் எடுத்துக்கிட்டு ஓடி வந்தேன்.

பிரியாவுடைய அம்மா என் தோளை தட்டிக் கொடுத்து, "அடடே! ரொம்ப அழகா கட்டியிருக்கியேன்னு" சிரிச்சாங்க. பிரியா பொட்டலத்தை பரபரன்னு பிரிச்சது. கோலிங்களையும் மரப்பாச்சியையும் பார்த்ததும் அதுக்கு பயங்கர சந்தோஷம். தூக்கமே போயிடுச்சி. நான் வெளையாடறேம்மா"ன்னது. "சரி! இப்டி ஹால்லேயே வெளயாடுன்னுட்டு பிரியாவோட அம்மா வெளியே போனாங்க.

ஒரு வேளை எனக்கு தரர்றதுக்கு ஒரு கிஃப்ட் பொட்டலத்தை எடுத்துகிட்டு வரதுக்குதான் போறாங்களோ? அதுக்காவத்தான் இருக்கும். இருக்குமான்னு நெனச்சேன்.

பிரியாவோட நெட் டிரசை எடுத்துக்கிட்டு அவங்க வந்தாங்க. என்னோ கை நெறைய ரூபா நோட்டுங்கள வச்சாங்க. "குட்டி! பத்திரமா இதைக் கொண்டு போய் உங்கம்மா கையிலே குடுடி. இருநூத்தியைம்பது ரூபாய் இருக்குதடி. பத்திரம். இதுதான் பிரியாவோட பொறந்த நாளுக்கு நாங்க உனக்குத் தர கிஃப்ட்" ன்னாங்க.

அப்ப எனக்கு வண்டுப் பொட்டி கிடையாதா?..... இது தானா இவங்க எனக்குத் தர்ர கிஃப்ட்? சின்னப் பசங்களுக்கெல்லாம் தர்ரதுக்குன்னுதானே கிஃப்ட் பொட்டலம் கட்டினாங்க. நான் மட்டும் சின்னப் பசங்களோட சேர்த்தியில்லையா? எனக்கு அழுகை அழுகையா வந்தது.

என்னால அங்க நிக்க முடியலை. கண்ணைத் தொடச்சிகிட்டு எங்க வீட்டுக்கு ஓடினேன். அம்மாகிட்ட போய் பணத்தைக் கொடுத்துட்டு அழுதேன். ரூபா நோட்டுங்களை அம்மா எண்ணிப் பாத்துச்சி.

"என்னங்க! இதப் பாருங்க. ஏதோ அம்பது நூறு தருவாங்கன்னு இருந்தேன். ஒரே முட்டா இருநூத்தி அம்பமது ரூபா கொடுத்தனுப்பியிருக்காங்க. இந்தக் குட்டி கெட்டிக்காரிதான். ரெண்டு கோலியையும், பழைய மரப்பாச்சிங்களையும் குடுத்துட்டு இத்தின ரூபா வாங்கியாந்துட்டாளே"ன்னு என்னைப் பார்த்துச்சு, நான் அழுதுகிட்டிருந்தேன்.

"எதுக்குடி இப்ப அழுவறே" ன்னிச்சு. நான் பதில் சொல்லாமே அழுதுகிட்டே இருந்தேன். "சொல்லேண்டி எருமை"ன்னிச்சு......

நான் போய் அப்பாகிட்டே உட்காந்துகிட்டேன். வண்டுப் பொட்டியைப் பத்தி சொன்னேன். அப்பா பேசாமக் கேட்டுக் கிட்டாரு. என்னை மடியிலே படுக்கவச்சி கண்ணைத் தொடச்சி விட்டாரு. முதுகு, தலை எல்லாம் தடவி விட்டாரு. நான் அப்பாவை நிமிர்ந்து பார்த்தேன். விளக்கு வெளிச்சத்துல அவரு கண்ணு பளபளன்னிச்சி, "அப்பா, நீயும் அழுவுறியா" ன்னேன். "இல்லடா"ன்னாரு.

****************************************

# விடியுமா ?

## கு. ப. ராஜகோபாலன்

தந்தியைக் கண்டு எல்லோரும் இடிந்து உட்கார்ந்துபோனோம். அதில் கண்டிருந்த விஷயம் எங்களுக்கு அர்த்தமே ஆகவில்லைபோல் இருந்தது.

'சிவராமையர்—டேஞ்ஜரஸ்—' என்ற இரண்டு வார்த்தைகளே இருந்தன. தந்தி சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியிலிருந்து வந்திருந்தது.

என் தமக்கை இரண்டு மாதங்களுக்கு முன்புதான் சென்னையிலிருந்து வந்தாள். அப்பொழுது எங்கள் அத்திம்பேர் நன்றாகக் குணமடைந்து விட்டார். க்ஷயத்தின் சின்னம் கொஞ்சங்கூட இல்லையென்று பிரபல வைத்தியர்கள் நிச்சயமாகச் சொல்லிவிட்டார்கள்.

ஓங்கித் தலையில் அடித்ததுபோலக் குஞ்சம்மாள் பிரமை தட்டிப் போய் உட்கார்ந்திருந்தாள்.

எங்கள் எல்லோருடைய மனத்திலும் ஒரு பெருத்த போர் நடந்து கொண்டிருந்தது. இருக்காது!', 'ஏன் இருக்கக்கூடாது ? இருக்கும்!' என்று இரண்டு விதமாக மனத்தில் எண்ணங்கள் உதித்துக் கொண்டிருந்தன. 'இருக்கும்!' என்ற கட்சி, தந்தியின் பலத்தில் வேரூன்றி வலுக்க வலுக்க, 'இருக்காது!' என்ற கட்சி மூலைடுமுக்குகளிலெல்லாம் ஓடிப்பாய்ந்து தனக்குப் பலம் தேட ஆரம்பித்தது.

தந்தியில் கண்டிருந்ததைத் திரும்பத் திரும்பப் படித்தோம். அதில் ஒன்றும் பிசகு இருக்கவே முடியாது. சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியிலிருந்துதான் வந்திருந்தது. சந்தேகமில்லை. காலையில் அடித்திருக்கிறார்கள். குஞ்சம்மாள் பேருக்குத்தான்! தவறு எப்படி இருக்க முடியும் ?

ஆனால், இவ்வளவு சீக்கிரத்தில் என்ன நேர்ந்திருக்க முடியும் ? மூன்று நாட்களுக்கு முன்புதானே கடிதம் வந்தது ? ஏதாவது உடம்பு சௌகரியமில்லாமல் இருந்தால் அதில் எழுதாமல் இருப்பாரோ ?

என் தமக்கையும் நானும் சாயந்தரம் ரெயிலில் சென்னைக்குப் புறப்பட்டோம். அது தான் அன்று கும்பகோணத்திலிருந்து சென்னைக்குப் போகும் முதல் வண்டி.

புறப்படுவதற்கு முன் நல்லவேளை பார்த்துப் 'பரஸ்தானம்' இருந்தோம். சாஸ்திரிகள், 'ஒண்ணும் இருக்காது. கிரகம் கொஞ்சம் பீடிக்கும், அவ்வளவுதான்!' என்றார். அம்மா, தெய்வங்களுக்கெல்லாம், ஞாபகமாக ஒன்றைக் கூடவிடாமல், பிரார்த்தனை செய்துகொண்டு, மஞ்சள் துணியில் காணிக்கை முடிந்து வைத்தள். குஞ்சம்மாளுக்கு மஞ்சள் கிழங்கு, குங்குமம், புஷ்பம், வெற்றிலைபாக்கு, க்ஷேமதண்டுலம் எல்லாம் மறந்து போகாமல் மடிநிறையக் கட்டிக்கொடுத்தாள். பசியுடன் போகக்கூடாது என்று, புறப்படும்கொழுது கட்டாயப்படுத்தி இருவரையும் சாப்பிடச் செய்தாள். குஞ்சம்மாள், இயந்திரம் போல சொன்னதையெல்லாம் செய்தாள். 'ஸ்வாமிக்கு நமஸ்காரம் பண்ணு!' என்றதும் போய் நமஸ்காரம் செய்தாள்.

அவள் கதிகலங்கிப் போயிருந்தாள் என்பது அவள் பேச்சற்றுப் போயிருந்ததிலிருந்தே நன்றாகத் தெரிந்தது. அவளுடைய கலகலப்பு, முதல் தடவையாக அன்று, எங்கோ அடங்கிவிட்டது.

அம்மா வாசலில் போய்ச் சகுனம் பார்த்தாள். திவ்யமான சகுனம். காவேரியிலிருந்து அடுத்தவீட்டுச் சுந்தரி ஜலம் எடுத்துக் கொண்டு எதிரே வந்தாள்.

ஒண்ணும் இருக்காது! நமக்கேன் அப்படியெல்லாம் வரது ? நாம் ஒருத்தருக்கு ஒண்ணும் கெடுதல் எண்ணல்லே' என்றெல்லாம், அம்மா அடிக்கடி தன்னையும் பிறரையும் சமாதானம் செய்து கொண்டிருந்தாள்.

ரெயில் ஏறுகிறபோது மணி சுமார் எட்டு இருக்கும். இரவு பூராவும் போயாக வேண்டுமே என்று துடித்தோம். போய் இறங்குவதற்குமுன் செய்வதற்கு ஒன்றுமில்லை என்றதால், கொஞ்சங் கொஞ்சமாகத் துடிப்பும், கலக்கமுங்கூட மட்டுப்பட்டன. இரண்டு ஜன்னல்களின் அருகில் நேர் எதிராக இரண்டு பெஞ்சுகளில் உட்கார்ந்தோம்.

'நீ புறப்படுகிறபோது ஒன்றுமே இல்லையே, அக்கா?' என்றேன், ஏதாவது பேச்சுக் கொடுக்க வேண்டும் என்று.

'ஒண்ணுமில்லையே! இருந்தால் புறப்பட்டு வருவேனா?' என்று அவள் ஏக்கம் நிறைந்த குரலில் பதில் சொன்னாள்.

'அதற்குள் திடீரென்று ஒன்றும் ஏற்படுவதற்குக் காரணமே இல்லையே!'

எது எப்படியானாலும், மனசைச் சில மணி நேரங்களாவது ஏமாற்றித் தத்தளிப்பைக் கொஞ்சம் குறைத்துக் கொள்ளலாம் என்று நினைத்தது போலப் பேச்சு வெளிவந்தது.

'நான், இந்த நோன்பிற்காக இங்கே தாமதம் செய்யாமல், போயிருக்காமல் போனேன்!'

'ஒருவேளை, அக்கா, நோன்பிற்காக நீ இங்கே இருந்துவிட்டதுதான் அத்திம்பேருக்குக் கோபமோ? அவர் உடனே வரும்படியாக எழுதியிருந்தார். நாம் ஒரு வாரத்தில் வருவதாகப் பதில் எழுதினோம். அதற்காகத்தான் இப்படித் தந்தி அடித்துவிட்டாரோ?'

'ஆஸ்பத்திரியிலேயிருந்து வந்திருக்கே?'

'ஆஸ்பத்திரி பேரை வைத்து அத்திம்பேரே அடிக்கக் கூடாதா?'

அப்படி அடிக்க முடியுமோ? குஞ்சம்மாள் குரலில் ஆவல் இருந்தது.

'ஏன் முடியாது? தந்தியாப்பீஸில்–'

'ஒருவேளை அப்படியிருக்குமோ?' என்று கேட்டபொழுது குஞ்சம்மாளின் முகம் கொஞ்சம் மலர்ந்து விட்டது.

'அப்படித்தான் இருக்கவேண்டும். இப்படித் திடீரென்று ஒன்றும் ஏற்படக் காரணமே இல்லை. முந்தா நாள் தானே கடிதாசு வந்தது?'

'ஆமாம்! அதில் ஒடம்பப் பத்தி ஒண்ணுமே இல்லையே?'

'தந்தி அடித்தால் நாம் உடனே புறப்பட்டு வருவோம் என்று தான் அடித்திருக்கிறார். வீட்டிலிருந்து அடித்தால்கூட அவ்வளவு தாக்காது என்று ஆஸ்பத்திரி பேரை வைத்து அடித்திருக்கிறார்'.

'அப்படி அடிக்க முடியுமாடா, அம்பி? அப்படியிருக்குமா?' என்று மறுபடியும் குஞ்சம்மாள் சந்தேகத்துடன் கேட்டாள்.

அவள் அப்படிக் கேட்ட பொழுது, முடியாது என்று எனக்குத் தெரிந்திருந்தால்கூடச் சொல்ல மனம் வந்திருக்குமோ, என்னவோ?

'நீ வேண்டுமானால் பாரேன்! எழும்பூர் ஸ்டேஷனில் வந்து இருக்கப் போகிறார்' என்றேன்.

மனத்தில், ஆழத்தில் பீதி அதுபாட்டிற்குப் புழுப்போலத் துளைத்துக் கொண்டே இருந்தது. மேலே மட்டும் சமாதானம் கொஞ்ச நேரத்திற்கு ஒரு தரம் அந்தத் திகில் மேல்மட்டத்திற்கு வந்து

தலையெடுக்கும்; உடம்பு பதறும்; நெஞ்சு உலரும்; அடிவயிறு கலங்கும்; முகம் விகாரமடையும். மறுபடியும் மெதுவாகச் சமாதானத்தின் பலம் அதிகமாகும்; பயத்தைக் கீழே அமுக்கிவிடும்.

சுகமோ துக்கமோ எந்த நிலைமையிலும் நீடிக்க முடியாது என்பதற்கு மனித சுபாவத்தில் இதுவும் ஓர் அத்தாட்சியோ ?

ரெயில் வண்டி வெறி பிடித்தது போல் தலைதெறிக்க ஓடிக்கொண்டிருந்தது; எங்கேயோ சென்னையில் விடியப்போகும் ஒரு காலையை நோக்கிக் கனவேகமாகப் போய்க்கொண்டிருந்ததுபோல் இருந்தது.

துக்கத்தில் தலையெடுக்கும் தைரியம்போல தொலைஇருளில் அந்த ஒளித்தொடர் விரைந்து சென்று கொண்டிருந்தது.

சென்னை போய்ச் சேரும்பொழுது, எங்கள் கவலையும் அந்த இருளைப் போலப்பின் தங்கிவிடாதா ? நிம்மதி, காலையைப் போல, அங்கே எங்களை வந்தடையாதா ? இருள், நிச்சயம் கூட வராது! சென்னையில் காலைதான்! – இவ்வாறெல்லாம் பேதைமனம் தன்னைத் தேற்றிக் கொண்டே இருந்தது.

குஞ்சம்மாள் மூட்டையிலிருந்து வெற்றிலை பாக்கை எடுத்து எனக்குக் கொடுத்துத் தானும் போட்டுக் கொண்டாள்.

எங்களவர்க்குள்ளேயே குஞ்சம்மாள் அதிக அழகு என்று பெயர். நல்ல சிவப்பு; ஒற்றை நாடித்தேகம்; அவளுக்குத் தெருவிலேயே ஒரு செல்வாக்கு உண்டு.

அன்று என்னவோ, இன்னும் அதிகமாக, அவள் ஒளிர்ந்து கொண்டிருந்தாள். அவள் முகத்தில் என்றுமே இல்லாத ஓர் ஏக்கம் அன்று முதல் முதலாகத் தென்பட்டதாலோ என்னவோ, அவள் அழகு மிளிர்ந்து தோன்றினாள்,

குஞ்சம்மாளுக்குப் புஷ்பம் என்றால் பிராணன். யார் கேலி செய்தாலும் லட்சியம் செய்யமாட்டாள். தலையை மிஞ்சிப் பூ வைத்துக் கொள்ளுவாள். ஆனால் அன்று அவள் தலையில் வைத்துக் கொண்டிருந்த பூவைப்போல, அது என்றும் சோபித்ததில்லை என்று என் கண்களுக்குப்பட்டது. வெற்றிலைக் காவி அவளுடைய உதடுகளில் அன்று தான் அவ்வளவு சிவப்பாகப் பிடித்திருந்ததுபோல இருந்தது.

சோர்வில்தான் சௌந்தரியம் பரிமளிக்குமோ ? அல்லது– ? கடைசியாக. அணைவதற்கு முன்னால், விளக்கு– ? இல்லை ! இல்லை !

குஞ்சம்மாள் அன்று என்னவோ அப்படி இருந்தாள்.

வெற்றிலையைப் பாதி மென்றுகொண்டே, ‘அம்பி, ஒங்க அத்திம்பேருக்கு வாக்கப்பட்டு நான் என்ன சுகத்தைக் கண்டேன் ?’ என்றாள் குஞ்சம்மாள்.

அவளுடைய கண்களில் ஜலம் மளமளவென்று பெருகிற்று.

‘என்னிக்கும் பிடிவாதம், என்னிக்கும் சண்டை, நான் அழாத நாள் உண்டா ?– என் வாழ்வே அழுகையாக–’ என்று உணாச்சி வேகத்தில் ஆரம்பித்தவள் சட்டென்று நிறுத்திக்கொண்டாள்.

எதிலாவது நான் சொன்ன பேச்சைக் கேட்டது உண்டா ? எப்படியோ ஆயுசுடன் இருந்தால் போதுமென்று தோன்றிவிட்டது, போன தடவை உடம்புக்கு வந்தபோது ! ’

இருவரும் வெகுநேரம் மௌனமாக இருந்தோம். ஆனால் மனசு மட்டும் மௌனமாக இருக்கவில்லை.

நல்ல நிசிவேளை. வண்டியில் ஜனங்கள் உட்கார்ந்து கொண்டும் படுத்துக்கொண்டும் அநேக தினுசாகத் தூங்கிக்கொண்டிருந்தார்கள். வண்டி ஒரு சின்ன ஸ்டேஷனில் நின்றதும், சிலர் எழுந்து இறங்கிப் போவார்கள், மௌனமாகப் பிசாசுகள் போல. அப்பொழுதுதான் தூங்கி எழுந்த சிலர், 'இதென்ன ஸ்டேஷன்?' என்று தலையை நீட்டிக் கேட்பார்கள். போர்ட்டர் ஒருவன் ஏதாவது ஒரு ஸ்டேஷன் பெயரை அரைகுறையாகத் தூங்கி வழிந்துகொண்டே சொல்லுவான். மறுபடியும் வண்டி பூரான் மாதிரி ஓட ஆரம்பிக்கும்.

சுமார் ஒரு மணிக்கு வண்டி விழுப்புரம் ஸ்டேஷனுக்குள் ஆர்ப்பாட்டத்துடன் போய் நின்றது. அதுவரையிலும் வண்டியில் அமைதியும் நிசப்தமும் இருந்தன. அந்த ஸ்டேஷனில் கூட்டமும் கூக்குரலும் அதிகமாயின. அது வரையில் காலியாகவே வந்த எங்கள் பலகையில் சாமான்கள் நிறைந்தன. நகரத்தார் இனத்தைச் சேர்ந்த பெண்மணி ஒருத்தி, பெண் குழந்தையும் புட்டியுமாக என் தமக்கையின் பக்கத்தில் வந்து உட்காந்தாள்.

அவள் அணிந்திருந்த முதல் தரமான வைரங்களுடன் அவள் முகமும் ஜொலித்துக் கொண்டு இருநுதது. ஏதோ ஓர் உள்ளப் பூரிப்பில் அவள் தன்னையே மறந்து தன் குழந்தையுடன் கொஞ்சினாள்.

வண்டி புறப்பட்ட சற்று நேரத்திற்கெல்லாம் என் தமக்கையின் பக்கம் தன் புன்னகை பூத்த முகத்தைத் திருப்பி; 'எங்கிட்டுப் போறீங்க அம்மா?' என்று கேட்டாள்.

என் தமக்கை சுருக்கமாக, 'பட்டணம்' என்றாள்.

நானும் அங்கேதாம்மா வாரேன்!, என்று ஆரம்பித்து, அந்தப் பெண் வரிசையாகக் கேள்விகள் கேட்டுக் கொண்டே இருந்தாள். பிறகு தன் பக்கத்திலிருந்த ஓலைப் பெட்டியிலிருந்து கொஞ்சம் மல்லிகைப்பூ எடுத்துக் குஞ்சம்மாளுக்குக் கொடுத்தாள்.

என் தமக்கை மெய்சிலிர்த்துப் போனாள். வெகு ஆவலுடன் அந்தப் பூவை வாங்கி ஜாக்கிரதையாகத் தலையில் வைத்துக்கொண்டாள். அம்பாளே அந்த உருவத்தில் வந்து தனக்குப் பூவைக் கொடுத்து, கவலைப்படாதே! உன் பூவிற்கு ஒருநாளும் குறைவில்லை!' என்று சொன்னது போல எண்ணினாள்.

அது வரையில் அவளுக்கு ஒவ்வொரு வார்த்தை பதில் சொல்லிக் கொண்டு வந்தவள், உடனே இளகி, அவளிடம் சங்கதி பூராவும் சொன்னாள்.

'மகாலட்சுமி போலே இருக்கீங்கம்மா! ஒங்களுக்கு ஒண்ணும் கொறவு வராது!' என்று அவள் சொன்னதைத் தெய்வ வாக்காக எடுத்துக் கொண்டுவிட்டாள் குஞ்சம்மாள். அந்த ஆறுதலில் கொஞ்ச நேரம் அவளுடன் கவலை மறந்து பேசிக் கொண்டிருந்தாள்.

திடீரென்று ஞாபகம் வந்துவிட்டது. ஏதோ பெருத்த குற்றம் செய்தவள் போலத் திகிலடைந்தாள். 'ஐயய்யோ! பைத்தியம் போல் இப்படிச் சிரிச்சுண்டு பேசிக் கொண்டிருக்கேனே! என்று எண்ணினவள் போல அவள் கலவரமடைந்தது நன்றாகத் தெரிந்தது. வண்டிபோன வேகத்தில் விர்ரென்று அடித்த காற்றிலும் அவளுடைய முகத்தில் வியர்வை தென்பட்டது.

ஆனால் எவ்வளவு நேரந்தான் கவலைப்பட முடியும்? கவலையால் ஏற்பட்ட அசதியிலேயே எங்களை அறியாமல் கண்ணயர்ந்தோம்.

துக்கத்தில், நித்திரையும் நினைவு மறதியும் சேர்ந்து தான் வாழ்க்கைக்கு ஒரு சிறு போதையாகித் தாபத்தைத் தணிக்கின்றனவோ?

வண்டி செங்கற்பட்டை நெருங்குகிற சமயம். வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்து உட்கார்ந்தோம். கிழக்கு வெளுத்துக் கொண்டிருந்தது. வண்டி ஏதோ ஒரு குக்கிராமத்தைக் கடந்து போய்கொண்டிருந்த பொழுது கோழி கூவியதுகூடக் காதில் வந்துபட்டது.

'அப்பா! விடியுமா ?' என்கிற நினைப்பு ஒருபக்கம்.

'ஐயோ! விடிகிறதே! இன்னிக்கி என்ன வச்சிருக்கோ!' என்ற நினைப்பு மற்றொரு பக்கம்.

இரவின் இருட்டு அளித்திருந்த ஆறுதலைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தலைகாட்டிய வெளிச்சம் பறிக்க வருவதுபோல் இருந்தது.

எங்கேயோ, கண்காணாத தூரத்தில் உருவடைந்த ஒரு காட்சியில் ஈடுபட்டவளாய் நிலைகுத்திய பார்வையுடன் குஞ்சம்மாள் அசையாமல் உட்காந்திருந்தாள்.

'செங்கற்பட்டில் பல் தேய்த்துக்கொண்டு காபி சாப்பிடுவோமா ?' என்று கேட்டேன்.

'எல்லாம் பட்டணத்தில்தான்!' என்று சொல்லிவிட்டாள் குஞ்சம்மாள். பக்கத்தில் நகரத்தார் பெண் கவலையற்றுத் தூங்கிக் கொண்டிருந்தாள்.

'இதோ ஆயிற்று, இதோ ஆயிற்று!' என்று சொல்வதுபோல வண்டி தாவிப் பறந்து கொண்டிருந்தது.

ஆனால் எங்களுக்கு என்னவோ பட்டணம் நெருங்க நெருங்க, வண்டி வேண்டுமென்றே ஊர்வதுபோல இருந்தது.

எழும்பூர் வந்தது கடைசியாக.

ஸ்டேஷனில் யாருமில்லை; அதாவது எங்கள் அத்திம்பேர் இல்லை எல்லோரும் இருந்தார்கள். 'ஆனால் அவர் ஸ்டேஷனுக்கு எதற்காக வரவேண்டும் ? அங்கே எதிர்பார்ப்பது சரியில்லைதான்' என்று அப்பொழுது தோன்றிற்று.

வீட்டுக்குப் போனோம். வீடு பூட்டியிருந்தது.

உடம்பு சௌகரியமில்லைதான்! சந்தேகமில்லை இப்பொழுது!

ஜெனரல் ஆஸ்பத்திரிக்குப் போனோம். அரைமணி நேரம் துடித்த பிறகு குமாஸ்தா வந்தார்.

'நீங்கள் கும்பகோணமா ?' என்றார்

'ஆமாம்—' என்றேன்.

'நோயாளி—நேற்றிரவு—இறந்துவோய்விட்டார்' என்று குமாஸ்தா சாவதானமாகச் சொன்னார்.

'இறந்து— ? அது எப்படி ? அதற்குள்ளா ?' அப்பொழுதும் சந்தேகமும் அவநம்பிக்கையும் விடவில்லை.

'சிவராமையர்— ?'

ஆமாம், ஸார்!'

'ஒரு வேளை—'

'சற்று இருங்கள். பிரேதத்தைப் பெற்றுக் கொள்ளலாம்' என்று சுருக்கமாகச் சொல்லிவிட்டுக் குமாஸ்தா தம் ஜோலியைக் கவனிக்கப் போனார்.

கொஞ்ச நேரம் கழித்துப் பிரேதத்தைப் பெற்றுக் கொண்டோம்.

அப்பொழுது, அதைப் பார்த்தவுடன், நிச்சயமாயிற்று!

ஒரு வழியாக மனத்திலிருந்த பயம் தீர்ந்தது; திகில் தீர்ந்தது.

பிறகு– **?**

விடிந்துவிட்டது.

****************************************

# மிருகம்

**வண்ண நிலவன்**

நார்ப் பெட்டியில் கொஞ்சம் சுள்ளி விறகுகளைத் தவிர வேறு ஒன்றுமில்லை. ஆனாலும் கூட பெட்டி கனமாக இருந்தது. பெட்டியை இறக்கிக் கீழே வைத்துவிட்டு, ஓரமாக நின்றிருந்த குத்துக் கல்லின் மேல் உட்கார்ந்தார் சிவனு நாடார். அவர் உடம்பிலிருந்து அடித்த நாற்றம் அவருக்கே குமட்டியது. பீடி குடித்தே ஏழெட்டு நாளாகி விட்டன. ஆனால், இன்னமும் பீடிவாடை முகத்துக்குள் வீசியது.

வரிசையாக எல்லா வீட்டுப் புறவாசல்களும் சத்தமே இல்லாமல் கிடந்தன. நாலைந்து வீடுகள் தள்ளி, ஒரே ஒரு காக்கை மட்டும் ஒரு மண்சுவர் மீது உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருந்தது. நேற்று காலையில் வண்டி மலைச்சி அம்மன் கோவில் பக்கம் போகும்போது, ஒரு காக்கை தலைக்கு மேலே பறந்து போயிற்று. அதுக்கு முன்னால் காக்கையைப் பார்த்து இரண்டு மூன்று நாட்கள் இருக்கும். மண் சுவரில் உட்கார்ந்திருக்கிறது அதே காக்கைதானோ என்று யோசித்துக் கொண்டே எதிர்த்த வீட்டைப் பார்க்கத் திரும்பினார்.

ஒரு வெள்ளை நாய் அந்த வீட்டுப் புறவாசல் கதவு இடைவெளிக்குள் முகத்தைச் சொருகி, கதவைத் திறக்கப் பிரயாசைப்பட்டுக் கொண்டிருந்தது. கதவு கொஞ்சங் சொஞ்சம் திறந்து திரும்பவும் மூடிக் கொண்டது. சிவனு நாடாருக்கு சந்தோஷமும் ஆச்சரியமும் தாங்க முடியவில்லை. வேகமாக எழுந்து வீட்டைப் பார்க்க நடந்தார். இவர் வருகிற சத்தம் கேட்டு, நாய் இவரைப் பார்த்துவிட்டு திரும்பவும் கதவைத் திறக்கப் பிரயாசைப் பட்டது. குனிந்து கல்லைத் தேடினார். எங்கேயுமே கல்லைக் காணவில்லை. மழையில் கரைந்துபோய் நின்றிருந்த மண் சுவரிலிருந்து துண்டுச் செங்கல், ஓட்டாஞ்சல்லி, ஜல்லிக் கற்களைப் பெயர்த்து எடுத்து நாயைப் பார்த்து எறிந்தார். நாய் தூர ஓடிப் போய் நின்று கொண்டது. அது பக்கத்தில் வருவதற்குள் கதவைத் தள்ளித் திறந்து கொண்டு வீட்டுக்குள்ளே நுழைந்துவிட்டார். கதவைச் சாத்தினதும் நாய் ஓடிவந்து கதவுக்குப் பக்கத்தில் வந்து நின்றது. வீட்டுக்குள்ளே நுழைந்ததும் அவருக்கு ரொம்பவும் திருப்தியாக இருந்தது.

அந்த வீட்டுக்கு இதுக்கு முன்னால் எத்தனையோ தடவை வந்திருக்கிறார். அந்த வீட்டில் நடந்த கல்யாணத்துக்கெல்லாம் இவரே வேலை செய்திருக்கிறார். இரண்டே கட்டுள்ள வீடு அது. அந்த அடுப்படிக்கு அப்புறம் ஒரு பட்டகசாலை இருந்தது. பட்டகசாலைக்கு வெளியே அழிப்பாய்ச்சின ஒரு திண்ணை மட்டுமே உண்டு.

அடுப்படி இருட்டுக்குள் கண் தெரிய அவருக்குக் கொஞ்சம் நேரமாயிற்று. அந்த இருட்டோடு அடுப்புச் சாம்பல் கலந்த வாடை வீசியது. கொஞ்ச நேரம் கழித்துப் பார்வை தெரிய ஆரம்பித்தது. அடுப்புக்கு மேலே இருந்த ஜன்னல் கதவுகளைத் திறந்துவிட்டார். அடுப்பில் அள்ளாமல் போட்டிருந்த சாம்பலையும், ‘புடை’மேல் இருந்த சின்னதான சட்டியையும் தவிர அந்த அடுப்படியில் வேறு ஒன்றுமே இல்லை.

பட்டகசாலைக் கதவு சாத்தாமலே திறந்து கிடந்தது. கதவுக்குப் பின்னால் நின்றிருந்த நெல்குதிரின் வாய்க்குக் கீழே, அதை அடைத்துச் சொருகியிருந்த துணி விழுந்து கிடந்தது. குனிந்து குதிருக்குள்ளே பார்த்தார். லேசாகப் படிந்திருந்த புழுதிக்கு மேல் சில நெல்மணிகள் கிடந்தன. குதிருக்குப் பக்கத்தில் பூட்டிக் கிடந்த பெரிய மரப் பெட்டியைக் கஷ்டப்பட்டு அசைத்துப் பார்த்தார். சில பாத்திரங்கள் உருண்டன. முன் வாசல் நிலைக்கு மேலே, ஒரே ஒரு போட்டோ படம் மட்டும் நூலாம் படையுடன் தொங்கிக் கொண்டிருந்தது. அந்தப் போட்டோவிலிருந்த ஒவ்வொரு

ஆளாக கவனித்துப் பார்த்தார். எல்லோரும் அவருக்கு ரொம்பவும் தெரிந்தவர்கள். அதற்கப்புறம் அந்த அறையில் நிற்கவே அவருக்குச் சங்கடமாக இருந்தது.

வெளியே போகப் புறப்பட்ட போது நெல் குதிர் இருந்த எதிர்த்த பக்கத்துக் கதவுக்குப் பின்னால் ஒரு பழைய ஓவல்டின் டப்பா உட்கார்ந்திருந்தது. ஆசையோடு அதைப் பார்க்க நடந்தார். அருகே போனதும் அதிலிருந்து எறும்புகள் போய்க் கொண்டிருந்ததைப் பார்த்து சந்தோஷமாக இருந்தது. டப்பாவைத் தூக்கி மூடியைத் திறந்து பார்த்தார். அடியில் கொஞ்சம் கருப்புக் கட்டித் தூள் கிடந்தது. அந்தத் தூளை வைத்து இரண்டு வேளை காப்பி போடலாம். டப்பாவைத் தரையில் வைத்து கதவுக்கு முன்னால் உட்கார்ந்து தட்டினார். எறும்புகள் சிதறி ஓடின. அடுப்படிக் கதவு அவ்வப்போது கொஞ்சம் திறந்து மூடுவதும், திறந்த சமயங்களில் நாயின் கறுப்பு மூக்கு தெரிவது மட்டுமாக இருந்தது.

சிறிது நேரத்தில் எறும்பெல்லாம் போய் விட்டது. டப்பாவைத் தூக்கிக் கொண்டு அடுப்படிக் கதவருகே வந்து பதுங்கி நின்றார். இந்தத் தடவை, நாய் முகத்தை கதவுக்குள்ளே நுழைத்தபோது, கதவோடு சாய்த்துத் தன்னுடைய முழு பலத்தையும் கொண்டு அழுத்தினார். நூய் இதுவரை அவர் கேட்டிராதபடி புது மாதிரியான குரலில் ஊளையும், சத்தமும் கலந்து போட்டது. அந்தச் சத்தத்தைக் கேட்டு கதவின் இறுக்கத்தைத் தளர விட்டுவிடுவோமா என்று அவருக்குப் பயமாக இருந்தது. ஏதோவொரு உலுக்கலுக்குப் பிறகு கதவு நன்றாகப் பொருந்தி நிலைச் சட்டத்துடன் மூடிக்கொண்டது. பயத்துடன் திரும்பி கதவைப் பார்த்தவாறு நின்றார். வெளியே அதே வினோதமான சத்தமும், ஊளையும் கலந்து கேட்டுக்கொண்டே போய்ச் சிறிது நேரத்தில் தேய்ந்துவிட்டது. நாய் முகத்தைக் கொடுத்துக் கதவைத் தள்ளின இடத்தில் ரத்தத் துளிகள் சிந்திக் கிடந்தன. இன்னும் பயம் தீராமல் டப்பாவை இறுகப்பிடித்த படியே உள்ளேயே கொஞ்ச நேரம் நின்று கொண்டிருந்துவிட்டு வெளியே வந்தார்.

வெளியே கதவடியில், நாய் முகத்தை இழுக்கப் போராடிய போது ஏற்பட்ட நகப் பிராண்டல்கள் தரையிலும், அடிக் கதவிலும் தாறுமாறாகக் கிடந்தன. விட்டு விட்டு ரத்தத் துளிகள் சிந்திக் கொண்டே போயிருந்தது. அந்த ரத்தத்தின் நிறம் மனித ரத்தம் போல் இல்லை. இன்னும் கொஞ்சம் கொழு கொழுப்பாகவும் ஆரஞ்சு வர்ணத்திலும் இருந்தது. நிமிர்ந்து எதிரே பார்த்தபோது, மன்சுவர் மீது, நாலைந்து வீடுகள் தள்ளி முதலில் பார்த்த காக்கை இந்த வீட்டில் வந்து உட்கார்ந்து இவரையே பார்த்துக் கொண்டிருந்தது. டப்பா வைத்திருந்த கையோடு வீசி ஆட்டி விரட்டினார். வாயிலிருந்து சத்தமே வரவில்லை. காக்கை அசையாமல் உட்கார்ந்திருந்தது. நாயை விரட்ட முதலில் எறிந்த செங்கல் துண்டைக் குனிந்து எடுத்து வீசினார். காக்கை வேறு எங்காவது பறந்து போய்விடும் என்று எதிர்பார்த்தார். ஆனால் இரண்டு வீடுகள் தள்ளி இதே போல இருந்த இன்னொரு மண் சுவரின் மேல் போய் உட்கார்ந்து கொண்டு, இவரையே பார்த்துக் கொண்டிருந்தது.

நாய் ஒளிந்திருக்கும் என்று நினைத்துக் கொண்டு, ரொம்பவும் ஜாக்கிரதையாக, தன் கண்ணுக்கு எட்டின தூரம் வரை, எல்லாப் பக்கங்களிலும் பார்த்துக் கொண்டே தன் வீட்டுக்குப் போனார். தெருவில் எல்லா வீடுகளும் பூட்டிக் கிடந்தது அந்தப் பகலிலும் பயத்தைக் கொடுத்தது. அந்த நாய் எங்கேயாவது ஒளிந்து கிடந்து தன்னைத் தாக்கும் என்று எண்ணினார். நாய் வந்தால் ஏதாவது ஒரு பக்கம் ஓடித் தப்பித்துக் கொள்ள முன் எச்சரிக்கையாக நடுத் தெருவில் நடந்து போனார். வீட்டுக்குப் பக்கத்தில் வரும்போது நாற்ப் பெட்டியின் ஞாபகம் வந்தது.

வீட்டுக்குள் நுழைந்து கதவை அவசரமாகச் சாத்தினதும், இவ்வளவு நாளும் உணர்ந்திராத நிம்மதியை உணர்ந்தார். தீப்பெட்டியில் மூன்று குச்சிகளே இருந்தன. ஒரே குச்சியில் நெருப்பு நிச்சயமாகப் பற்றிக் கொள்ளும் என்று திருப்தியாகும் வரை தீயைப் பற்ற வைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

அன்று மாலையும், இரவிலும் அவர் வீட்டை விட்டு வெளியே போகவில்லை. காலையில் தூங்கி விழித்ததும் ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தார். நாய் வாசலில் உட்கார்ந்திருந்தது.

**************************************

# கிணற்றுத் தண்ணீரும் ஆற்று மீனும்

**வண்ணதாசன்**

'ராத்திரிப் போய்ச் சேர எப்படியும் பத்துப் பதினோரு மணி ஆகியிருக்காது ?' கட்டிலில் எழுந்து உட்கார்ந்து கொண்டு ராமையாத் தாத்தா கேட்கும் போது வேலம்மா ஆச்சி வாசல் தெளித்துக் கொண்டு இருந்தாள். விடியக் கருக்கலில் ஒவ்வொரு கையாகத் தண்ணீரைத் தெளிக்க தெளிக்கப் புழுதியடங்கி பசுஞ்சாணமும் மண்ணும் வாசைன அடித்தது.

'உங்கிட்டேதானே கேட்டேன். காதுல விழுந்ததா விழலையா ?' மீசையை இரண்டு பக்கமும் ஒதுக்கிக்க கொண்டே கட்டிலைப் பார்த்தார். நேற்று வரைக்கும் ஒருவாரமாகப் பேரப்பிள்ளையும் பக்கத்தில் படுத்துக்கிடந்த கட்டில், ராத்திரி இவரிடம் கதை கேட்டபடி ரொம்ப நேரம் முழித்துக் கொண்டே இருப்பான்.

'என்ன ரெண்டு பேரும் தூங்கலையா ? தாத்தாவும் பேரனும் தினசரி நடுராத்திரிப் பன்னெண்டு மணிக்கும் வில்லடிச்சுக்கிட்டு இருக்கியோ. நாளைக்குப் பேசுததுக்குக் கொஞ்சம் பாக்கியிருக்கட்டும்'– வேலம்மாச்சி சொல்வாளே தவிர அவளுக்கும் தாத்தாவையும் பேரனையும் பார்க்கச் சந்தோஷமாகத்தான் இருந்தது.

பேரன் வந்த நான்கு நாட்களில் தாத்தா முகம் பசலிக்கொடி மாதிரிக் குளிர்ச்சியாக ஆகியிருக்கிறது. இரண்டு வாய் அதிகமாகக் கூடச் சாப்பிடுகிறார். வீட்டிலேயே துலாக் கிணற்றில் இறைத்துக் குளிக்கிறவர் பேரன் கூட ஆற்றுக்குப் போய்விட்டு வருகிறார். கோவிலுக்குப் போய் திட்டிவாசலைத் திறந்து கோபுரத்துக்கு மேலே எல்லாம் ஏறிக் காட்டிவிட்டு வந்திருக்கிறார். கணக்குப் பிள்ளை வீட்டு இரட்டை மாட்டு வண்டியை இரவல் வாங்கிப் பேரனும் அவருமாகச் சிவனூத்து வரைக்கும் போய்விட்டு வந்தார்கள். வரும் போது தாழம்பூப் பறித்துப் பேரனிடம் கொடுத்திருந்தார்.

'அவன் என்ன பொம்பிளைப் பிள்ளையா. தாழம்பூ வச்சுக்கிடுததுக்கு' என்று ஆச்சி சொன்ன போது, 'உனக்கு வேணும்னாச் சொல்லு. இன்னும் ரெண்டு பறிச்சுகிட்டு வாரேன்' என்று ஆச்சியின் மேல்கையில் கிள்ளினார். ஒவ்வொரு கைத்தெளிப்பிற்கும் ஒவ்வொன்றாக வேலம்மாச்சிக்கு ஞாபகம் வந்தது.

ராமையாத் தாத்தா கொடியிலிருந்த துண்டை உதறி மேலே போட்டுக் கொண்டு, வாசல் தெளிக்கிற ஆச்சியையே பார்த்தார். கேட்கக் கேட்க ஆச்சி இப்படி பதிலே சொல்லாமல் இருப்பது ஆச்சரியமாக இருந்தது. முகத்தைக் கழுவி விட்டு வரலாம் என்று நடையைவிட்டு இறங்கிச் சிமெண்டு தொட்டியைப் பார்க்க நடந்தார். கிழக்கே பப்பாளி மரம் வரை போய் வாசல் தெளித்து விட்டு, மறுபடி மேற்கே ஒவ்வொரு எட்டாக வேலம்மாச்சி நடந்து வரும்போது தாத்தா எதிரே போய் நின்றார்.

'ஏளா. இந்த உலகத்துலதான் இருக்கியா ? இல்லை பேரப் பிள்ளை கூடவே ரயில் ஏறிப் போயிட்டியா ? விளங்கலையே எனக்கு' என்று கேட்டார்.

'ஈரேழு லோகத்துக்குப் போனாலும், கடைசீல இந்த வீட்டுக்குத் தானே நாம ரெண்டு பேரும் திரும்பி வரணும்' என்று சொல்லிக் கொண்டே செம்பை எடுத்துத் தாத்தா கையில் கொடுத்தாள். வேலம்மாச்சி சட்டென்று இப்படிக் கண்கலங்குவாள் என்று எதிர்பார்க்கவில்லை.

'நீயும் என்னை மாதிரி எந்திருக்கும்போதே அவனை நினைச்சுக் கிட்டே தான் எந்திரிச்சிருக்கிற போல. ராத்திரித் தூங்குனயா தூங்கலையா ?' என்று ஆச்சியைப் பார்த்துக் கேட்டார்.

‘என் தூக்கத்துக்கு என்ன. நீங்க தான் புரண்டு புரண்டு படுத்துக் கிட்டுக் கிடந்த மாதிரி இருந்தது’ ஆச்சி சேலைத் தலைப்பால் முகத்தைத் துடைத்துக் கொண்டு நின்றாள்.

செம்பை முக்கிக் கோதுவதற்குத் தண்ணீர்த் தொட்டிக்குள் ராமையாத் தாத்தா குனிந்தார். மூன்று செம்பருத்திப் பூக்கள் தண்ணீரில் மிதந்தபடி இருந்தன. இதுவும் பேரனுடைய வேலைதான். போகிறதற்கு முன் கடைசி இரண்டு நாட்களாகத் தபால் ஆபீஸ் காம்பவுண்டுக்குள் நிற்கிற செம்பருத்திச் செடியில் இருந்து மொட்டாகப் பறித்து வந்து தொட்டியில் போடுவான். காலையில் அவை இப்படிப் பூத்துக் கிடக்கும். அதை வைத்து ஆச்சி பூஜை பண்ண வேண்டுமாம்.

‘இங்க பாரு’– ராமையாத் தாத்தா இரண்டு உள்ளங்கைகளிலும் அந்தச் செம்பருத்திப்பூக்களை ஏந்திக் கொண்டு ஆச்சியைக் கூப்பிட்டார். வேலம்மாச்சி பக்கத்தில் வந்து அதை வாங்கிக் கொண்டாள். செடியில் இருக்கிற மாதிரியே ஆச்சியின் கைகளிலும் அவை பூத்திருந்தன.

இன்னும் கொஞ்ச நாட்களுக்கு இப்படி அவன் இருந்துவிட்டுப் போனதற்கு அடையாளமாக ஏதாவது கண்ணில்பட்டுக் கொண்டே தான் இருக்கும்.

அந்திமந்தாரை விதை, பசலிப்பழம் எல்லாம் போட்டுச் சேகரித்து வைத்த பழைய ரெமி புவுடர் டப்பா, ராமையாத் தாத்தா அந்தக் காலத்தில் உபயோகித்த மைக்கூடு, வேலம்மாச்சியின் பூஜைத் தட்டில் இருந்து எடுத்த ஒரு ஈயப்பிள்ளையார், ரயில் படம் போட்ட மஞ்சள் பெருங்காய டப்பாவில் எருக்கல இலை சாப்பிட்டு வளர்கிற வண்ணத்திப்புழு, ஆட்டுரல் கல்லின் பக்கம் உட்கார்ந்து ஆச்சியிடம் கதை கேட்டுக் கொண்டே சுவரில் வரைந்த மூவர்ணக் கொடி ..

அடுத்த தடவை அவன் வருகிற வரைக்கும் இதையெல்லாம் பார்த்துக் கொண்டுதான் காலத்தைத் தள்ள வேண்டும்.

கோலப் பொடியை எடுப்பதற்கு மாடக்குழியை வேலம்மாச்சி பார்த்தாள். மாடக் குழியில் அந்தப் பெரிய கண்ணாடி பாட்டில் இருந்தது. பாட்டில் தண்ணீரில் தாத்தாவுடன் ஆற்றுக்குப் போய்ப் பிடித்துப் போட்ட மீன் குஞ்சுகள் நீந்திக் கொண்டு இருந்தன. ஆச்சி அந்த மீன் குஞ்சுகளையே பார்த்தாள். வளைய வளைய அவை திரும்பிச் சுழன்றன.

‘உங்களைத் தானே’ என்று ராமையாத் தாத்தாவைக் கூப்பிட்டாள். தாத்தா தூண் பக்கம் வந்து நின்றார்.

‘இதைக் கொண்டு போய் மறுபடி ஆற்றில் விட்டுட்டு வந்திருங்க’ என்றாள். தாத்தா பாட்டிலை வாங்கிக் கொண்டார்.

‘அவ்வளவு தூரம் என்னத்துக்குப் போகணும். நம்ம வீட்டுக் கிணத்துல விட்டிருவோம். அவ்வளவுதானே’ தாத்தாவின் உள்ளங்கை ரேகைகள் பாட்டில் தண்ணீரின் வழியாகப் பளீரிட்டன.

‘அதெல்லாம் இல்லை. ஆற்றில் பிடிச்சதை ஆற்றிலேயே விட்டிருவோம். அது அது இடத்துல அது அது சந்தோஷமா இருக்கட்டும்’ வேலம்மாச்சி சொன்னாள்.

ராமையாத் தாத்தாவுக்கு ஊருக்குப் போய்விட்ட பேரன் ஞாபகம் வந்தது. ‘நீ சொல்லுகிறதும் சரிதான்’ என்றார்.

# மருந்து

**எம்.வி. வெங்கட்ராம்.**

அன்று நல்ல பொழுது விடியவில்லை. கண்களை விழிக்கும் போதே பக்கத்து வீட்டில் கூச்சல் கேட்டது. கண்களைக் கசக்கும்போது எதிரில் வந்து நின்றாள் கோமதி, பதட்டத்துடன்.

அண்ணா, அண்ணா! கொஞ்சம் வீட்டுக்கு வாருங்கள். அவருக்கு உடம்பு..

தூரத்து உறவினனாய்ப் பக்கத்து வீட்டில் இருப்பதோடு எனக்கு வயது அதிகம் என்பதால் மட்டும் நான் அவளுக்கு அண்ணன் ஆகவில்லை. என்னிடம் கொஞ்சம் பணம் இருப்பதோடு அது அவர்களுடைய முடைக்கும் உதவுவதால்தான் நான் அவளுக்கு அண்ணன் முறை. அவளுடைய கணவன் சுந்தரமூர்த்திக்கு ஏதோ வியாதி. ஒரு மாதமாய்ப் படுத்திருந்தான்.

அவளுடன் சென்று பார்த்தபோது, அவள் சொன்னது போலவே அவனுடைய நிலைமை ஒரு மாதிரியாகத்தான் இருந்தது. திறந்த கண்களை மூடாமல் எங்கோ பார்த்துக் கொண்டிருந்தான் அவன். அவற்றில் ஒளியே இல்லை, உடம்பு அனல்போல் சுட்டது.

‘எனக்கு உயிர் போகுது’ என்று திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டிருந்தான். உயிர் போவதானால் இப்படிச் சொல்லிக் கொண்டே போகும் என்று நான் நம்பவில்லை. அவனுக்கு உயிர் போகிறது என்றால் எனக்குக் கவலையாக இருந்தது. காரணம், அவனுக்குச் சொத்து இல்லாத வாரிசுகள் ஜாஸ்தி. அவை பெரும்பாலும் எங்கள் வீட்டில் தான் அரை வயிற்றையாவது கழுவிக் கொள்ளும், அது ஒரு புண்ணியம் என்று நான் விட்டு வைத்தால் என் வாரிசுகளுக்கும் அந்தக் கதி வரக்கூடிய அபாயகரமான நிலையில் தான் என் பொருளாதாரம் இருந்தது. இந்தக் கொள்கையில் அவனும் உயிரை விட்டு வைத்தால் என் வாரிசுகளுக்கு ஆபத்து அதிகமாகுமே எனபதுதான் என் கவலை.

“எப்படியாவது இவரைக் காப்பாற்றுங்கள், அண்ணா! உங்களுக்குக் கோடிப் புண்ணியம் உண்டு” என்று கெஞ்சினாள் கோமதி.

“வைத்தியர் என்ன சொன்னார்?”

“என்ன சொல்லுவார்? குணமாகி விடும் என்றுதான் சொல்கிறார். ரொம்பக் கெட்டிக்காரர் ஆயிற்றே. பதினைந்து இருபது நாளாய் அவரும் தான் மருந்து கொடுக்கிறார். ஒரு குணமும் காணோமே. யாராவது ஒரு டாக்டரிடம் காட்டுங்கள் அண்ணா.”

டாக்டர் என்றதும் எனக்கு டாக்டர் ராமநாதனின் ஞாபகம் வந்தது. எங்கள் ஊர் பெரிய டாக்டர்களில் அவர் ஒருவர். அரசு ஆஸ்பத்திரியிலும் சர்ஜன். மிகவும் கைராசிக்காரர் என்று எல்லோரும் சொல்வார்கள்.

கூட்டம் அதிகம் ஆக ஆக, அவர் உங்கள் முகத்தைக் கூடப் பார்க்க மாட்டார். நீங்கள் போட்டிருக்கும் சட்டைப் பையை ஸ்டெதாஸ்கோப்பால் சோதனை செய்துவிட்டு மருந்து எழுதிக் கொடுத்து விடுவார். தொழிலில் அவ்வளவு அனுபவம் அவருக்கு. எனக்கு நண்பர். நாளதுவரை நடந்துள்ள மருத்துவ ஆராய்ச்சிகளை எல்லாம் அவர் அறிவார். புது மருந்து எது கண்டுபிடிக்கப்பட்டாலும் அவர் பார்வைக்கு வராமல் இராது.

சுந்தரமூர்த்தியையும் கோமதியையும் கூட்டிக் கொண்டு அவர் வீட்டுக்குப் போனேன். நல்ல வேளை அவர் வீட்டில் இருந்தார், கூட்டமும் அதிகம் இல்லை.

மூர்த்தியின் நோயை நான் விவரித்தேன்.

நான் கூறுவதை எல்லாம் கேட்டுக் கொண்டு, வழக்கத்துக்கு மாறாக நிதானமாய் நோயாளியைச் சோதனை செய்தார்.

“எவ்வளவு காலமாய் இவருக்கு இந்த வியாதி ?”

“ஒரு மாசத்துக்கு மேல் இருக்கும்”

“இதுவரை யார் பார்த்தார்கள் ?”

“முதலில் திரெளபதி அம்மன் கோவில் பூசாரி ஒரு வாரம் விபூதி போட்டார், ஒன்றும் குணம் தெரியவில்லை. பதினைந்து இருபது நாளாய் வேலாயுத வைத்தியர் பார்க்கிறார்.”

“இந்த இருபதாம் நூற்றாண்டில் கூட இந்த மடமை தொலையவில்லையே! என்றார் டாக்டர். என்னிடம் இங்கிலீசில், மந்திரத்தாலும் மூக்குப்பொடி மருந்திலும் நம்பிக்கை வைத்திருக்கிறார்களே! எல்லாம் முடிந்து உயிர் போகிற கடைசிக் கட்டத்தில் இவர்களுக்கு டாக்டர் ஞாபகம் வருகிறது. உயிர் போய்விட்டால் அவர் தலையில் பழியைப் போடலாம் அல்லவா ?’

“அப்படியானால்...” என்று பயத்தோடு கேட்டேன்.

“கேஸ் ஸீரியஸ்தான்”

“பிள்ளைக்குட்டிக்காரர். எப்படியும் நீங்கள்தான் காப்பாற்ற வேண்டும்.”

“பத்து நாட்களுக்கு முன்னால் வந்திருந்தால் நிச்சயமாகச் சொல்லியிருக்கலாம். இப்பொழுதும் பரவாயில்லை; முயற்சி செய்கிறேன்”.

இஞ்செக்ஷன் செய்து கொண்டு மருந்து வாங்கியபின் நாங்கள் புறப்பட்டோம். டாக்டரிடம் என் பர்ஸிலிருந்து பத்து ரூபாய் நோட்டு ஒன்று கைமாறிய போது எனக்கு உயிரின் விலையும் நோய் தீர வேண்டியதன் அவசரமும் தெரிந்தன.

அண்டை வீட்டுக்காரன் வியாதி என்னை மிகவும் படுத்திவிட்டது.

மூர்த்தி சற்று அகலமாய்க் கண்களைத் திறந்தாலும் சரி அல்லது கொஞ்ச நேரம் அதிகமாய் மூடியிருந்தாலும் சரி உடனே கோமதி என்னிடம் ஓடி வருவாள். நான் போய் மூர்த்தியைத் தேற்ற வேண்டும். என் தலை மறைந்தால் அவனுக்கு உயிர் போய்விடும்.

விரைவிலேயே எனக்கே ஏதோ வியாதி வந்துவிட்டாற் போலத் தோன்றத் தொடங்கியது. வாழ்க்கையே ஒரு பெரிய நோய் என்று நினைக்கும் நிலைக்கு வந்துவிட்டேன். எப்படியாவது மூர்த்திக்குக் குணமாகிவிட்டால் அவனுக்கு முன் நான் செத்துவிடுவேன் என்றுகூடத் தோன்றியது. ஆகையால் அவனை நாள் தவறாமல் டாக்டரிடம் அழைத்துச் செல்வதில் மிகவும் சிரத்தையாக இருந்தேன்.

டாக்டர் ராமநாதன் கொடுத்து வந்து மருந்துகள் தீவிரமாய் வேலை செய்தன. ஏழெட்டு நாட்களில் மூர்த்தியின் காய்ச்சல் அடியோடு நின்றுவிட்டது. வலி மட்டும் நிற்கவில்லை. பத்தாவது நாள் வலி, தாங்க முடியாத அளவுக்கு ஏறி விடவே, அவனுடன் டாக்டரிடம் ஓடினேன்.

“என்னது ?” என்றார் அவர்.

“வலி தாங்க முடியவில்லை டாக்டர்” என்று அலறினான் மூர்த்தி: “இதோ, இங்கே வலிக்கிறது ... இப்போது இங்கே.... இங்கே...

“மூர்த்தி நீர் இப்படி அதைரியப்படுவது ரொம்பத் தப்பு. மனசைத் திடமாய் வைத்துக்கொண்டால்தான் வியாதி குணமாகும். மருந்து என்ன செய்யும் ? வியாதியை ஓரளவு

கண்டிக்கும். நீர் மனசைத் தளரவிட்டால் வியாதி கும்மாளம் அடிக்கும். வியாதியே இல்லை என்று உறுதி செய்து கொள்ளும். அது தானாகப் பறந்து போகும்.”

நான் இல்லை என்று நினைத்தாலும் வலி ஞாபகப் படுத்திக் கொண்டே இருக்கிறதே! என்று பெஞ்சு மீது இருந்தபடியே ஒரு குதி குதித்தான் மூர்த்தி.

“கொஞ்சம் பல்லைக் கடித்துக் கொள்!” என்றேன்.

“பல்தான் நொறுங்கும்” என்றான் அழுகையை நிறுத்தாமல்.

எனக்குக் கண்ணராவியாக இருந்தது. ஆனால் டாக்டர் மறுபடியும் ஓர் இஞ்செக்ஷன் செய்துவிட்டு வேறு பக்கம் கவனம் செலுத்தினார். அரை மணி நேரத்துக்குள் மூர்த்தி அமரிக்கையாக உட்கார்ந்து விட்டான்.

“இப்போது வலிக்கிறதா” என்றார் டாக்டர்.

இல்லை என்று சந்தோஷப்பட்டான் மூர்த்தி.

“மருந்து செய்கிற வேலையைப் பார்த்தீரா? உமக்கு எம்மேல் நம்பிக்கை இல்லாவிட்டாலும், மருந்து மேலாவது நம்பிக்கை வேண்டும் மூர்த்தி. எதையும் நம்பாவிட்டால் வியாதி எப்படிக் குணமாகும்?”

“நான் உங்களைத்தான் நம்பியிருக்கிறேன், டாக்டர்.”

என் திருப்தி மறு நாளே தூளாயிற்று. மூர்த்தியின் வியாதி அன்று விசித்திரமான நிலையை அடைந்தது. அவனுடைய கழுத்து இடதுபுறமாகச் சாய்ந்து விறைத்துக் கொண்டது. பார்வையில் ஒரு கலக்கம். ஆளைப் புரிந்து கொண்டான். ஆனால் பேச்சு குளறியது. அவனைப் பார்த்த டாக்டரின் முகத்திலும் கவலை குடிகொண்டது.

என்னை அவர் தனியாக அழைத்துப் போய்க் கூறினார் : ஆரம்பத்தில் நான் சந்தேகப்பட்டது சரியாகி விட்டது. அதனால்தான் இந்த கேஸில் தனிப்பட்ட சிரத்தை எடுத்துக் கொண்டேன். இது ஒரு புதிய வியாதி. காஸ்மாஸிலினியா என்று பெயர். இதைப் பாருங்கள் என்று ஒரு புத்தகத்தை நீட்டினார்.

அது ஒரு மருந்து கம்பெனியின் விலைப் பட்டியல். அவர் குறிப்பிட்ட இடத்தைப் பார்த்தேன். ருஷ்ய டாக்டர் ஒருவர் புதிதாய் ஒரு மருந்து கண்டு பிடித்திருக்கிறார். பெயர் காஸிமாஸிலின். இம் மருந்தை இரு வித நாய்களுக்குப் பயன்படுத்தலாம். வலி நின்று பார்வை இடதுசாரியானால் அது காஸ்மாஸிலினியா. வலது சாரியானால் அது காஸ்மாஸிலான். ஜுரம் இருந்தால் அபாயம் அதிகமில்லை. நின்று விட்டால் அபாயம் அதிகம். ஆனால், எப்படியும் தொண்டைக் குழியில் ஆபரேஷன் செய்தாக வேண்டும். மருந்தைக் குழாய் மூலம் உள்ளே செலுத்த வேண்டும்.”

“ஜுரம் நின்று விட்டதே டாக்டர்!“

“ஆபரேஷன் செய்து பார்த்துவிடலாம். இது காஸ்மாஸிலினியாதான்.”

“தொண்டைக் குழி ஆபரேஷன் என்றால் அபாயம் ஆயிற்றே?”

“நீங்களே இப்படிச் சொன்னால் என்ன செய்வது? ஆபரேஷன் செய்யாவிட்டாலும் அபாயம்தானே?”

“எதற்கும் அந்த அம்மாவை கேட்டுச் சொல்கிறேன்...”

“நீங்கள் தைரியம் சொல்லுங்கள். முதலில் பயப்படுவாள். எடுத்துச் சொன்னால் ஒப்புக்கொண்டு விடுவாள். காஸ்மாஸிலின் அற்புதமான மருந்து; அதை முதல் முறையாகப் பிரயோகம் செய்ய எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது.” – அவர் முகத்தில் அசாதாரண மகிழ்ச்சி.

கோமதியிடம் விஷயத்தைக் கூறியதும் அவள் பெரிதாய்ப் புலம்பத் தொடங்கினாள்: “ஏதாவது ஆகிவிட்டால் என்ன செய்வது அண்ணா **?**”

“ஆபரேஷன் செய்தாக வேண்டும் என்று டாக்டர் சொல்கிறார். செய்யாவிட்டாலும் உயிருக்கு ஆபத்து என்கிறார். அவரை நம்பித்தான் செய்ய வேண்டும்.”

“என்ன செய்யலாம் **?** என்று அவள் என்னிடமே கேட்டாள்.

“நீங்கள்தான் அதைச் சொல்ல வேண்டும். பிறகு என்மேல் குறை சொல்லக்கூடாது. டாக்டர் கெட்டிக்காரர்; மருந்து நல்ல மருந்து; ஆனால் முடிவு நம் கையில் இல்லை. தெய்வத்தை நம்பித்தான் செய்ய வேண்டும்.”

கடைசியில், வேறு வழி தெரியாமல் அவள் ஆபரேஷனுக்குச் சம்மதித்தாள்.

ஆபரேஷன் தியேட்டருக்கு வெளியே கோமதி, அவளுடைய குழந்தைகள், நான்– எல்லோரும் கூடியிருந்தோம். நர்ஸ்கள் உள்ளே சென்று வெளியே வரும்போதெல்லாம் எனக்குப் ‘பகீர்’ என்றது, கோமதி சந்தடி செய்யாமல் கண்ணீர் பெருக்கிக் கொண்டிருந்தாள்.

கடைசியில் வெளியில் வந்த டாக்டர் கைகளைத் துடைத்தவாறு என்னைத் தனியாக அழைத்தார். ஆபரேஷன் வெற்றியா, தோல்வியா என்று அவர் முகத் தோற்றத்திலிருந்து கண்டு கொள்ள முடியவில்லை.

“என்ன டாக்டர் **?**”

“வருந்துகிறேன். உயிர் போய் விட்டது என்றார், அவர் நிதானமாய். ஆனால் நான் அதற்காக விட்டுவிடப்போவதில்லை.”

“அப்படியானால்... பிழைத்து விடுவார் என்கிறீர்களா **?**” – என்றேன் நம்பிக்கையுடன்.

“பிழைப்பதாவது, செத்த பின்! காஸ்மாஸிலின் அற்புதமான மருந்து. அதை எப்படி உபயோகம் செய்தால் என்ன பயன்கள் ஏற்படும் என்பதைக் கண்டுபிடிக்காமல் நான் விடப் போவதில்லை. ஒரு கேஸ் தோல்வியானால், அதற்காக அந்த மருந்தையே கைவிட முடியுமா **?**” என்றார் டாக்டர் நம்பிக்கையுடன்.

**************************************

**அம்பை**

சி.எஸ். லட்சுமி என்னும் இயற்பெயர் கொண்டவர் அம்பை. நவீனப் பெண்ணியச் சிந்தனையின் வெளிப்பாடாக அம்பை அடையாளம் காட்டப்படுகிறார்.

இவர் சர்வ சாதாரணமாகிவிட்ட யதார்த்தத்தைத் துளைத்துப் பார்த்து ஆராய்ந்து அன்றாட வாழ்வின் பௌதீக விவரங்களை அந்நியப்படுத்திக் காட்டுபவர்.

# வல்லூறுகள்

மொட்டை மாடியில் படுத்து அண்ணாந்து தாரகைகளைப் பார்த்தவாறே அம்மா சொல்கிறாள்.

"ஒவ்வொரு நட்சத்திரமும் பிணம் தின்னிக் கழுகோட மூக்கு மாதிரி கொடூரமா மின்னறத பாரு ஷைலு. திடீர்னு ஒரு நாள் பாரு, நட்சத்திரங்களுக்குப் பதிலா ரக்கைகளை விரிச்சுண்டு மானத்தை அடைச்சிண்டு வெறும் வல்லூறுகளே இருக்கும். கீழே எல்லாம் பிணங்கள், பிணங்கள், பிணங்கள் தான்".

"அம்மா, போருமே இது என்ன கற்பனை?"

"இது உண்மைடீ" என்கிறாள்.

"ராமுத் தாத்தா கார்த்தாலே வந்தாரே, பார்த்தாயா? தொடைச் சதை எல்லாம் சுருங்கி முகத்திலே பாளம் பாளமாகத் தோல் வெடிச்சு, கை எலும்பு துருத்திண்டு. வந்து உங்க அப்பா கிட்டே பலகீனமான குரல்லே "ஷர்மா பாபு, நிஜமாவே கடையிலே அரிசியோ, கோதுமையோ இல்லையா? என் பொண்ணுக்கு இது பிரசவ சமயம். வெறும் வயிறுதான் உடம்பிலே தெரியறது. சாப்பிட ஒண்ணும் இல்லை" என்றார். பீஹார்லே உங்க அப்பா பெரிய மனிதர். எனக்கு அவர் வெறும் பிணம் தின்னிக் கழுகுதான். மாமிசத்தைக் கொத்தித்தின்னு பசியாறும் வல்லூறுதான். அவர் கண், மூக்கு, ரக்கை மாதிரி இரு கைகள்... ஐயோ எல்லாம் மாமிசம் ஒட்டிண்டு இருக்கற உறுப்புக்கள்தான்...".

இது தினம் நடப்பதுதான். மொட்டை மாடியில் அம்மா நிறையப் பேசுவாள். நான் இருந்தால் என்னிடம். ப்ரமரா இருந்தால் அவளிடம். இல்லாவிட்டால் தனக்குத்தானே. அவளுக்குப் பேசியாக வேண்டும். ஒவ்வொரு முறை விடுமுறைக்கு வந்து டெல்லி திரும்பும் போதும் சொல்வாள்.

"உனக்குத் தப்பிக்க ஓர் இடம் இருக்கு." நிலைப்படியில் சாய்ந்து கொண்டு, கூந்தலை இடுப்பு வரை, பின்னாமல், அவிழ்த்து விட்டு, உணர்ச்சிகள் பொங்கும் கண்களை மற்றவர் மேல் ஓடவிட்டு அவள் நிற்கும் போது, அப்பாவின் கைதியாய் அவளை நினைத்துப் பார்ப்பது கஷ்டமாகவே இருக்கும். இவளை யாரால் கைப்பற்ற முடியும்? யாரால் ஆக்கிரமிக்க முடியும்? யாரால் அடக்க முடியும்?.

"என் படிப்பு முடிந்து வேலை கிடைத்ததும் நீ என்னோட இரேன் அம்மா".

"பளிச்" சென்று சிரிப்பாள்.

"அதற்குள் பிணம் தின்னிக் கழுகுகள் என்னைச் சாப்பிட்டு விடும்".

"ஏன் இப்படி அசிங்கமாய்க் கற்பனை செய்யறே?.

"இதுதான் உண்மை. டெல்லியிலே உட்கார்ந்துண்டு இதைப் பார்க்க முடியாது.

சில சமயம் அவளுக்கு மூளை சரியில்லை என்று தோன்றும். மனத்தை அதிர வைக்கும் காட்சிகளைக் கற்பனை செய்து கூசாமல் சொல்வாள். சில சம்பவங்களை மறக்க முடியவில்லை.

அப்போது ப்ரமரா பிறந்திருக்கவில்லை. கோபால் பாபு வீட்டுக்கு வந்திருந்தார்.

"ஷைலு, நீ விளையாடப்போ" என்று அம்மா அனுப்பி விட்டாள்.

நிலைப்படியின் கீழ்ச் சென்று ஒளிந்து கொண்டேன். அவர்கள் இருவரும் பேசினார்கள். பேச்சை நினைவு வைத்துக் கொள்ளும் வயதில்லை. முகமெல்லாம் சிரிப்பு வழிய அம்மா பேசினாள். எதற்கோ அவள் தலையைப் பின்னால் சாய்த்து வாய் விட்டுச் சிரிக்கும் போது, அப்பா கதவருகே வந்தார். நிலைப் படிக்குக் கீழே என் அடிவயிறு பயத்தில் ஒட்டிக் கொண்டது.

அப்பா ஏதும் சொல்லும் முன் கோபால் பாபு வெளியோ போனார்.

பூஜை அறைக்குப் போய்க் கங்கைச் செம்பை எடுத்து வந்தார் அப்பா.

என்ன கேட்டார் என்று அப்போது புரியவில்லை. பிறகு அம்மா சொல்லித் தெரியும். அப்பா அம்மாவிடம் கங்கை ஜலத்தின் மேல் கை வைத்து, தான் புனிதமானவள் என்று நிரூபிக்கச் சொன்னாராம். சத்தியம் செய்யச் சொன்னாராம்.

கங்கைச் செம்பை அவர் கையிலிருந்து வாங்கி வீசி எறிந்தாள் அம்மா அன்று. அவள் உடம்பெல்லாம் நடுங்கியது. அடிவயிற்றிலிருந்து ஓர் அவல ஓசையை எழுப்பியவாறே எச்சிலைக் காறி உமிழ்ந்தாள் அவர் முகத்தில். அவள் முகம் சிவந்து கண்கள் நெருப்பைக் கக்கிக் கொண்டிருந்தன.

ஒரு கணம் பின் வாங்கிப் பின் தடித்தடியாய் விரல்கள் உள்ள கையை ஓங்கி அம்மாவின் முகத்தில் அடித்தார் அப்பா. அம்மா தடுத்துக் கொள்ளாமல் அப்படியே நின்றாள். மீண்டும் இருமுறைகள் முகத்திலேயே அடித்துப் பின் அம்மாவை அப்படியே தூக்கிச் சென்றார் தம் அறைக்கு.

அதன் பின் அம்மாவில் குரலில் ஓர் உலோகத் தன்மை வந்து விட்டது போல் தோன்றியது. அவள் குரல் ஏற்றத் தாழ்வின்றி, இரும்புத் துண்டு தலையில் "லொட்" டென்று விழுவது போல் உயிரற்று ஒலித்தது. அதன் பின் ப்ரமரா பிறந்தாள்.

இன்னொரு நிகழ்ச்சியும் மறக்கவில்லை. காலேஜ் போக ஆரம்பித்தாகி விட்டது நான். அப்பா இன்னும் கடை திறக்கவில்லை. வேலையில் இருந்தார். வீட்டின் பின் பக்கம் பெரிய தோட்டம். தென்னை, வாழை, கொய்யா, மா மரம் என்று நீண்டு கொண்டே போகும். தோட்டத்தின் மூலையில் ஒரு ஷெட், பெட்டிகள் எல்லாம் போட்டு வைத்திருந்த ஷெட்.

இரவு பதினொரு மணி அளவில் அம்மா ஒரு நாள் எழுந்தாள். அலமாரியைத் திறந்து டார்ச்சை வெளியே எடுத்தாள். நான் தூங்குகிறேனா என்று ஒரு முறை பார்த்தாள். அவள் சென்ற பின் நான் மெல்லப் பின் தொடர்ந்தேன். இருட்டில், பின் பக்கம் படிகளில் ஓசைப் படாமல் இறங்கி ஷெட்டை நோக்கி நடந்தாள் அம்மா.

ஷெட்டின் பூட்டைத் திறந்து கொண்டு உள்ளே போனாள். ஓரத்தில் இருந்த கிழிசல் பாயைத் தரையில் விரித்துக் குப்புறப்படுத்தாள். கிளைகள் முறியும் ஓசை போல் விம்மல்கள் எழுந்தன. அவளிடமிருந்து அந்த இரவில் கள்ளிப் பெட்டிகள் நிறைந்த அந்த உக்கிரமான அறையில் அவள் பெருத்த ஓசையுடன் அழுதது மனத்தை என்னவோ செய்தது. அம்மா அழுது பார்த்ததில்லை. அவள் பிடிவாதக்காரி. அப்பாவின் ஆண்மையையும், கணவன் என்ற பெருமிதத்தையும் வெறும் மௌனத்தாலேயே கொன்றவள்.

ப்ரமராவுக்குப் பின் அவள் அப்பாவின் அறைக்குச் செல்லவில்லை. அப்பாவின் குணத்துக்கும், அகந்தைக்கும் ஊரை ஏய்க்கும் நரித் தனத்துக்கும் அவள் அந்த வீட்டுக்குள் இருந்து கொண்டே தண்டனை தந்தாள். ஒரு நபர் என்ற முறையில் கூட அவரை மதிக்காமல் இருந்தாள். அவரை உடைகள் இல்லாமல் நிர்வாணமாய்க் காண்பது போல் ஏளனத்துடன் பார்த்தாள். அவளைச் சிறைபடுத்திய அவர்தாம் கைதியைப் போல் தவித்தார். அப்படிப்பட்டவள் அந்தக் கிழிந்த பாயில் எல்லாவற்றையும் இழந்தவள் போல அழுது கொண்டிருந்தாள். அரை மணி நாழிகை அழுதிருப்பாள். அவள் எழுவதற்கு முன் வந்து படுத்துவிட்டேன். திரும்பி வந்த அம்மா புரண்டு புரண்டு படுத்தாள்.

மறுநாள் விடிகாலையில் செய்தி வந்தது, கோபால் பாபு இறந்து விட்டார் என்று, அம்மாவின் முகத்தில் எந்தச் சலனமும் இல்லை.

விடுமுறை முடிய இன்னும் ஒரு வாரம் இருந்தது. வீட்டை விட்டு அதிகம் வெளியே போவதில்லை அம்மா. ஒரு நாள் மாலை, "டெல்லியிலிருந்து கொண்டு உன் கிராமத்தைப் பார்க்காதே, என்னோட வா" என்று அழைத்துப் போனாள். முதலில் டாக்டர் வீட்டுக்கு அழைத்துப் போய் அம்மைத் தடுப்புக்காக அம்மை குத்தினாள் எனக்கு. பின்பு பரந்து கிடந்த எங்கள் நிலங்களைத் தாண்டிச் சென்றோம். முதலில் ஓடுகள் வேய்ந்த அந்தச் சின்ன வீடு வந்தது. காலு சரணின் வீடு.

"காலூ, ஏ காலூ!" என்று அம்மா அழைத்தாள்.

காலு வெளியே வந்தான். காலுவா அது? அவன் முகம் திருஷ்டி பரிகாரம் போலப் பயங்கரமாகச் சோபையற்று இருந்தது.

"என்ன மாஜீ?"

"ஷைலஜா வந்திருக்கிறாள் பார்!" காலு கண்களின் மேல் கை வைத்து என்னைப் பார்த்தான்.

"டெல்லியில் சாப்பாடு எல்லாம் எப்படி ஷைலு?" என்றான். தூக்கி வாரிப் போட்டது. பசி என்ற ஒன்றை அறியாத குற்றவாளியாக அவன் முன் நின்றேன். அவர்கள் சாப்பாட்டுக்காகத் துடிப்பவர்கள். வாழ்க்கையே ஒரு தவிப்புத் தான் அவர்களுக்கு. இந்த ஆத்மார்த்தமான, அடிப்படைத் துடிப்பை நான் உணராத வரையில் படிப்பினால் நான் என்ன அறிய முடியும் என்று ஓர் அவமான உணர்ச்சி தோன்றியது. அம்மா என்னையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"எங்களோடு வா காலூ" என்றாள்.

கதவைப் பூட்டி விட்டு வந்தான் காலு.

"வயல் பக்கமாகப் போகலாம்."

"வேண்டாம் மாஜீ. ஷைலு பயப்படுவாள்".

"பயப்படட்டும்".

இருவரும் என்னுடன் நடந்தனர்.

"ஷைலூ, பேப்பரில் மட்டும் படித்தால் போதாது பார்" என்றாள்.

அந்தி வேளையில், கொலை செய்து போடப்பட்ட உடல் போல், செத்துக் கிடந்தது நிலம், மங்கிய சிவப்பு ஒளியில் நிலத்தின் மேல் வெடிப்புக்கள், அகன்ற தாகம் உள்ள உதடுகள் போலத் தென்பட்டன. நிலத்தின் ஒரு மூலையில்...

"அம்மா... அது என்ன?"

"காலூவின் மாடு" என்றாள் அம்மா, "நேற்று இறந்தது", சிறிது நேரத்துக்குப் பின் சொன்னாள். "சாப்பிட ஒன்றும் இல்லாமல் செத்தது".

நட்சத்திரங்கள் மெல்ல உதிக்கும்வரை அம்மா என்னுடன் நடந்தாள். பத்திரிகைகள் சொல்லாதவற்றைக் கண்டேன். திரும்பக் காலுவை அவன் வீட்டில் விட்டு விட்டு நடந்தோம்.

"அம்மா, காலுவின் மனைவி, குழந்தைகள் எங்கே?"

"யாரும் இப்போ இல்லை".

"ஏன்?"

"அம்மையில் போய்விட்டார்கள்".

அடித்தது போல் இருந்தது பதில்.

பேசாமல் நடந்தோம்.

"மாஜீ, ராமுத் தாத்தா கூப்பிட்டனுப்பினார்" என்று வந்தான். ரபீந்தர்.

ராமுத் தாத்தாவின் சிறு வீட்டில் ஓர் அழுக்கு மெத்தை மேல் அவர் மகள் பத்மா படுத்திருந்தாள். ஈர்க்குச்சி போல் கை கால்கள் பாறாங்கல் போல் பெருத்த வயிறு. அவள் முகம் வெளுத்திருந்தது. அம்மா அவள் அருகில் அமர்ந்து அவள் கையை நீவி விட்ட உடனேயே அவள் ஒரு பயங்கர ஓலத்துடன் துள்ளினாள். நான் என்ன என்று உணரும் முன்பே மெத்தை எல்லாம் ரத்தம் ஊறியது. அழாத உயிரற்ற, சரியாக உருப் பெறாத ஒரு பிண்டம் அவள் கால்களிடையே கிடந்தது. பத்மாவின் வாய் பிளந்து போயிற்று.

ராமுத் தாத்தா அவள் தலைமாட்டருகே அழாமல் உட்கார்ந்திருந்தார். அம்மாவின் முகத்தில் நெருப்பு உக்கிரமாக எரியும் போது ஏற்படும் ஓர் ஊதா நிற ஜ்வாலை பரவியது. அறையைச் சுத்தப்படுத்தினாள். மௌனமாக மற்றப் பெண்களுடன், பின்பு என்னுடன் கிளம்பினாள்.

சாப்பாடு மௌனமாகவே நடைபெற்றது. மொட்டை மாடியில் நானும் அம்மாவும் படுத்தோம். நன்றாகத் தூங்கி விட்டேன். அம்மா எழுந்து கொள்ளும் ஓசை கேட்டது. கறுப்புப் போர்வையால் தன்னைப் போர்த்துக் கொண்டாள்.

"அம்மா..."

"என் பின்னால் வா, வேணுமானால்".

கீழே கூடத்தில் இருந்த அலமாரியைத் திறந்து டார்ச்சை எடுத்தாள். அதை ஏற்றாமல் அப்பாவின் அறையினுள் ஓசைப்படுத்தாமல் போனாள். மெல்ல அவர் தலையணையின் கீழ்க் கையை விட்டு ஒரு பெரிய சாவியை எடுத்தாள்.

பின்பக்கத் கதவை ஓசையின்றித் திறந்தாள். மடமடவென்று ஷெட்டை நோக்கி நடந்தாள். அவளுடன் அத்தனை வேகமாக நடக்க முடியவில்லை.

ஷெட்டை அடைந்ததும் அங்கே தொங்கிய பெரிய பூட்டைச் சாவியால் திறந்தாள். தடாலென்ற ஓசையுடன் ஷெட்டின் கதவு திறந்தது. முன்பிருந்த ஷெட் இல்லை அது. கள்ளிப் பெட்டிகளுக்குப் பதிலாக ஆயிரம் மூட்டைகள் அங்கே கிடந்தன. மூலையில் செருகியிருந்த அரிவாளால் வெறி கொண்டவள் போல் மூட்டைகளை அம்மா கீறிக் கிழித்தாள். அரிசியும் கோதுமையும் வெளியில் கொட்டின.

"குரல் கொடு ஷைலூ" என்றாள், "எல்லாரும் வரட்டும்" நாவடைத்துப் போனேன். தூரத்தே அப்பாவின் உறுமல் கேட்டது. நொடியில் அப்பாவைப் போன்ற மற்றவர்கள் ஓடி வந்தனர். அரிவாளுடன் அம்மா திரும்பி, "எத்தனை நாள் தான் பதுக்குவீர்கள்?" என்றாள்.

என்ன நடக்கும் என்று நான் கற்பனை செய்யும் முன் ராம் ஷர்மாவின் வேலைக்காரன் அம்மாவின் மீது பாய்ந்தான். நிலவொளியில் என்ன நடந்தது என்று புரியவில்லை. "மளக்" கென்று அம்மா சரிந்து விழுந்தாள். கறுப்புப் போர்வை விலகியது. கழுத்திலெல்லாம் ரத்தம். அவள் நீண்ட கூந்தலில் சிவப்புப் பரவியது.

"அம்மா" என்று கூவ நினைத்தேன். ஓசையே கிளம்ப வில்லை. அப்பாவும் மற்றவர்களும் கீழே கிடந்தவளைப் பார்த்தவாறு நின்றனர், கலவரத்துடன்.

அரிசி கொட்டி வழியும் அந்தப் பின்னணியில் மரங்கள் செறிந்த அந்த இடத்தில் அம்மா இறந்து கிடந்தாள். திடீரென்று விழுந்து கிடந்தது பத்மா போல் தோன்றியது. காலு சரணின் மாடு போல் தோன்றியது. இறந்து போன காலு சரணின் மனைவி, குழந்தைகள் போல் தோன்றியது. வெடித்துக் கிடந்த நிலமாக அம்மா மாறுவது போல் தோன்றியது. சுற்றியும், இறக்கைகளை அடக்கிக் கொண்டு, மூக்கைத் தீட்டிக் கொண்டு பிணத்தை நோக்கும் வல்லூறுகள் நின்றனர்.

வானத்தைப் பார்த்தேன். நிஜமாகவே வல்லூறுகளின் மாமிசம் தின்று ஒளிரும் மூக்குகள் பளபளத்தன.

குரல் எழும்பியது. வீறிட்டு அலறியவாறே வீட்டை நோக்கி ஓடினேன்.

****************************************